நூலகம்

தீபாவளி சிறப்பிதழ்

மேற்கு நார்வுட் நூலகம்
இங்கிலாந்து

புத்தகப் பணி ஏடு

நவம்பர் 1969. மலர் 4. இதழ் 3.



தரமான, உறுதியுள்ள, உழைக்கக் கூடிய

மாட்டுத் தொழுவங்கள்

கட்ட

SANKAR IC CEMENT

சங்கர் சிமெண்ட்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சென்னை-2 தொழிற்சாலைகள்: சங்கர் நகர் • சங்கரி.

Criterion ICT 2223 TM

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 3

நவம்பர் 1969

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

வளரும் வாசகர் பேரவை

தலையங்கம்

நூலகப் பணியின் அடிப் படையில் நூலக இயல்
டாக்டர்.
எஸ். ஆர். ரங்கநாதன்

விரைவாகப் படித்தல் ஒரு கலை
பி. ந. வெங்கட்டாச்சாரி

தமிழ்நூல்களில் தலைப்புப் பக்கம்
இரா. முத்துக்குமாரசாமி

தமிழ்வாணன் சந்திப்பு
க. நாராயணன்

ஸ்ரீ. ஸ்ரீ.
மணவை முஸ்தபா

அட்டைப்பட விளக்கம்,
பரிசுக் கடிதம்,
நூலகர்கள் அறிமுகம்
இன்னும் பல

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை–17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by :
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.


விலங்கியல்
நூல்கள்
ZOOLOGY



வளரும் வாசகர் பேரவை

நூலக இயலில் மறுமலர்ச்சி தோன்றி வரும் காலமிது. நூலக இயக்கம் தமிழகத்தைப் பொறுத்தவரை இன்னும் நன்கு வேரூன்றவில்லை. நூலக இயக்கத்தை வளர்க்க—பரப்ப - முனைந்த கர்த்தாக்கள் அரசாங்க அளவில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முனைந்தார்கள். அரசாங்கமும் ஒரு சில அம்சங்களில் அவர்களின் கோரிக்கையை நிறை வேற்றியது. இன்னும் பல அம்சங்களில் அவர்கள் அரசாங்கத்துடன் போராடிக்கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனால் பொது மக்களின் தரப்பிலிருந்து நூலக இயக்கத்தைக் கட்டி வளர்க்கப் போதுமான ஆதரவு கிடையாது. அந்த அளவுக்கு பொதுமக்களிடையே பிரசார இயந்திரம் முடுக்கி விடப்படவில்லை.

எந்தக் கோரிக்கையும் பொது மக்களிடமிருந்து வந்தால்தான் அரசாங்கம் செவி சாய்க்கும் என்ற நிலை இன்று இருந்து வருகிறது. அரசாங்கமோ அறிஞர்கள் பலரின் ஆலோசனையைக் கேட்டு நாடெங்கும் நூலகங்களை நிறுவி விட்டு, அதன் வளர்ச்சிக்குத் துணைபுரியாமல் பராமுகமாய் இருந்து வருகிறது. ஆக மொத்தத்தில் புள்ளி விவரங்களுக்குப் பெருமையுடன் கூறிக் கொள்ளும் அளவில்தான் நூலகங்கள் இருந்து வருகின்றன.

இந்தத் தேக்க நிலையை பயன்படுத்திக் கொண்டு நூலகங்களுக்கு நூற்கள் வாங்கப்படுவதிலும், நூலகங்களுக்கு நூற்களை விற்பனை செய்வதிலும் இருதரப்பிலுமே ஊழல்கள் நிறைந்து, மலிந்து விட்டன. நூலகங்களுக்கு வந்து போகும் வாசகர்கள் தரமான நூற்களைப் பெறுவது குதிரைக் கொம்பாகி வருகிறது. வாசகர்களுக்குத் தேவையான - இன்றியமையாத - நூற்களுக்குப் பதில் தேவையற்ற நூல்கள் நூலகங்களின் அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலை மாறவேண்டும்; மாற்றப்பட வேண்டும். தரமான, அவசியமான நூற்கள் வாசகரின் தேவையறிந்து வாங்கி வைக்கப்பட வேண்டும். வாசகர்களின் உற்சாகத்தில்தான் நூலக இயக்கமே பரவி வளரவேண்டும். இதற்கு வழி என்ன?

''அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்'' என்பார்கள். நூலகங்களைப் பயன்படுத்தும் வாசகர்கள் முனைந்தால் இதைச் சாதிக்க முடியும். யாரோ ஓரிருவர் சொன்னால் முடியுமா? அதற்கு ஒரு சங்கம் – ஒரு அமைப்புத் தேவை. அதுதான் வாசகர் பேரவை.

வாசகர் பேரவை தமிழகத்தில் தோன்றி விட்டது. அதன் முதல் மாநில மாநாடு சென்ற மாதம் சென்னையில் நடந்தேறியது. (மாநாட்டு விவரங்கள் வேறொரு பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.)

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊர் கிளை நூலகத்துடன் தொடர்பு கொண்ட வாசகர் சங்கம், நண்பர்கள் சங்கம், வாசகர் அரங்கு என்று ஒவ்வொரு அமைப்பு இருந்து வருகிறது. இல்லாத இடங்களிலும் தோன்றி வருகிறது. அந்த அமைப்புகளின் மத்திய சங்கம் தான் வாசகர் பேரவை.

வாசகர் பேரவையின் குரல் அரசாங்கத்துக்கும் எட்ட ஆரம்பித்து விட்டது. வாசகர்கள் போதிய ஊக்கமும் உற்சாகமும் காட்டி, வாசகர் சங்கங்கள் இல்லாத ஊர்களில் அதை அமைத்து, வாசகர் பேரவையுடன் இணைக்க வேண்டும். இதற்கு நூலகர்கள் முழு ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். இந்தச் சங்கங்களின் நிகழ்ச்சிகளை அவ்வப்போது வெளியிட்டு ஊக்குவிக்க ''நூலகம்'' எப்போதும் தயாராக இருக்கிறது. வாசகர், நூலகர், ''நூலகம்'' எல்லாருமே இணைந்து செயலாற்றினால் அரசாங்கம் வாசகர் பேரவையின் கோரிக்கைகளுக்குப் பணிந்து தான் ஆக வேண்டும்.

அது மட்டுமல்ல! ''வாசகர் பேரவை'' பலம் பெற்றுத் திகழ்ந்தால்தான் தரமான நூல்கள் வெளிவரும்; புத்தக வியாபாரம் செழிக்கும்; எழுத்தாளர் நிலை உயரும்; நூலக இயக்கம் பரவும்; நூலக இயல் வளரும்; ரசனை பெருகும்; அறிவு அபிவிருத்தியாகும். கல்வியின் தரம் மேம்படும்!

''வளர்க வாசகர் பேரவை!'' என்று வாழ்த்துக் கூறுகிறோம்.



ஆண்:- 'பருவ மங்கையரை வசீகரிப்பது
எப்படி?' என்ற நூல் வேண்டும்.

பெண்:- 'காட்டு மிருகங்களை வேட்டை
யாடுவது எப்படி?' என்ற நூல்
வேண்டும்.

எமது சிறந்த இலக்கியப் பதிப்புகள்

மலிவுப் பதிப்புகள்

சங்க இலக்கியம் (முழுவதும்)	12 00
சொ. முருகப்பா	
ராம காதை	5 00
புலியூர்க் கேசிகன்	
தொல்காப்பியம்	3 50
கலித்தொகை	3 00
குறுந்தொகை	3 50
நற்றிணை	3 50
அகநானூறு (மணிமிடை பவளம்)	3 50
சிலப்பதிகாரம்	3 50
மணிமேகலை	3 50
கலிங்கத்துபரணி	2 50
நளவெண்பா	1 50
கு. மதுரை முதலியார்	
நாலடியார்	1 25
ரெ. முத்துகணேசன்	
முத்தொள்ளாயிரம்	1 50
சோ. அருணாசல தேசிகர்	
நந்திக்கலம்பகம்	3 00
மகாவித்துவான் வேணுகோபால்பிள்ளை	
யாப்பருங்கலக்காரிகை	3 50
பாரதியார்	
குயில்பாட்டு	0 50

பாரி நிலையம்

59, பிராட்வே, : : சென்னை-1.

நூலகப்பணியின் அடிப்படையில் நூலக இயல்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்
தமிழில் : பா. பெருமாள் B. A., B. Lib. Sc.,

நூலகர் சம்பளம்

இந்திய நூலகத் தொழிலின் ஊதிய விபரம்: நூலகர்களின் சம்பளப் பிரச்சினை மிக மிக முக்கியமானது. நல்ல சம்பளம் கொடுத்தால்தான் திறமை மிக்க, சமூகப் பணியில் ஈடுபாடு கொண்ட, பயிற்சி மிக்கவர்கள், நூலகர் வேலையில் சேர முன் வருவார்கள். இப்போதுள்ளவர்களில் சிலர் தொண்டு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடே பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் தொடர்ந்து அவ் வே லை யி ல் இருக்க நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால், நல்ல சம்பளம் கிடைக்கும் இடத்திற்கு (அ) வேறு வேலைக்குச் சென்று விடுவார்கள்.

உதாரணமாக, கல்லூரி நூ கருக்கு கல்லூரி ஆசிரியரின் ச பளமும், அந்தஸ்தும் கொடுக்க பட வேண்டுமென பல்கலைக் கழ பண உதவிக்கமிஷனும், மத்தி அரசு கல்வி இலாகாவும் க டளைகள் பிறப்பித்து, 'கொடுக் லாம்' என்ற வார்த்தையுடன் ப நில அரசுகளுக்கு அனுப்பி ப ஆண்டுகள் ஓடி விட்டன.

1931ல் வெளிவந்த ''நூல இயலின் ஐந்து அடிப்படை கொள்கைகள்'' என்ற நூலி இதுபற்றி விரிவாக விளக்கியு ளேன். அவ்வெண்ணம் 1947 தான் செயல் படுத்தப்பட்ட இந்திய அரசுத் துறையில் ப புரியும் நூலகர்களுக்கு 19 சிபாரிசுகளின் அடிப்படைய

ம்பளம் தந்து ஊக்குவிக்கப்பட்
து.

மத்திய சம்பளக் கமிஷன், பல்
லைக் கழகம், கல்லூரி ஆகியவற்
ல் பணியாற்றிவரும் நூலகர்
ள், ஆசிரியர்களுக்குச் சமமாகப்
ாவிக்கப்பட்டு, நடத்தப்பட
வண்டும். ஆசிரியர்களுக்கு
கொடுக்கும் சம்பளமே நூலகருக்
ும் கொடுக்கப்பட வேண்டும்
ன்று சிபாரிசு செய்தது, கட்
ளை இட்டது.

சம்பளக் கமிஷன் தலைவரும்
செயலாளரும் நூலகப் பணியின்
கிமையை உணர்ந்தும், பயனும்
பற்றிருக்கிறார்கள். அதனால்
ான் இச் சீரிய சிபாரிசைச் செய்
ார்கள். இவர்கள் சென்னைப்
ல்கலைக் கழக நூலகத்தின் நற்
ணியைப் பெற்று மகிழ்ந்தவர்
ள்.

1958ல், டாக்டர் சி. டி. தேஷ்
க் பல்கலைக் கழக பண உதவிக்
மிஷன் தலைவரானார். அவரும்
மலே சொன்ன நூலகர்களுக்கு
தகமான சிபாரிசுகளைச் செய்
ார்.

விந்திய மலைக்கு இப்பாலுள்ள
ாநிலங்களில் மட்டுமே சட்ட
ர்வ முறையில் பொது நூலகப்
ணி நடந்து வருகிறது.

1962ல் ஆந்திரப் பிரதேச
பாது நூலகர்களின் ஊதியப்
ரச்சினையில் பகுதி வெற்றிதான்
டைத்தது. மைசூர் மாநில
பாது நூலகர்களின் சம்பளப்
ரச்சினை, தாராள மனப்பான்
மயுடன் கவனிக்கப்பட்டு, நல்ல
ம்பளமும் கொடுக்கப்படுகிறது.

பம்பாயில் என்ன நடக்கிறது
ன்ற செய்தி சரிவரத் தெரிய
வில்லை. இந்த மூன்று மாநிலங்
களிலும் பொது நூலகத்துறைத்
தலைவர்களாக நூலகப் படிப்பும்,
பயிற்சியும் அனுபவமும் மிக்க
நூலகர்களே பணியாற்றுகிறார்
கள்.

1962 லேயே தமிழ்நாடு பொது நூலகர் சம்பளப் பிரச்சினை பற்றிய முயற்சிகள் தோற்றுவிட்டன. இன்றைய நிலை?............

தமிழ்நாடு பொது நூலகர்களுக்கு, கல்லூரி நூலகர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். அதுவும் அவசர அடிப்படையில், உடனடியாக சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டும்.

உயர்த்தப்பட்ட சம்பள விகிதங்களைப் பெறும் நாளே நன்னாள். அது மகிழ்ச்சியைக் கூட்டும் திருநாள். அந்நாள் எந்நாளோ! அண்மையில் அமையுமா?

ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசு பல லட்ச ரூபாய்களை பொது நூலகங்களுக்குச் செலவு செய்கிறது. இத்தகைய செலவுக்கேற்ற நல்ல பயன் விளைய ஒரே வழி, பொது நூலகங்களுக்கு பயிற்சி பெற்ற நூலகர்களை நியமித்து, நல்ல சம்பளம் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உடனுக்குடன் நல்ல, தக்க முடிவெடுத்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர். அவரின் செயல்களே இதற்குச் சான்று.

கலைஞர் அவர்கள் கல்லூரி, பொது நூலகர்களின் பிரச்சினைகளை தனக்கே உரித்தான அவசர,

ஆக்க பூர்வமான முறையில் அணுகி, காலதாமதமின்றி தீர்த்து, நூலகர்களின் வாழ்வில் ஒளி சேர்க்க வேண்டுமென விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆராய்ச்சிகள் நடத்த கருப்பொருள்கள்

நூலக இயலில் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்த, நூலக இயலின் ஐந்து அடிப்படை விதிகள் பல கருப்பொருள்களை, வாய்ப்புகளைத் தந்துள்ளன.

நூலகத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய உத்திகளைக் கண்டு பிடித்துக் கையாள்வது அவசியம். அப்போது தான் இன்றைய மிக வேகமாக மாறி வரும், வளரும் சமுதாயத்தேவைகளைச் சமாளிக்க முடியும். நல்ல தரமுள்ள நூலகப்பணி கிடைக்கிறது என அனைவரும் அக மகிழ்ந்து, போற்றுவார்கள்.

"லாங்ரேஞ் ரெபரென்ஸ்" பணி எண்ணம் உதயமாயிற்று

மேலை நாடுகளில், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே கூட, லாங் ரேஞ் ரெபரென்ஸ் பணி சரியான முறையில் வளரவில்லை. பெரும்பாலும் தயாராக இருக்கும் தகவல் நூல்கள், தகவல் தரும் வசதிகளிலிருந்தே, வாசகர்களின் திடீர்க் கேள்விகளுக்கு உடனடியாக ஏற்ற செய்திகளை அளித்தார்கள். இதை "ரெடி ரெபரென்ஸ்" பணி எனலாம். மேலை நாடுகளில் தகவல் தரும் சிறப்பு நூலகர்களாகப் பணியாற்றுவோர்கூட 'ரெடி ரெபரென்ஸ்' நூல்களைத் தவிர மற்ற தகவல் நூல்களைப் பற்றிக்கூட விபரமாக அறிந்து கொள்ள ஆர்வம் காட்டாமலிருந்தனர்.

ஏனு பல்கலைகழகம்

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஏனு பல்கலைக்கழக நூலகத்தில் 14 லட்சம் நூல்கள் உள்ளன. மார்ட்டின் லூதரின் கையெழுத்துப் பிரதிகளும் இங்கே உள்ளன.

—இ. ஜெ. இருபது நாட்கள்

1924-25-ல் இங்கிலாந்தில் நூற்றுக் கணக்கான நூலகங்களில் இத்தகைய தகவல் தரும், செய்தி சேகரித்தளிக்கும் சிறப்புப் பணி மிக சொற்ப அளவிலேயே நடந்தன.

பல வாசகர்கள் மிக ஆழ்ந்த சிறப்புச் சேவையை எதிர் பார்த்தனர். அது என்ன? எப்படி? என என் உள்ளுணர்வு கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தது. அப்போது உடனடியாக என்னால் சரியாக ஊகிக்கவும், புரிந்து கொள்ளவும் முடியாமல் போய் விட்டது.

அப்போது, அமெரிக்கக் காங்கிரசு நூலகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு. ஈ. சி. ரிச்சர்ட்சன், லண்டன் மாநகருக்கு விஜயம் செய்தார். நூலகப் பணி பற்றி ஓர் அறிய சொற்பொழிவையும் நிகழ்த்தினார். அச்சொற்பொழிவுக்கு யான் சென்றிருந்தேன்.

"பல்வேறு அறிவுத் துறையைச் சார்ந்த ஒய்வுபெற்ற நிபுணர்கள்,

காங்கிரஸ் நூலகத்தில் பகுதி நேர தொழில் நிபுணர்களாகப் பணியாற்ற அமர்த்தப்பட்டார்கள். வாசகர்கள் ஆழ்ந்த தகவல் பணி வேண்டிக் கேட்கும் போது, இத்தகைய பகுதி நேர நிபுணர்களைத் தொலை பேசி மூலமாக அணுகி, தேவையான தக்க ஆழ்ந்த சேவையை பெற்று, வாசகர்கள் மனம் மகிழும் விதத்தில் கொடுத்து வந்தார்கள், அமெரிக்கக் காங்கிரசு நூலகத்தார்'' என்ற செய்தியை திரு ஈ. சி. ரிச்சர்ட்சன் மகிழ்ச்சியோடு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினர்.

அவர் பேச்சு என் சிந்தையைக் கவர்ந்தது. சிந்தனையைத் தூண்டியது. இப்பணி பற்றி, தெளிவாகச் சிந்தித்தேன். தெளிவு பிறந்தது. கருத்துக்களும் வளர்ந்தன.

1925ல் சென்னை திரும்பினேன். சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தைத் திருத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்டேன். அங்குள்ள நூல்களைப் பகுத்து, பட்டியலிடும் பணியில் ஈடுபட்டேன். நூலடுக்குகளில் நூல்கள் தொடர்பான முறையில் அடுக்கி வைக்கப்பட்டன. பிறகு வாசகர்கள் தாங்களாகவே நூல்களைத்தேர்ந்தெடுத்துக் கொள்ளும் Open Access முறை பயன் படுத்தப்பட்டது. மாணவர்கள்,ஆசிரியர்கள்,பண்டிதர்கள், நிபுணர்கள், மக்கள் தலைவர்கள் ஆகியோருக்குத் தகவல் பணி செய்யும் வாய்ப்புகள் கிடைத்தன. இத்தகைய வாசகர் எவருக்குமே ஆழ்ந்த தகவல் பணியை நூலகப் பணியாளர்களிடமிருந்து கேட்டுப் பெறலாமென்ற எண்ணம் உதிக்கவில்லை. நானே முன்வந்து அவர்களுக்குத் தேவையான ஆழ்ந்த தகவல் பணியை அளித்த போது, அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு பயன் அடைந்தனர். நன்றிப் பெருக்குடன பாராட்டினர். மனிதன் சந்திரனில் இறங்கி, நடந்து, பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி சாகச நிகழ்ச்சியை நடத்திக் காட்டி விட்டான். உலகம் வெகு விரைவாக முன்னேறி வருகிறது.

தமிழகக்கல்லூரி, பொது நூலகங்கள் பெரும்பாலானவற்றில் ''ஓபன் ஆக்சஸ்'' முறை கூட செயலில் இல்லை. தமிழகத்தில் உள்ள இன்றைய நிலை இது. வருந்தத்தக்கசூழ்நிலைதான். மனம் நொந்து கண்ணீர் வடிப்பதைத் தவிர, இதற்கு இன்று மாற்று ஏதுமில்லை. விடிவுமில்லை. விமோசனமும் இல்லை.

நூலகப் பயிற்சியோ, கல்வியோ, அறிவோ, அனுபவமோ முறையாகப் பெருதவர்கள் பல்வேறுதுறைநூலகங்களின்ஆட்சிப் பொறுப்பில் இருக்கிருர்கள். இவர்கள் இந்த 'ஓபன் ஆக்சஸ்' முறையை எதிர்க்கிருர்கள். அவர்களுக்கே உரித்தான பாணியில், சாகசமான மழுப்பல் காரணங்களைக் கூறி நூலகர்களின் சீரிய திட்டங்களை தட்டிக்கழிக்கிருர்கள்—நிராகரிக்கின்றனர். காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

நூலக நிபுணர்கள் தாங்கள்தான் என்று கூறிக்கொண்டு, நூலகர்களில் ஒரு சிலர், நூலகர்களுக்கே இருக்கின்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனியாது, பாதகமான திட்டங்களைச் செயலாற்ற, மோசடி செய்யக் கிளம்பியுள்ளார்கள் என்ற செய்தியைக் கேட்கும் போது மிகுந்தவேதனைப் படுகிறேன். இத்தகைய துரோகிகளை, விபீஷணர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அவர்கள் செயல்கள்

வளர வொட்டாமல் ''முளேயி லேயே கிள்ளி எறிய வேண்டும்''.

தொழில் வளர்ந்தால் நீங்கள் வளருவீர்கள். உங்கள் வாழ்வு வளமாக அதுவே வழி. சங்கம் இல்லேயேல் பங்கம்தான் மிஞ்சும். உணருங்கள். விரைந்து கூடுவீர். உரிமைகளே நிலே நாட்ட ஒடி வாருங்கள்.

ஆணே என்ன?

நூலக இயலின் அடிப்படை ஐந்து விதிகளும் சில ஆணேகளே விதிக்கின்றன.

''நூல்கள் பலவும் பயில் வதற்கே. படிப்போர்க் கேற்ற நூல்கள். நூல்கட் கேற்ற படிப் போர். படிப்போர் நேரம் பேணு. நூலகம்என்றும் ஓங்கிவளர்வதே.

இவ்வைந்து விதிகளும் ஒன்று சேர்ந்து, ஒரே குரலில் 'லாங் ரேஞ் ரெபரென்ஸ்'' பணி செய் யுங்கள் என ஏகோபித்துக் கூறு கின்றன. 15-20 நிமிடங்களில் ஒரு வாசகருக்கு வேண்டிய இப் பணியைச் சாதாரணமாகச் செய்து முடித்து விடலாம். இத் துறையில் பணிபுரியும் நூலகரும், இச்சேவையை நாடி வரும் வாச கரும் நெருங்கிய தொடர்பு கொள்வது அவசியம். தேவைகளே ஒளிவு மறைவு இன்றிக்கூறினு அன்றி, தேவையான நூலக பணிகிடைக்க வழி ஏதுமில்லே.

பல வாசகர்கள் கூச்சப் பட கூடியவர்கள். நூலகரிடமிருந் அடிக்கடி உதவி கோரிப் பெற வதை, தங்கள் தகுதிகளுக் குறைவானதாகச்சிலர்கருதலாம் வாசகர் அனேவரும் நூலக தில் செய்திகளே அறிந்து கொள்ளச் செய்யப்பட்டிருக்கும் வசதிகளே அறிந்திருக்க முடியாது சில ''லாங் ரேஞ் ரெபரென் சர்வீஸ்'' கேள்விகளின் ஒ பகுதியைக் கூட திருப்திகரமாக செய்து முடிக்க, சில நேரங்களி அரைநாள், முழுநாள் என்று கூட ஆகிவிடுவதும் உண்டு.

பல அறிஞர்களின் ஆராய்ச்சி பணிக்கு 7 நாள், 10 நாள் என்று செலவழித்துப்பாடுபட்டு, உதவி நிகழ்ச்சிகளும் உண்டு. இத்தகை நல்லசேவையை பலரும்பாராட்ட யிருக்கிருர்கள். வாசகர்களின் நன்மதிப்பையும், ஆதரவையு சென்னேப் பல்கலேக் கழகம் தன் இடைவிடாத சேவையில் பெ திருந்தது. மேலும் 'லாங் ரே ரெபரென்ஸ்சர்வீஸ்' 'ரெடி ரெ ரென்ஸ் சர்வீஸ்' பணிகளே கவனித்துக் கொள்ள ஐந்து சுறு சுறுப்புமிக்க பட்டதாரிகள் நி

சிறந்த அச்சு வேலேகளுக்கு
உகந்த அச்சகம்

தொடர்பு கொள்ளுங்கள் :

தி யுனேட்டெட் பிரிண்டர்ஸ்,

3/27 பிராட்வே, சென்னே-1.

டெலிபோன் : 21832

க்கப்பட்டார்கள். நூலக ஆட்சியாளர்கள் இதன் மகிமையை உணர்ந்திருந்ததுதான் காரணமாகும்.

பைல்களுடன் போராடிக் கொண்டிருப்பது அவர்கள் வேலையாக அமையவில்லை. நூல் இருப்பு அறைகளிலும், நூல் பட்டியல் பகுதிகளிலும் எந்நேரமும் சுறுசுறுப்பாகப்பணியாற்றி, வாசகர்களின்தேவைகளைப்பூர்த்தி செய்வார்கள். விரைவாகவும், துல்லியமாகவும், கேட்டதையே கொடுத்தும் உதவுவார்கள். மற்றவர்கள் மகிழ, தாங்களும் மகிழ்வார்கள்.

சென்னைப்பல்கலைக்கழகநூலகத் துணையாளர்கள் 18 பேரில் ஐவர் மனிதாபிமானம் மிகுந்த சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

இது போன்ற நல்ல சமுதாய முன்னேற்றங்களால், நூல், கட்டடம் மற்ற ஊழிய செலவுகளை செய்வதுஅவசியம் என சம்பந்தப்பட்ட அனைவரும் உணர்ந்தனர். நூலக இயலின் அடிப்படை ஐந்து விதிகள் இத்தகைய மகத்தான, மக்கள் மகிழத்தக்க சாதனைகளை புரிய உதவின.

'லாங் ரேஞ் ரெபரென்ஸ் சர்வீஸ்' 'ரெடிரெபரென்ஸ் சர்வீஸ்' ஆகியவையே நூலகப் பணியின் தலையாய அம்சங்களாகும். தமிழ்நாடு இத்துறையில் மிக வளர்ந்துள்ளது. முன்னோடியாகவும் விளங்குகிறது. இத்தகைய ஸ்தாபனத்தை, பாரம்பரியத்தை இன்றைய நூலகர்கள் போற்றிப் பாதுகாத்து, மேலும் வளர்ப்பது கடமையாகும்.

நூலகருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி

'லாங் ரேஞ் ரெபரென்ஸ் சர்வீஸ்' பணியால் வாசகர்கள் பயன்பெற்று மகிழ்ந்தால்அதுவே நூலகருக்கு மகிழ்வை ஊட்டும். நூலகத்திற்குச் சென்றால் கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும் என்ற நம்பிக்கையை வாசகர்கள் பெற வேண்டும். வாசகர்களின் நல்ல அபிப்பிராயமே நூலகரின் நற்சான்றிதழாகும். பரிசெனவும் கருதுவார்கள்.

உலக நூலகர்கள் அனைவரும், குறிப்பாகத் தமிழக நூலகர்கள் இத்தகைய நல் இன்பத்தைப் பெற்று, பல வளமும் பெருகி பல்லாண்டு வாழ வேண்டும்.

ஆகவே, 'வெறும் ஏட்டுச்சுரக் காய்க் கல்வி' என்றில்லாமல், ''நூலகப்பணியின் அடிப்படையில் நூலக இயல்' அமைய வேண்டும். **வளர்க நூலகர்களின் ஒற்றுமை.**

முற்றும்

இன்றே ருசியுங்கள்!

வைரம் ஐஸ் க்ரீம்

மணமும் ருசியும் மிக்கது

தயாரிப்பவர்கள்:

முருகன் ஐஸ் கம்பெனி

4/25, இப்ராஹிம்ஜி சாகிப் தெரு, சென்னை-1.

டெலிபோன்: 22565

விரைவாகப் படித்தல் ஒரு கலை

பி. ந. வெங்கட்டாச்சாரி

தேசீய நூலகம், கல்கத்தா

ஏறக்குறைய கால் நூற்றுண்டுகளுக்கு முன்னர், திருசிரபுரத்தில் உள்ள தேசீயக் கல்லூரியின் அந்த நாளைய முதல்வர் (ஏ. ராமய்யர் என்ற பெயருடையார்) 'நூல்களைப் படிப்பது எப்படி' என்ற தலைப்பில் முதலாண்டு மாணவருக்கென சில வகுப்புக்கள் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அத்தகைய வகுப்பில் நூல்களை வாசிக்கும் முறைகளில் சிலவற்றை எடுத்துக் காட்டி எங்ஙனம் ஒரு நூலினை விரைவாகப் படித்துணர முடியும் என்பதை மாணவர்களுக்கு விளக்கினுர். எழுத்தறிவு பெற்ற எவரும் நூல்களை வாசிப்பது எளிது என்று நினைப்பது தவறு என்பதை அவரது பேச்சுக்கள் எடுத்துக் காட்டின. வாசிப்பது ஒரு கலை என்று அவர் காட்டியதை அவரது மாணவர்களில் பலர் மறக்கமாட்டார்கள்.

படிப்பது எளிதல்ல

படிப்பதென்பது திரைப்ப
தைப் பார்ப்பது போன்று
தான காரியமல்ல. நூலினை ப
துணர்வதற்குத் தடையாக இ
பவை: (a) நூலின் கடின ந
(b) நூலின் பொருளைப் பற்
அறிவு இல்லாமை (c) நூ
பொருளைப் பற்றிய அக்க
யின்மை. (d) நூல் பெரி
யிருப்பின், அதனுல் ஏற்ப
மலைப்பு. (e) அச்சுப்பி
சொற்பிழை, அழகற்ற
சடிப்பு ஆகியவற்றினுல் ஏற்
சோர்வு. முதலாவது தடை
ளரின் மொழியறிவினைப் பெ
தது. பண்டிதமணி கதிரே
செட்டியார், மறைமலையடி
ஆகியோரது நூல்களைப் ப
மொழியறிவு அதிகம் தே
படுகிறது. அதே சமயத்தில்
ரஞ்சகப் பத்திரிக்கைகளில்
கட்டுரைகளைப் படிக்க அவ்
மொழியறிவு தேவையி

சிறப்புச் செய்தி

2. 10. 69 மாலை 6 மணி யளவில் மைசூர் நூலகச் சங்கம் சார்பில் காந்தி நூற்றாண்டு விழாக் கூட்டம் ஒன்று நடந்தது. மைசூர் நூலகச் சங்க ஸ்தாபகரும் போஷகருமான திரு டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் 'மகாத்மா காந்தியும் நூலகங்களும்' என்ற அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ண்டாவது தடை நம்மில் பெரும்பாலோருக்குள் இருப்பது. ன நூல், மருத்துவ இயல், ளதிக இயல், பொறி இயல் ய துறைகளில் வெளிவரும் ல்களை அத்துறையினரே த்து உணர முடியும். மற்ற களுக்கு அது புரியாத புதிரா . ஒரு பொருளினைப் பற்றி வதற்கு வேண்டிய ஆசை இல் த மூன்றாவது தடை பலரிடத் நாம் பார்க்கிறோம். ஜோதி தில் நம்பிக்கையில்லாதவரி ஜோதிடப் புத்தகத் க் கொடுத்தால் அவர் அதை த்தும் பார்ப்பதில்லையல்லவா? நூல் பல நூறு பக்கங்கள் ப்பின் அதைப் படிப்பதற்கு விடும் நேரத்தினை எண்ணிச் ர்வுற்று அதைப் படியாமல் க்கிறோம். அது போன்று சமாக அச்சிடப்பட்டு, எழுத் பிழைகள் மலிந்த நூலினைப் கையில் சோர்வு ஏற்படு .

த்தகைய தடைகளைக் கடந்து குப் பிடித்த நூலினை தேர்ந் த்த பின்னர் படிப்பது எப் என்பதையே மேற்கூறிய சிரியர் நேருவின் நூல் ஒன் மூலம் மாணவர்களுக்கு துக் காட்டி விளக்கினர். கீழ்க்கண்ட பாராக்களில் அதனை சுருக்கமாகக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

விரைவான கண்ணோட்டம்

சாதாரணமாக நாம் எதையேனும் படிக்கும்பொழுது படிக்கும் வரியின் மீது நமது கண்கள் பல அதிர்ச்சிகளுடன் (Jerks) நகருகிறது. எங்கு ஒரு சிறுகணம் (pause) நிற்கிறதோ அங்கு நீங்கள் படித்தவைகளை கிரகித்துக் கொள்கிறீர்கள். ஒவ்வொரு சமயமும் நீங்கள் படித்த வரியினை, ஏதாவது விட்டுப் போயிருக்குமானல் அதற்கென மீண்டும் நமது கண் பார்வைக்கு கொண்டு வருகையில் படிப்பின் வேகத்தில் தடையேற்படுகிறது. இதையே ஆங்கிலத்தில் 'regression' என்று கூறுவர். ஒரு வரியின் கடைசியில் நமது கண் பார்வை வருகையில் அடுத்த வரியின் ஆரம்ப எழுத்துக்களை ஒரே வீச்சில் பார்த்து விடுகிறது.

நமது கண் வீச்சில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகச் சொற்களை பார்த்து விடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் விரைவாகப் படிக்க முடியும். சொற்களுக்கிடையே நிகழும் கண் பார்வை நிறுத்தத்தினை (pause) எவ்வளவுக்கெவ்வளவு குறைத்தும், படித்ததையே மீண்டும் பார்க்காமலும் படிக்க முயற்சி செய்தோமானல், விரைவாகப் படித்தல் என்பது முடியக்கூடிய தொன்றாகும்.

சரியான பயிற்சியின் மூலம் கண்ணின் தசைகளை படிக்கும் வேலைக்கு நன்கு பழக்கி வைக்க முடியும். இக்காரணத்தால்தான் சில சமயங்களில் ஒரு எழுத்தினை மற்றொரு எழுத்தாகக் கொண்டு,

ஒரு சொல்லினை வேறொரு சொல்லாகப் புரிந்து கொள்கிறோம். ('துக்கம்' என்பதை 'துச்சம்' என்றும், 'பரம்பு' என்பதை 'பாம்பு' என்றும்கொள்வது) அச்சிட்ட ஒவ்வொரு சொல்லின்மீது கண் பார்வை பதியுமானால், கண்ணுக்கு அதனால் அதிக வேலை ஏற்படுகிறது. வாக்கியத்தின் முக்கியமான சொற்களின் மீது கண் பார்வை சற்றே நன்கு பதிந்து, மற்றவைகளை பார்த்தும்பார்க்காதது போன்று விரைவில் படிக்க முயன்றால் வாக்கியத்தின் உள் அர்த்தத்தினை அறியலாம். இது பழக்கத்தில் கொண்டுவரக் கூடிய செயலாகும். கீழ்க் காணும் வரியினை மிக வேகமாகப்படியுங்கள். தடித்த எழுத்துக்களின் மீது கவனத்தைச் செலுத்தி அதன் மூலம் வாக்கியத்தின் பொருளை நீங்கள் அறிய முடியலாம்.

''நாராயண **பிள்ளைக்கு** வயது **எழுபது** ஆயிற்று. **அவனு**டைய முகத்தில் **காலத்**தின் கோடுகள் **கீறப்**பட்டிருந்தன. **இளமையின்** மேடு கரைந்து போய் புஷ்டியின் சின்னம் தகர்ந்து, **கன்னங்கள்** குழிந்திருக்கின்றன. **ஆனாலும்,** அவனுடைய கைகளுக்கு மட்டும் பழைய **சக்தி** முற்றும் **போய்விட வில்லை.** மண்ணைக் **கொண்டு** அபூர்வ ரூபங்களைச் சிருஷ்டிக்கும் **கலைத்** திறன் **அழிந்து விடவில்லை.** **அது** அவன் கைவிரல்களோடு **பிறந்தது** போலும்! வெறும் **மண்ணை** உருட்டித் திரட்டிக் காய வைத்து **வர்ணந்** தீற்றி விட்டால் அதற்கு ஒரு **கலை**-ஒரு பொலிவு-**ஏற்படும்** மாயத்தை அவனிடம் காணலாம். **பண்ணுருட்டியில்** அவனுடைய **பொம்மைகளுக்குக் கிராக்கி** அதிகம்''. [நாராயண

இந்த மாத வெளியீடு!

நான்?

(மலையாள நாவல்)

பி. கேசவதேவ்

தமிழாக்கம்:

சி. எ. பாலன்

வளரும் பருவத்து வாலிப உணர்ச்சிகளை மையமாகக் கொண்டு தீட்டியுள்ள சுவையான சித்திரம்.

விலை: 2-50

கலைஞன் பதிப்பகம்

81, பாண்டி பஜார்
தியாகராய நகர், சென்னை-17

கலைஞன் பதிப்பகம்

குறைந்த விலையில்
நீடித்த உபயோகம்

மெர்குரி

பென்ஸில்

இந்தியா பூராவிலும்
எல்லா பிரதான
ஸ்டேஷனரி
விற்பனையாளர்களிடம்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள் :
தி மதராஸ் பென்ஸில்
பாக்டரி
சென்னை-1.

பிள்ளை — எழுபது — காலத்தின் கீறல்—இளமை தகர்ந்து கன்னங்கள் குழி—ஆனாலும் சக்தி போய் விடவில்லை — மண்ணால் கலை அழிந்து விடவில்லை. அது விரல்களோடு பிறந்தது—மண்ணை வர்ணத்தால் கலை ஏற்படும்—பண்ணுருட்டியில் பொம்மைகளுக்குக் கிராக்கி] அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் கோவையிலிருந்து (62 சொற்கள் 25 சொற்களால் அறியப்படுகின்றன) பொருளை அறிகிறோம். (கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எழுதிய 'கலைஞன் தியாகம்' என்ற சிறு கதையிலிருந்து எடுத்தது)

'கேம்பிரிட்ஜ்' நகரில் உள்ள படிக்கும் சோதனைச் சாலையில் (Reading clinic) படிக்க வேண்டிய பகுதியினை 16 மி. மி. பிலிமிலிருந்து ஒரு திரையின் மீது படமாகக் காட்டுகின்றனர். ஒவ்வொரு வரியும் ஒரு குறிப்பிட்ட சிறு கால அளவில்' வாசகரின் கண் முன் நிற்கிறது. நிமிடத்திற்கு 180 சொற்களிலிருந்து 470 சொற்கள் வரை வேகமாகத் திரையில் காட்டப்படும் பொழுது, அதை விரைவில் படித்து தேர்ச்சி பெறுகின்றனர். ஒரு சமயத்தில் ஒரு வரி மட்டுமே திரையில் காட்டப்படுவதால், பின்நோக்கிப் படிக்கும் பழக்கத்தை இது தடை செய்கிறது. இது போன்றே சிகாகோ நகரில் 'டிஸ்லெக்ஸியா இன்ஸ்டிட்யூட்' (Dyslexia Institute) என்ற நிறுவனமும் சிறார்களிடத்தில் காணப்படும் படிக்கும் கஷ்டங்களை தவிர்க்கப் பாடுபடுகிறது.

முடிவாக, விரைவாகப் படித்தலென்பது விரைவாகப் படித்து உணருவது என்பதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தினந்தோறும் மேற்கூறியவாறு நம்மைப் பழக்கி வைத்து கொள்வோமானால் விரைவில் பல நூல்களைப் படிக்கும் பொழுது, பல நூல்களைப் படிக்கும் தன்மை நம்மில் வளரும். படிக்கும் பொழுது நமது கவனத்தை ஒரு முகப்படுத்தும் இயல்பைப் பெறுவோம். இதற்கெனத் தமிழக நூலகர்கள் தங்களது நூலகங்களில் 'படிக்கும் நேரம்' என்று நேரம் ஒதுக்கி தாங்களே பயிற்சி செய்து நூலகத்தை நாடி வரும் வாசகர்களையும் இக்கலையில் ஈடுபடுத்துவார்களேயானால், வாசிப்பது ஒரு கடினமான காரிமாகத் தோன்றாது; பல நூல்களைப் படிக்கும் திறனை அவர்களுக்குள் வளர்த்த முடியும்.

★

தமிழ் நூல்களில் தலைப்புப் பக்கம்

இரா. முத்துக்குமாரசாமி



நூல்களை அச்சிடுவது என்பது தனிக்கலையாகும். ஆசிரியர் மூல நூலை மட்டும் எழுதிக்கொடுப்பார். பதிப்பாளர்கள்தாம் அதற்கு முன்னும் பின்னும் சேர்க்க வேண்டிய பகுதிகளைச் சேர்த்து வெளியிட வேண்டும். முகப்புப் பக்கம், (Half-title) தலைப்புப் பக்கம் (Title page) முகவுரை, பதிப்புரை, பாராட்டுரை, உள்ளுறை முதலிய பகுதிகளை முன்னால் சேர்த்து, சொற்குறிப்பு (Index) நூற்றொகை (Bibliography) முதலிய பகுதிகளைப் பின்னாலும் சேர்த்தல் வேண்டும். தமிழ் மொழியில் இன்று வெளியாகும் பல நூல்களில் இவையனைத்துமே இருப்பதில்லை. இவையனைத்தும் எல்லா நூல்களுக்கும் இருக்க வேண்டுமென்பது நியதியில்லை. எனினும் ஒவ்வொரு நூலுக்கும் நூலாசிரியரின் முன்னுரையாவது பதிப்பாளரின் பதிப்புரையாவது கட்டாயம் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நூலும் ஏதாவது ஒரு நோக்கம் பற்றியே எழுதப்படுகின்றது. அந்த நோக்கத்தை நாம் முன்னுரை, பதிப்புரைகளிலிருந்துதான் தெரிந்துகொள்ள முடியும்.

நூலின் அங்கங்களாக மேற்கூறியவை பல இருப்பினும் தமிழ் நூல்களில் தலைப்புப் பக்கம் இதுவரை எவ்வாறு அமைந்திருந்தது. இப்பொழுது எப்படி அமைந்துள்ளது என்பனவற்றைச் சிறிது பார்ப்போம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல

நூலுக்கு முகமாக அமைவது தலைப்புப் பக்கம். கடந்த ஐந் நூறு ஆண்டுகளாகத் தமிழ் நூல்கள் அச்சிடப்பெற்று வருகின்றன. முற்காலத்தில் மேலை நாடுகளில் தமிழ் நூலை அச்சிட்டு வெளிப்படுத்தினர். அத்தகைய தொரு நூலின் தலைப்புப் பக்கம் எவ்வாறு உள்ளது என்று பார்ப்போம்.

'ஞானமந்திர செல்வ பூங்காவனம்.' அதினுடைய முதலாம் வகுப்பிலே பூத்துக் கற்பனைகளுடைய வரிசையின்படியே கிரிஸ்த்தவர்களுக்கொத்த புண்ணியங்களிலே வத்திக்கத்தக்கதாக செய்யவேண்டின 48 சிவங்கள் அடங்கியிருக்குது. கிறிஸ்த்துப் பிறந்து 1749 வருஷமாகிற போது சாசோனிலே யிருக்கும் ஆலே எங்கிற பட்டணத்திலே இது அச்சிலே பதிப்பிக்கப் பட்டது!

இந்நூல் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காக எழுதப் பெற்றது. ஏசுபெருமானின பத்துக் கட்டளைகளை விவரிப்பது. இதன்கண் 48 பகுதிகள் (சிவங்கள்) உள்ளன. இந்நூல் முழுவதும் மர எழுத்துக்களால் அச்சிடப் பெற்றுள்ளது. இப்பொழுது ஹாலண்ட் என வழங்கப்பெறும் ஆலே என்கிற பட்டணத்தில் இது அச்சாகியுள்ளது. இத் தலைப்புப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி நூலின் தலைப்பு. அதாவது 'ஞான மந்திர செல்வப் பூங்காவனம்' என்பது. அடுத்தது துணைத் தலைப்பு. நூலில் அடங்கியுள்ள பொருளை விளக்குவது. மூன்றாவது அச்சான ஆண்டு. நான்காவது அச்சிடப் பெற்ற இடம்.

பிற்காலத்திலெழுந்த நூல்களிலும் இப்பகுதிகள் சற்றுக் கூடியும் குறைந்துமிருப்பதைக் காணலாம்.

இவற்றைப் பகுதி பகுதியாக ஆராயுமுன் மற்றும் ஒரு நூலின் தலைப்புப் பக்கத்திலுள்ள செய்திகள் அனைத்தையும் ஒரு சேரக் காண்போம். இதில் எடுத்தவுடன் நூல் தலைப்பு இல்லை. நூல் தலைப்பும் ஆசிரியர் பெயரும் தனித்தனியாக அச்சிடப் பெறவில்லை. தலைப்புப் பக்கத்தைப் பார்த்தவுடன் இது என்ன நூல் என்று புரிந்து கொள்வது கூடக் கடினம். தலைப்புப் பக்கத்திலுள்ளவை அப்படியே கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

''தமிழ்ச் சங்கத்திற் றமிழ் கற்கப் புகுமவர்கள் சொல்லும் பொருளுமெளிதினுணர்தற் பொருட்டந் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பல தேசிகன் கொடுந்தமிழ் நடையொடுஞ் செந்தமிழ் நடை விராயேனைய காண்டப் பொருளுந் தொகையுறச் செய்த விராமாயணத்துத் துத்தரகாண்டக் கதை தொண்டை மண்டலத்தின் கண் விளங்கிய சென்னப்பட்டணத்துத் தமிழ்ச் சங்கத் தச்செழுத்தாற் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் இராமாயண உத்தர காண்ட உரைநடையாகும். 1815 இல் அச்சிடப் பெற்றது. நூலின் தலைப்பு நடுவில் உள்ளது. ஆசிரியர் திருச்சிற்றம்பலதேசிகனின் பெயர் முதலில் உள்ளது. இறுதியில் அச்சிடப் பெற்ற இடமும் கொடுக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் நூல் எதற்காக எழுதப்பட்டது என்பதன் நோக்கமும், நூல் எழுதப்பட்ட விதமும் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ச் சங்கத்தில் தமிழ் பயிலும் மாணவர்கள் எளிதாக இரா

மாயணத்தின் உத்தரகாண்டப் பகுதியைத் தெரிந்துகொள்வதற்காக அச்சங்கத்தில் தலைமைப் புலவராக வீற்றிருந்த திருச்சிற்றம்பல தேசிகன் என்பார் கொடுந்தமிழ் நடையோடு செந்தமிழ் நடையும் கலந்து நூலை இயற்றியுள்ளார்.

இனி இவ்வாசிரியரே இயற்றிய மற்ருெரு நூலான 'இலக்கணச் சுருக்கம்' என்னும் நூலில் அந்நூலெழுந்த நோக்கத்தைப் பற்றி அதன் தலைப்புப் பக்கத்தில் விளக்கியுள்ளார்.

சகல கலைகளையும் மோதியவற்றுட்டமிழையே யினிதாகக் கண்டிலக்கிய விலக்கணங்களை நன்ருய்க் கற்ருராய்ந்துணர்ந்து உலகத்துளவாகிய கொடுந்தமிழ் நாடுஞ் செந்தமிழ் நாடாக இலக்கணங் கற்கப் புகுவார்கள் பொருட்டுத் திருச்சிற்றம்பல-தேசிகனுற் செய்யப்பட்ட இந்நூலெழுதப்படுமாகிற் பிழையுறுமென்றெண்ணி யறிவாற் றமிழ வாருதி முகந்து தாரணியிற் கல்வி யமிழ்து பொழி யெல்லீசனுல் எஞ்ஞான்றும் நிலைபெற...அச்செழுத்தாற் பதிப்பிக்கப் பட்டது.

1813 இல் இந்நூல் அச்சாகியுள்ளது. இதில் ஆசிரியரின் கல்வித் திறன் வெளியாகியுள்ளது. சகல கலைகளைக் கற்ற அவர் அவற்றுள் தமிழையே இனிதாகக் கண்டுள்ளார். அதன் இலக்கிய இலக்கணங்களை நன்ருகக் கற்று, ஆராய்ந்து அதன்பின் அதன் உண்மையைப் பொருளும் உணர்ந்துள்ளார். இலக்கணத்தை நழுவவிடாது பயின்று வந்த செந்தமிழ் வழங்கிய பகுதிகள் நீங்க, இலக்கண அறிவில் வழுவிவிட்ட கொடுந்தமிழ் வழங்கிய பகுதிகளும் செந்தமிழ் பயிலும் பகுதிகளாக மாற வேண்டுமென்று நூலாசிரியர் விரும்பியுள்ளார். எனவே இலக்கணம் பயிலும் மாணவர்கட்காக இந்நூலை இயற்றியுள்ளார்.

நூலையாத்த ஆசிரியர் இது கையால் படியெடுக்கப்பெற்று படிக்கப்படுமேயானுல் பிழைகள் மலிந்துவிடும்; இலக்கண நூலிலேயே பிழை புகக்கூடாது என்று எண்ணியதால் இதை அச்சிலே பதிப்பித்துள்ளார். இத்தனை செய்திகளையும் அவர் தலைப்புப் பக்கத்திலேயே விளக்கி விட்டார்.

தலைப்புப் பக்கத்தின் ஒவ்வொரு பகுதியாக இனிப் பார்ப்போம். நூல் தலைப்பு ஒன்றேயாக அமையாது மாற்றுத் தலைப்புடனும் அமைந்துள்ளது. மறைத்திரு மறைமலையடிகள் இயற்றிய நூலுக்கு 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்ற பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது. இந்த நூற்ருண்டின் முற்பகுதியில் எழுந்த நூற்றுக் கணக்கான தமிழ்ப் புதினங்கள் இவ்வாறு இரட்டைத் தலைப்புக்கள் உடையனவே. இதன் மூலம் க்தைப் போக்கைத் தலைப்பிலேயே விளக்க முயன்றிருக்கின்றனர் என்று கூறலாம். 'நங்கை மடவண்ணம் அல்லது மந்திர ஜால மகா விசித்திரம்' 'இந்திராபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன்' 'சுவர்ணும்பாள் அல்லது பெருவிரல் மர்மம்' என்ற தலைப்புக்கள் அவற்றுள் சில. இவ்வாறு இரட்டைத் தலைப்பு கொடுக்கும் முறை பின்னுல் மாறிவிட்டது.

தலைப்புக்குத் துணைத்தலைப்பாக அந்நூலைப் பற்றிச் சுருக்கமாகக்

கூறும் முறையும் கையாளப்பட்டுள்ளது. இரேணியஸ் பாதிரியார் உலகப் பூகோள வரலாற்றைத் தமிழில் 1832ல் எழுதியுள்ளார். அதில் 'பூமி சாஸ்திரம்; இந்தப் பூமியுடைய தன்மையையும் அதிலுள்ள கண்டங்களையுஞ் சமுத்திரங்களையும் அவற்றிலுள்ள தேசங்களையுந் தீவுகளையும் அவைகளிலுள்ள ஆளுகைவகை முதலானவைகளையும் அந்தத் தேசத்தாருடைய சரித்திரங்களையும் விவரித்துக் காட்டியது' என்று நூலில் கூறப் பட்டுள்ள செய்தியைப் பற்றிச் சுருக்கமாகக் கூறியுள்ளார். மேலும் 'தமிழருக்கு அறிவுண்டாகும்படி செய்யப்பட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார். அறிவுண்டாகும்படி என்பது அத்துறையில் அறிவு பெருகியுண்டாகும்படி என்பதாகும்.

ஆசிரியரின் பெயர் கூறப்படும் பகுதியில் அவர் இன்னுர் மாணுக்கர், இன்னுர் உறவினர், இன்ன குலத்தைச் சார்ந்தவர், இன்ன பதவியில் இருந்தவர் அல்லது இருப்பவர் என்பன போன்ற குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தி. க. சுப்பராய செட்டியார் என்பவர் சிலம்பின் புகார்க் காண்டத்தை மட்டும் அடியார்க்கு நல்லார் உரையோடு 1880ல் பதித்துள்ளார். அத்துடன் அடியார்க்கு நல்லார் உரை கிடைக்காத பகுதியான 'கானல் வரி'க்கு அவர் தாமே உரையெழுதியுள்ளார். அப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் 'திரிசிரபுரம் ஸ்ரீ மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணுக்கர்' என்று மாணவர் உறவுமுறை கூறப்பட்டுள்ளது. அதன் பின்னரே டாக்டர் உ.வே. சாமிநாதையர்வெளியிட்ட சிலப்பதிகாரம் முழுவதுமாக வெளிவந்தது.

வேங்கடாசல ஆசாரியார் இயற்றிய அரிச்சந்திர மகாராஜா கீர்த்தநம் என்ற நூலின் தலைப்புப் பக்கத்தில் ஆசிரியர் 'பஞ்சமுகோத்பவ தேவப்ராம்மண சந்ததி'யில் தோன்றியவர் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆசிரியரின் குலம் குறிப்பிடப்பெற்றது போல அவர்தம் உறவு முறைகளும் சில நூல்களில் விளக்கப் பட்டுள்ளன. அத்துடன் நில்லாது அந்நூலை யியற்றவேண்டுமென்று யார் வேண்டிக் கொண்டாரோ அவர் உறவு முறைகளும் காணப்படுகின்றன.

தருமலிங்கக் கவிராயர் இயற்றிய சாரங்கதார விலாசம் என்ற நூலின் தலைப்புப் பக்கத்தில் ''வேலை நகரில் வணிகர்குல திலகராயிருந்த முத்துச் செட்டியார் புத்திரர்களாகிய தாண்டவராய செட்டியாருக்கு இளையோரும் கோவிந்த செட்டியாருக்கு மூத்தோருமாகிய சுப்பராய செட்டியார் கேட்டுக் கொண்டபடி'' அந்நூல் இயற்றப்பெற்றதாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரின் பதவியும் பல நூல்களில் காணப்படுகிறது. 'கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைக் கோட்டை முன்சீபாயிருந்து இப்போது கௌரன்மெண்டு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிற சைதாபுரம் காசி விசுவநாத முதலியார்' ஆக்கியது என்று தாசில்தார் நாடக நூல் ஆசிரியர் வகித்த பதவியைக் கூறுகின்றது.

நூலை அச்சிடப் பண உதவி செய்தவர்களைப் பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை. 'இரங்கூனி

விருக்கும் சில தமிழ்ப் பிரபுக் களது காருண்ய திரவியோபகார சகாயத்தினுல்' தாம் சூளாமணியைப் பதிப்பித்ததாக சி. வை. தாமோதரம்பிள்ளை அப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'சேந்தன் றிவாகர'த்தை 1839 ல் பதிப்பித்த தாண்டவராய முதலியார் தாம் பதிப்பித்த முறையையே தலைப்புப் பக்கத்தில் விளக்கியுள்ளார். 'புத்தகங் கடோறுமொன்றற்கொன் றுெவ்வாது வழுஉக்களாற் பொதிவுற்றுக் கிடந்தமையாலவ் வழுஉக்களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும் வேண்டுமிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறியிட்டுச் சேர்த்தும் பெயர் பிரித்தும்' தாம் பதிப்பித்துள்ளதாக அவர் கூறுகின்றுர்.

நூலை இயற்றிய ஆசிரியர் அதைத் தாம் விரும்புபவருக்குச் சமர்ப்பணம் செய்யும் வழக்கம் என்றும் உண்டு. ஏ. ஆர். சீநிவாச முதலியார் தாம் எழுதிய ரோமியோ ஜுலியத் என்னும் நாடக நூலை இன்னுருக்குச் சமர்ப்பணம் செய்கிறேன் என்று அந்நூலின் தலைப்புப் பக்கத்திலேயே கொடுத்துள்ளார். 'மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்க நிரந்தர அக்கிராசனுபதியும் நச்சினுர்க்கினியர் ஞாபகச் சின்ன ஸ்தாபகரும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷாதிகாரிகளுள்ளும் நிர்வாக சபையோருள்ளும் ஒருவருமான தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் ம. கோபால கிருஷ்ணையரவர்களுக்கு அவர்களது தமிழ்த் தொண்டை வியந்து தம் குருவாகப் பாவித்து சமர்ப்பிக்கப்பெற்றது.'

பெரும்பாலான நூல்களில் தமிழ் ஆண்டின் பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. ஆங்கில ஆண்டும் சில நூல்களில் கொடுக்கப் பட்டுள்ளது. சக ஆண்டு சில நூல்களில் காணப்படுகிறது. ஒரு சில மூன்று ஆண்டுகளையுமே குறிப்பிட்டுள்ளன. தாண்டவராய முதலியாரின் சேந்தன் திவாகரப் பதிப்பில் 'இங்கிலீஷ் 1839 சாலிவாகனம் 1762 நிகழ்கின்ற விகாரி ஆண்டு' என்று மூன்று வகை ஆண்டுமுறைகளும் உள்ளன.

இறுதியாக நூலை அச்சிட்ட அச்சகத்தின் பெயரோ அல்லது பதிப்பித்த பதிப்பகத்தாரின் பெயரோ காணப்படுகின்றது. அச்சகத்தின் பெயரைக் குறிப்பிடும்பொழுது அதன் உரிமையாளர்களின் பெயர்களையும் கொடுத்துள்ளனர். திருக்குற்றுலத் தலபுராண 1872ம் ஆண்டுப் பதிப்பு. அம்பலவாணன் கவிராயரவர்கள், கு. சிவராம முதலியாரவர்கள், புதூர் வள்ளிநாயகம் பிள்ளையவர்கள் இவர்களது முத்தமிழாகர அச்சுக் கூடத்தில்' அச்சிடப் பெற்றதாகத் தெரிகிறது.

இன்று அச்சாகும் பெரும்பாலான நூல்களில் நூல் தலைப்பு, ஆசிரியரின் பெயர், பதிப்பகத்தின் பெயர் ஆகிய மூன்று விவரங்களே கொடுக்கப்பெறுகின்றன. சில நூல்களில் முன்னுரையெழுதியவரின் பெயரும் காணப்படுகின்றது. இன்று வெளியாகும் நூல்கள் அழகு காரணமாக மிகச் சுருங்கிய விவரங்களையே கொடுக்கின்றன. முன்பு வெளியான நூல்கள் அழகைப்பற்றி யெண்ணுது என்னென்ன விவரங்கள் கொடுக்கப்பெற வேண்டுமோ அத்தனை விவரங்களையும் தலைப்புப் பக்கத்திலேயே கொடுத்துள்ளன.

○

கிருபானந்தவாரியார்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கவிஞர் கண்ணதாசன்

ஆகியோரின்

நூல்களை

வெளியிடுவோர்

★

தமிழ்ப் பண்ணை

உஸ்மான் ரோடு

தியாகராயநகர் :: சென்னை-17

ஆக்கத்தைத் தேக்க முனைக!

நெல்லை. ந. சொக்கலிங்கம், எம். ஏ.

சமுதாயச் சீர் : எதிர்காலத்தின் வளமைக்கு வகை நல்கும் இக்கால இளைஞர்கள், கலை வழங்கும் கல்லூரிக்களம் வந்தவுடன் அறிவு பெருக்கும் நோக்கமின்றி ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டை அடுக்கி முழக்கும் சங்கநாதங்களாய் மாறிவிடுகின்றனர். கல்லூரிகள் தோறும் நூலகங்கள் உள. அந்நூலகங்களைப் பயன்படுத்தி அறிவுப்பயிர் வளர்க்கும் ஆற்றல் மிக்க மாணவர் எத்துணைப்பேர் என்று கணக்கிட்டால் நம் எண்ணத்தில் இடி வீழ்ந்தது போல் இருக்கும்.

'புனிதமுற்று மக்கள்புது
வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும்
நாட்டில் யாண்டும்'

என்று கனவு காண்குவர் பாவேந்தர். சமுதாயச் சீர் மறுமலர்ச்சி கொண்டதென முழக்கஞ் செய்ய வேண்டுமேல் கல்லூரி நூலகத்தைப் பயன்படுத்துவோர் தொகை சாலப் பெருகுதல் வேண்டும்.

உள்ளத்துயர்வு நாட்டுயர்வு : இன்றுள்ள மாணவரிடையே பரபரப்புமிக்க நிலை பகலவன் கண்ட பனி போலும் வீழவேண்டும்; வெற்று ஆடம்பரப் போக்குத் தாழ வேண்டும். நகரங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தம் கல்லூரியில் நூல்கள் பெற்றுப் பயில்வதற் கென்று வழங்கப்படும் வேண்டுகை அட்டைகளைப் பிறருக்குக் கொடுத்து விடுகின்றனர். இன்னும் சிலர் நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லும் நூல்களைப் பார்த்தால் வெறும் புதினங்களாகவே (Novels) அமைகின்றன. அவையும் துப்பறியும் புதினங்களாய் உள்ளன. அம்மாணவர்கள் இவற்றைக் கொண்டு செல்வதன் வாயிலாக அறிவுப் பெருக்கம் ஏற்படாது! அறிவுச் சுருக்கம் கப்பிய இருள்போல், புனலில் படர்கின்ற பாசிபோல் பரவும் என்பதுறுதி. அறங்கூறுகின்ற அருந்தமிழ்ப் புதினங்களைப் படிக்கிறார்கள் என்றாலும் ஓரளவு அறநெஞ்சம் வளருமென

லாம்; மாறாகத் துப்பறியும் நூல்களைப் படிப்பதனால் மறநெஞ்சம் வளரும்; குறுகிய எண்ணங்கள் நெஞ்சில் படியும். இன்னும் சில்லோர் நூல்களைத் தாம் நிறையப் படிப்பதாக மற்றவர்கள் அறிய வேண்டும் என்று கருதிப் போலி எண்ணத்துடன் பன்னூல்களை எடுத்து அடுக்கி வருவர். இதனால் யாருக்கு நன்மை? என்றாவது ஒரு நாள் போலிப்புனைவு சாயம் வெளுத்தாற் போல் வெளுத்து விடுதல் உறுதி. இன்னும் சிலர் இளமை எண்ணங்களின் வேகத்தில் எதிர்கால வளத்தை மறந்து விட்டுச் சில தகாத புத்தகங்களை மலிவு விலையில் உள்ளவை என்றெண்ணி விலைகொடுத்து வாங்கிப் படிக்கின்றனர். இவ்வகையின எல்லாம் மலிவு விலையில் மாணவரின் எண்ணங்களையும் உணர்வுகளையும் கெடுக்கின்றன. மனத்தைப் பண்படுத்துவதற்கு மாறாகப் புண்படுத்துகின்றன இவை. கண் கெட்ட பின்னர்க் கதிரவன் வணக்கம் செய்வதனால் பயன் என்ன? சிற்றின்ப வெறியூட்டும் இச்சிறு நூல்கள் கற்கின்ற இளையர் உள்ளத்துக் கள்ளவுணர்வை வளர்த்து விடுகின்றன. நல்ல நோக்கையும் போக்கையும் ஏற்க வேண்டிய இள நெஞ்சங்கள் இருள் படர்ந்த இழிந்த ஏடுகளை ஏற்பது தகுமோ? அறிவு வழிந்த ஏடுகளைக் கற்றால் அறிவு பெருகும் தொட்டணைத்தூறும் மணற் கேணி போன்று. அறிவுச் சுருக்கத்தை அவாவி அழைக்கின்ற போக்கு அகல வேண்டும். அறிவுப் பெருக்கமே ஆக்கத்திற்குரிய பெரிய வழியாகும். நம் உள்ள வளர்ச்சியின் உயர்வுக்கேற்ப நாட்டு வளர்ச்சியும் உயரும்.

யார் நம் முன்னோடி? : கல்லூரி மாணவ உள்ளம் இரச மட்டத்துள்ளே நிற்கும் பாதரசம் போன்றதாகும். மாணவ உள்ளத்தில் தாழ்வு ஏற்பட்டால் மனித மன்பதையிலும் தாழ்வு ஏற்படும். இதனை இளைய உள்ளங்கள் தெளியவுணர்ந்தால் அரிய சாதனையை அடைதல் உறுதி. மாணவர்கள் எழுத்து வேந்தர்களைத் தமக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளக்கூடாது. உழைப்பால் உயர்ந்த நல்லவர்களையும் வல்லவர்களையும் முன்னோடியாகக் கொள்ள வேண்டும்; அன்னோர் நூல்களை அயராது நாடோறும் முயன்று கற்றுணர வேண்டும். இருக்கின்ற நூலகத்தையே நாம் பயன்படுத்தாத போது,

> 'உலகியலின் அடங்கலுக்கும்
> துறைதோறும் நூற்கள்
>
> ஒருத்தர்தயை இல்லாமல்
> ஊரறியும் தமிழில்
>
> சலசலென எவ்விடத்தும்
> பாய்ச்சிவிட வேண்டும்'

என்பது கனவாய்க் கானல் நீராய்த்தான் போகும்.

மடிமை நீங்கும்; மாண்பு ஓங்கும்: சிற்றூர்க்கண் கூடப் பல கல்லூரிகள் இன்று அமைந்துவிட்டன. அவண் பயிலும் மாணவர்களோ நூலகப் பக்கத்திற்கே வருவதில்லை. நூலகத்தைத் தீண்டத் தகாத ஒன்றாகவே வெறுத்து ஒறுக்கின்ற இழிநிலை இம்மாணவரிடையே தொற்றுநோய் போல் பரவியுள்ளது. 'கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருகெடுக்க வேண்டும்' என்றால் எப்படிப் பெருக்கெடுக்கும்? நாளடைவில் அன்னோர் தம் அறிவு வற்றி வரண்ட பாலைநிலம் போல் ஆய் விடும் என்னலாம். தொடுமணற் கேணியனைய அறிவை இக்காலக் கல்லூரி மாணவர் பாழ்ங்கிணறாக

மாற்றுகின்றனரே! நாட்டுப் புறங்களில் பயிலும் கல்லூரி மாணவர் வம்புப் பேச்சுக்களையே வளர்க்கின்றனர் நாளும்; இதனுல் பயன் என்? நாளை நினைந்து, நல்ல அடிப்படை அமைத்து ஆக்க அறிவைத் தேக்க வேண்டிய இளம்பருவத்தில் பொழுதை வீணுய்க் கழித்து விடுகின்றனர். வகுப்பறையில் விரிவுரையாளர்கள் தெரிவிக்கும் விளக்க நூல்களையேனும் (Reference Books) நூலகம் சென்று புரட்டுகிருர்களா என்று கணக்கிட்டால் ஓரிருவரே தேர்வர். புற எண்ணங்களின் வளர்ச்சியினுல் நாட்டுக்குப் பயனில்லை; அகவெண்ணங்களின் ஆழத்தில் அறிவு ஒளி காண வேண்டும். நல்ல கட்டுரை ஏடுகளைக் கற்ருல் நல்லறிவு மிகும். நற்சிந்தனை வல்லுநர்தம் அறிவாராய்ச்சிக் கருத்துக்களை அடி மனத்தில் பதித்தால் மடிமை நீங்கும்; மாண்பு ஓங்கும்.

கனியும் காயும்: நம்முடைய கல்வி முறை வெறும் மனப்பாட முறைதான். 'நெற் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே!' என்ருற் போல அமைந்துள்ள கல்வி முறையில் நம் நூலறிவையேனும் வளர்த்துக் கொள்ள வேண்டாவா? பொன், வெள்ளி இவற்றைவிட உயர்ந்த செல்வம் மாணவச் செல்வங்கள். 'இளைஞர்களின் உள்ளம் கெட்டால் அவர்கள் வாழும்காலத்தில் சமுதாயத்தில் நேர்மையும் பண்பாடும் மங்கி விடும். இளைஞர்களின் உடல் கெட்டால், அவர்கள் வாழும் காலத்தில் சமுதாயத்தில் உழைப்பும் ஊக்கமும் குன்றி விடும். இதை உணர்ந்தால்தான், இந்த முயற்சியின் சிறப்பு விளங்கும்' என்பர் பண்டாரகர், திரு. மு. வரதராசனுர், ('கல்வி' பக்: 178). எனவே, வருங்கால மன்பதையின் வளமான வாழ்வை எண்ணி இந்த நற்பணியை இளைஞர் பட்டாளம் இன்னே செய்தல் வேண்டும்.

'கற்கின்ற இருபாலீர்
தமிழ்நாட்டின் கண்ணுெப்பீர்
கனியி ருக்க
நிற்கின்ற நெடுமரத்தில்
காய்கவர நினையாதீர்!'

இளைய உள்ளங்களே! அறிவுப் பெருக்கத்திற்கு வழி காண்க; ஆக்கத்தைத் தேக்க முனைக. எதிர்காலப் பழிக்கு இன்றே வித்திடாதீர்! நன்கு நினைக.

'ஜெர்மன் நூலக'த்தில் தமிழ் நூல்

'ஜெர்மன் நூலகத்'தில் இந்திய நாட்டின் எல்லா மொழிப் புத்தகங்களும் கொஞ்சம் கொஞ்சம் உள்ளன. அரை மணி நேரம் துருவித்துருவி ஆராய்ந்து ஒரு தமிழ்ப் புத்தகத்தைத் தேடி எடுத்தேன். கடல் கடந்து சென்று, அருமையாகப் பாதுகாக்கப்பட்ட நூலகத்தில் இதர மொழிகளுடன் சரியாசனத்தில் வீற்றிருந்த அப்புத்தகம் எது தெரியுமா? ரஷ்யாவில் வெளியிட்ட தமிழ் கற்க உதவும் அரிச்சுவடிப் புத்தகம் தான் அது.

—இ. ஜெ. இருபது நாட்கள்

எங்கள் வய்து 55

போதூர் கிராமத்தில் (மேற்குக் கோதாவரி மாவட்டம்) நடுவினிலே ஒருகுளம்; அதைச்சுற்றியும் பற்பல கிராம நிறுவனங்களின் அலுவலகங்கள், கட்டடங்கள் புதிதாகத் தோன்றியுள்ளன.

அழகிய ஊராட்சி அலுவலகம், மகளிர் மன்றக் கட்டடம், ஊராட்சிச் சமிதித் தொடக்கப் பள்ளி, கிராமக்கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவை அனைத்தும் அக்குளத்தைச் சுற்றியுள்ளன.

தவிர, ஒரு மேல் நிலை நீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டு, கிராமத்திற்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அங்கே ஒரு நூலகம் மிகச்சிறப்புடன் கடந்த 55 ஆண்டுகளாகப் பணியாற்றிவருகிறது. அதன் பெயர் ''திரு இராமச்சந்திரா நூலகம்'' என்பதாகும்.

1914 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம்நாள், திரு. இராமச்சந்திரா நூலகம் செயல்படத் தொடங்கியது. அன்றிலிருந்து இந்நாள் வரை, போதூர் மக்களனைவரும், இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரும் ஆர்வங்காட்டிக்கண்ணும் கருத்துமாய்ப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். மேற்குக் கோதாவரி மாவட்டத்திலேயே இன்றளவில் ஒரு சிறந்த நூலகம் உண்டென்றால் அஃது இதுவன்றி வேறென்றிருக்க முடியாது. மறைந்த திரு. போதூர் இராமசந்திரா ராவ் அவர்கள் உவந்தளித்த ஓர் அறையில் தொடக்கப் பெற்ற இந் நூலகம் இன்றுவரை, அரசிடமிருந்து எவ்விதநிதியுதவியும் கோரவேயில்லை. நூலகக் குழு, இந் நூலகத்தைச் சிறந்த முறையில் நிர்வகிக்கிறது.

நூல்களைத் திரட்டுதல்:

இந்நூலகத்தின் தனிச்சிறப்பு அது நூல்களைத் திரட்டக் கையாளும் முறையேயாம். நூலகக் குழு 1950 ஆம் ஆண்டிலெடுத்த முடிவிற்கேற்ப, விழா நாட்களில், குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு வருடைய இல்லந்தோறும் தவறாது சென்று, நூல்களை நன்

கொடையாகப் பெற்று, நூலகத்தில்கொண்டு சேர்க்கின்றனர். இதர நாட்களில், அன்பளிப்பாக அளிக்கப்படும் நூல்களேயும் மன முவந்து ஏற்றுக்கொள்கின்றனர்.

இன்று போதூர் நூலகத்தில் 12,300 நூல்களிருக்கின்றன. அவற்றில் 11,000 நூல்கள் தெலுங்கு மொழியிலுள்ளவை; எஞ்சியவை இந்தி, ஆங்கில நூல்களாகும்.

போதூர் மக்கள் தம் நிலேக்கேற்ப நிதியுதவி அளித்திருப்பது மட்டுமின்றி, நூலகத்திற்கும் அவ்வப்போது சென்று பயனடைகின்றனர். பெரும்பான்மையோர் இலவசப்படிப்பகத்திற்குச்சென்று நாளிதழ்கள், நூல்களேப் படிக்கின்றனர். இங்கு எவ்வித சந்தாவும் வசூலிக்கப் படுவதில்லே. நூலகத்திற்கென 34 செய்தித்தாட்கள், இதழ்கள் ஆகியவை நாள்தோறும் தருவிக்கப்படுகின்றன.

திங்கள்தோறும் சந்தாச் செலுத்தி உறுப்பினராயிருப்போர், நூல்களே வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். 1930ஆம் ஆண்டில் பத்துப்பேர்களே உறுப்பினர்களாக இருந்தனர். இது 1964 ஆம் ஆண்டில் 57க்கு உயர்ந்தது. 1951ஆம் ஆண்டில் 472 நூல்களும்1963இல் 1,063 நூல்களும், 1965இல் 1165 நூல்களும் படிக்கப்பட்டுள்ளன. 1950ஆம் ஆண்டில், இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நூல்கள்3913 மட்டுமே. ஆனல் 1965 இல் எடுத்துச் செல்லப்பட்ட நூல்களோ 9,778 ஆகும்.

அறிவைப் பரப்பும் அரும்பணி:

விஞ்ஞான அறிவைக் கிராம மக்களிடையே பரப்புவதற்கு நூலகம் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்கிறது. விஞ்ஞானத் துறையில் சிறப்புற்று விளங்குவோரை நூலகம் அழைத்துச் சொற்பொழிவாற்றச்செய்கிறது. தவிர மதத் தொடர்பான சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன.

நூலகத்தின் நிதி நிலே ஆண்டுதோறும் சீரிய முறையில் பெருகி வந்துள்ளது. 1919ஆம் ஆண்டில் இந்நூலகத்தின் நிதி ரூ. 184 மட்டுமே. இது 1932 ஆம் ஆண்டில் ரூ. 1147க்கும், 1950 இல்

நூலகத்தில் காந்திஜி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு திரு. எஸ். சங்கரன் சென்றிருந்த போது ஒரு தொழிற்சாலே டைரக்டருக்கு மகாத்மாவின் சிலே யொன்றைப் பரிசாக வழங்கினர். அதைப் பெற்றுக்கொண்ட அந்த அதிபர் "மகாத்மாவின் நூல்களே நான் படித்திருக்கிறேன். உலகின் ஒப்பற்ற மகான் அவர். நான் பெரிதும் போற்றும் என்னுடைய நூலகத்தில் இச்சிலேயை வைத்து, என்றும் அவர் காட்டிய அன்பு நெறியைப் போற்றுவேன்" என்ருர். இதைப்பற்றி சங்கரன் எழுதுகிருர்: "மகான்களுடைய சிலேயை வீதிகளில் நிற்க வைத்து வேடிக்கைப் பொருளாக்குகிருர்களே; உரிய இடத்தை அந்த அதிபர் எவ்வளவு அழகாகக் கூறிவிட்டார்!"

—இ. ஜெ. இருபது நாட்கள்

நூலகம் ஒரு ஆலயம்

காந்தி, நேரு, தாகூர், பிரேம் சந்த், முல்க்ராஜ் ஆனந்த், ஆர். கே. நாராயணன் ஆகியோரின் நூல்கள் ஜெர்மன் மொழியில் வெளி வந்துள்ளன. நூலகங்களை மக்கள் ஆலயங்களைப் போல் போற்றுகிறார்கள். பாரதியார் கவிதைகளைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்றுள்ள பெண்மணி ஒருவரும் இங்கு இருக்கிறார்.

—இ. ஜெ. இருபது நாட்கள்

ரூ 4,473க்கும் உயர்ந்து, 1961 ஆம் ஆண்டில் ரூ. 6000ஐஎட்டிப் பிடித்து, இன்றளவில் ரூ. 10,000 ஆகியுள்ளது. இது நூலகத்தின் நிலையான வளர்ச்சியைத் தெளிவாகக்காட்டுகிறது. இந் நிதியை நூலகம் செலவிடுவதில்லை. இதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டே நூலகம் நிர்வகிக்கப் படுகிறது.

நிதி திரட்டும் முறை :

போதூர் நூலகத்தினர் நிதி திரட்டும் முறைகளில் ஒன்று மிக விந்தையானது.

திருமணத்தம்பதிகள் இருவரிடமிருந்தும் ''சுபகட்டணம்'' என்ற ஒரு நன்கொடையை நூலகம்வசூலிக்கிறது. இந்தச் ''சுபகட்டணத்தினல்'' ஆண்டொன்றிற்கு ரூ 300வரை வருவாய் கிடைக்கிறது.

35 ஆண்டுகளாக ஒரே இடத்தில் இயங்கிய இந் நூலகத்தின் கட்டடம் பழுதுற்று, பழையதாத் விட்டதனல், ஒருபுதிய கட்டடமி தேவை யெழுந்தது. அந் நிலையிலும் அஃது அரசின் உதவியை நாடவில்லை. நூலகக்குழுவினர், அன்பளிப்புக்கோரிவேண்டுகோள் விடுத்தனர். கொடை உள்ளம் பெற்ற 10 பெரியோர்கள் ஒவ்வொருவரும் ரூ 1,116வும் ஐவர் தலைக்கு ரூ 50௦வும் நன்கொடையளித்தனர். தவிர இதர நன்கொடைகளையும் சேர்த்து ரூ15,000 மதிப்பீட்டில்ஒருகட்டடம் எழுப்பப்பட்டது. அதில் தான், இன்று போதூர் நூலகம் சிறப்புடன் தன் பல்லாண்டுப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

கிராம மக்களின் குன்றா ஆர்வமும், நூலகக்குழுவினரின் அயரா உழைப்புமே, போதூர் நூலகத்தின் மகத்தான வளர்ச்சிக்கு அடித்தளங்களாயின. போதூர் நூலகச் சொத்தின் இன்றைய மதிப்பு ரூ. 56,00 ஆகும். தவிரக் கட்டடத்தின் மதிப்பு ரூ. 24,000; நூல்களின் மதிப்பு ரூ. 15,000.

முதியோர்களின் அருஞ்சேவை:

திரு. ருத்ராஜராவ் நரசிம்மலு அவர்களுக்கு 1930ஆம் ஆண்டிலிருந்து, இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரும்பங்குண்டு. தவிர திரு. நரசிம்ம ராஜு அவர்களுக்கு வயது 70 ஆயிற்றெனினும், நாள் தோறும் நூலகத்திற்கு வந்து தம் பணியைத் தவறாது செய்து வருகிறார். நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்திற்கும் இவர்தாம் கட்டமைத்தவர் (பைண்டிங்); இன்றுங்கூட அவர் நூல்களுக்குக் கட்டமைக்கத் தவறுவதில்லை.

—நன்றி: சீரணி (கிராமநலம்)

தகவல்: ஸ்ரீனிவாஸ்

நூலகர்—பொதுமக்கள் தொடர்பு

ஆசிரியர் அவர்களுக்கு

பொது மக்களின் ஆதரவற்ற நூலகங்கள் வாசனையற்ற பொன் மலராகத்தான் விளங்க முடியும். பொது மக்கள் ஆதரவென்றால் பண உதவி என்று பொருள் அல்ல. பணத்தைக் கொண்டு பொன் மலரைத்தான் பெற முடியும். நன்கு பேணி வளர்க்கப் பட்ட செடியிலிருந்துதான் நறு மணம் வீசும் உயிருள்ள மலரைப் பெறமுடியும்.

பணம் படைத்தோர் தரும் பொற்குவியலினால் மட்டும் நூலகங்கள் வளர்ந்து விடுவதில்லை. எல்லோருடைய வருகையினால் தான் நூலகங்கள் வளர்கின்றன. வருகிறவர்களின் எண்ணிக்கை பெருகப்பெருக, நூலகத்தில் தேவைகள் பெருகும். தேவைக் கேற்ப நூலகங்களில், புத்தகங் களின், கட்டிடங்களின் தளவா டப் பொருள்களின் எண்ணிக் கைகள் வளரும்.

எந்த வளர்ச்சிக்கும் தேவை (Demand) என்ற கரு இருந்தாக வேண்டும். நூலகங்கள் தேவை என்ற உணர்ச்சி நம்மிடையே வளராததினால் தான் பொது நூலகங்கள் பயன்படுத்தப்படாத பித்தளைப் பாத்திரங்களைப் போல் பொலிவிழந்து இருக்கின்றன.

தற்பொழுது பொது நூலகங் களைத் திறந்து, அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு பொது மக்களைத் தூண்டுகிறோம். இது நகரங்களிலும் பெருங்கிராமங் களிலும் ஓரளவு வெற்றியைப் பெற்று வருகிறது.

முழு வெற்றி பெறுமைக்குக் காரணம் பொதுமக்களும், நிர் வாகிகளும் ஆவர். ஆரம்ப விழா விற்குத்தரப்படும் முக்கியத்துவம் நூலகங்களுக்குத் தரப்படுவ தில்லை. விழாவிற்கும், எண்ணிக் கைக்குமாக நூலகங்கள் சில ஊர் களில் அமைந்து விடுகின்றன. இந்த நிலை மாறவேண்டும்; மாற் றப்பட வேண்டும்.

நூலகங்கள் சரியாக நிர் மாணிக்கப்படவில்லை என்று நூல கர்களும், நூலகர்கள் சரியாகப் பணிபுரியவில்லை என்று நிர்வாகி களும், நூலகங்கள் சரியாக

இயங்கவில்லை என்று பொது மக்களும் குறைப்பட்டுக் கொண்டும், குறை கூறிக்கொண்டும் அவரவர்கள் செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்து விடுகின்றனர்.

இந்த மும்முனையில், பொதுமக்கள் என்ற ஒரு முனையிலிருந்து ஒளி வீசுமாயின் மற்ற இரு முனைகளிலும் கவ்வி இருக்கும் இருள் அகன்றுவிடும்.

நேரத்தோடு நூலகங்களைத் திறக்கவில்லை என்றால் பொது மக்கள் காத்து நிற்பர் என்ற உணர்வையும், நூலகங்களில் புத்தகங்களை முறைப்படி அடுக்கி வைக்கவில்லை என்றால் மக்கள் புத்தகங்களைத் தேடி அலைவர், தம்மையும் தரக்குறைவாகக் கருதுவர் என்ற உணர்வையும் பொது மக்கள் ஏற்படுத்துவார்களானால், நூலகர்கள் தங்கள் கடமையைச் செய்து தான் ஆகவேண்டும் என்ற நிலைக்குக் கட்டாயம் வந்து விடுவார்கள். 'நாங்கள் அமர ஆசனங்கள் இல்லை. எங்கள் தேவைக்குப் புத்தகங்கள் இல்லை, நூலகத்தில் காற்றோட்டம் இல்லை என்ற கோரிக்கைகளை மக்கள் எழுப்புவார்களேயானால் துறைத் தனத்தாரும் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றப் பின் வாங்க மாட்டார்கள்.

சிறு நெருப்புப்பொறியால் பெரும் தீயை வளர்ப்பதைப் போலவும், சிறு சக்திச் செலவில் ஒரு பொத்தானை அமுக்கிப் பெரும் இயந்திரத்தை இயக்குவதைப் போலவும், பொறுப்பில் உள்ளவர்கள் பொதுமக்களின் தேவையை நிறைவேற்றும் வண்ணம், அவர்களை ஈர்க்கும் வண்ணம் நூலகங்களை அமைப்பதினாலும், ஒரு முறை வந்தவர் மறுமுறையும் நூலகத்தை நாடும் ஆவலைத்தூண்டும் முறையில் நூலகர்கள் பணியாற்றுவதினாலும், பொதுமக்களின் பேராதரவு என்ற பெரும் தீயை வளர்க்கலாம்; பெரும் இயந்திரத்தையும் இயக்கலாம்.

பொறுப்பில் உள்ளவர்கள் தரும் ஊக்கம் என்னும் பெட்ரோல், நூலகரின் மனமுவந்த சேவை என்னும் சிறு நெருப்புப் பொறியினால் பற்றிக் கொண்டு எரியும் பொழுது உண்டாகும் சக்தியினால் பொது நூலகங்கள் என்னும் பேரூர்தி, பொது மக்களின பெரும் ஆதரவு என்னும் பெருவேகத்தோடு நம் சமுதாய வீதியில் பவனி வரும்.

—''சிலம்பத்தான்''

சில கடிதங்களின் சாரம்

நூலகம் என்ற அமைப்பு, மக்கள் படித்துப் பயனடைவதற்காகத் தொண்டு செய்து வருகிறது என்பதை மக்கள் முதலில் உணரவேண்டும்; உணரச் செய்ய வேண்டும். அதை நான்கு வழிகளில் செய்யலாம்.

1. பெரிய அளவில் சுவரொட்டிகள் அச்சடித்து ஒட்டுதல்.
2. துண்டு அறிக்கைகள் வெளியிடுதல்
3. நூலக விழாக்கள் நடத்துதல்
4. மக்களை நேரிடையாக அணுகுதல்

—பா. வடமலைராசன்
துணை நூலகர்,
நிலக்கோட்டை

பொது மக்களில் பல இயல்பினர் இருக்கக்கூடும். அனைவருக்கும் ஈடு கொடுக்கும் நற்பண்பினைப் பெற்று, பக்குவப்பட்டவராக நூலகர் இயங்கினால் பொது மக்களின் தொடர்பு சிறப்பாக விளக்கமுடியும்.

— பா. ஜெயராமன்
துணை நூலகர்
குத்தம்பாக்கம்

நூலகர்கள் அறிமுகம்





1. பெயர் : பா. இராமசாமி
2. பிறந்த இடம்: மெலட்டூர் (தஞ்சை மாவட்டம்)

   தேதி : 8. 12. 1940.

3. படிப்பு : (I) பள்ளி இறுதி யாண்டு

   (II) நூலக இயல் சான்று படிப்பு. கன்னிமாரா பொது நூலகம், சென்னை. 1967.

4. அனுபவம்: 6 ஆண்டு 9 மாதங்கள் பணியாற்றிய நூலகங்கள் வடுவூர், திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி.

   நூலகம் : தற்போது பணியாற்றும் நூலகம், திருக்காட்டுப்பள்ளி.
   துணை நூலகர்.

1. பெயர்:
   செ. முத்துக்கருப்பன்

2. பிறந்த இடம் : கழனிவாசல் (தேனிபட்டி) கீழாநிலை அஞ்சல், திருச்சி மாவட்டம்.

   தேதி : 19-7-1947

3. படிப்பு : பள்ளி இறுதி வகுப்பு 1963. கழக உயர்நிலைப்பள்ளி, அரிமளம், திருச்சி மாவட்டம்.

4. அனுபவம் : இரண்டரை ஆண்டுகளாக கடியாபட்டி கிளை நூலகத்தில் துணை நூலகராகப் பணியாற்றுதல்.

1. பெயர்: சு. இராமலிங்கம்

2. பிறந்த இடம்: நாகப்பட்டினம், தஞ்சாவூர்மாவட்டம்

3. பிறந்த தேதி 14-8-1932

4. படிப்பு: பள்ளி இறுதி வகுப்பு

5. நூலகச் சான்றிதழ்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்.

6. அனுபவம்: 13 ஆண்டுகளாக திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களில் பணியாற்றியவர். தற்பொழுது புதுக்கோட்டையில் துணை நூலகராகப் பணியாற்றி வருகிறார்.

1. பெயர் : ஜீ. பூபாலன்

2. பிறந்த இடம் : பொன்மலை, ரயில்வே காலனி, திருச்சி மாவட்டம்.

தேதி : 7-4-1936

3. படிப்பு : இடைநிலைவகுப்பு 1957. புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சி.

நூலக அறிவியலில் சான்றிதழ் : கன்னிமாரா நூலகம், சென்னை-8, டிசம்பர் 1966.

4. அனுபவம்:- (1962-1966) 5 ஆண்டுகளாக அச்சிறுபாக்கம் கிளை நூலகத்தில் (செங்கை மாவட்ட நூலக ஆணைக்குழு) துணை நூலகராகப் பணியாற்றியவர். தற்பொழுது பணி புரியும் ஊர் மானும்பதி, (வழி) உத்திரன்மேரூர்.

தமிழ்வாணன்

க. நாராயணன்

திரு. தமிழ்வாணன் அவர்களைச் சந்திக்கப் பலமுறை சென்றிருக்கிறேன். எப்பொழுது போனாலும் அவரைச் சுற்றி ஒரு கூட்ட மிருக்கும். எப்பொழுதும் சுறு சுறுப்புடன் இயங்கிக் கொண்டிருப்பார். பத்திரிகைக்கு எழுதுவது, புத்தகங்கள் எழுதுவது, அரசியல் கூட்டங்களுக்குச் செல்வது, விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, அவர் புதிதாக ஈடுபட்டிருக்கும் படத்துறை சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்பது, அவரைத் தேடி வரும் பழைய, புதிய நண்பர்களுடன் உரையாடுவது: இவ்வாறு ஏதேனும் ஒரு காரியத்தில் ஈடுபட்டிருப்பார். அவர் ஓய்வுடனிருந்து நான் பார்த்ததேயில்லை.

''நூலகம்'' இதழுக்குப்பேட்டி காணச் சென்றபோது, காரில் புறப்பட்டுக் கொண்டிருந்தார் அவர்! என்னைக் கண்டதும், ''வாருங்கள்! ஸ்டுடியோவரை போய் உடனே திரும்பி விடுவோம்'' என்றார். நானும் அவருடன் சென்றேன். பத்திரிகை, எழுத்தாளர் நிலை, இன்றைய அரசியல் ஆகியவை பற்றிப் பொதுவாகப் பேசிக் கொண்டே சென்றோம். அப்போது அவர் கூறிய சில கருத்துக்களைக்கீழே தருகிறேன்.

''எனக்கு என்று சில கருத்துக் களும் லட்சியங்களும் உண்டு. இன்றைய மக்களின் மனப் போக்கை அறிந்து எழுதுகிறேன்; பேசுகிறேன். ஆனால் என் உள்ளத்தில் பல முற்போக்குக் கருத்துக்கள் உண்டு. அவற்றை இன்னும் நான் வெளியிடவில்லை. காரணம் நாடும், மக்களும் அதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு இன்னும் பக்குவப்படவில்லை. இருந்த போதிலும், இன்று நான் கூறும் கருத்துக்களில் அந்த முற்போக்கு எண்ணமும் ஓரளவு பொதிந்திருக்கிறது. உதாரணமாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'கல்கண்டு' இதழை எடுத்துப் படித்துப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாக இருக்கும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'கல்கண்டில்' அதைவிட முற்போக்கான கருத்துக்கள் மிளிரும். இன்று வெளியாகும் 'கல்கண்டு' எவ்வளவோ மாறிவிட்டது. காலத்தின் போக்கையும், மக்களின் நிலையையும் கணித்து அதற்கேற்ப என் கருத்துக்களை வெளியிடுகிறேன். அதனால்தான் கல்கண்டு வளர்ச்சியடைந்து கொண்டே வருகிறது. எது சரியென்று நான் கருதுகிறேனே அதை அப்படியே சொல்லுகிறேன். அதனால் என்னை சிலர் கர்வம் பிடித்தவன் என்றும், தலைக்கனம் பிடித்தவன் என்றும் சொல்லுகிறார்கள். காலப் போக்கில் நான் சொல்லுவது சரியானது என்பதை அவர்கள் நிச்சயம் உணர்வார்கள்.''

இருவரும் ஸ்டூடியோவிலிருந்து அலுவலகம் திரும்பி வந்ததும் பேட்டி ஆரம்பமாயிற்று.

''எழுத்துத் துறையை நீங்கள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன?''

''தமிழ் வித்வானாக இளமையில் ஆசைப்பட்டேன். திரு. அரங்ககிருஷ்ணனிடம் இலக்கியம் பயிலும் மாணவனாகச் சேர்ந்தேன். அவர் இலக்கியங்களை நன்றாகக் கற்றுக் கொடுத்தார். ஆனால் என் மனத்தில் அவை வேரூன்றவில்லை. என் சிந்தனை எங்கேயோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. தமிழ் இலக்கியங்கள் – அதாவது அக நானூறு, புற நானூறு இவற்றைக் கற்பதால் இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைக்கு என்ன நன்மை? பழைய அகமும் புறமும் என்னைக் கவரவில்லை. அவை இன்றைய வாழ்வுக்கு ஒத்து வராது என்பதைக் கண்டேன். புதுமை இலக்கியம் என்னைக் கவர்ந்திழுத்தது. 'புதுமைப்பித்தனின் ரங்கா ரிக்ஷனும், 'திஜர'வின் சர்வரும் என் மனத்தைக் கவர்ந்தன. எனக்குத் தோன்றிய புதுமைக் கருத்துக்களைத் தெரிவிக்கவே நான் எழுத்தாளனானேன்.

''அவ்வாறு எழுதுவதற்கு முதலில் வாய்ப்பளித்தது யார்?''

''செட்டிநாடு' என்ற பத்திரிகையில் சர்மா என்பவர் ஆசிரியராக இருந்தார். அவரிடம் என் ஆசையைத் தெரிவித்தேன். மதுரை மேலூருக்கு அருகில் திருவாதவூர் உள்ளது. அங்கே பிறந்த மாணிக்கவாசகரைப் பற்றி அந்த ஊருக்குச் சென்று ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரை எழுதித்தரும்படி சர்மா கூறினார். நான் எப்படியாவது எழுத்தாளனாக ஆசைப்பட்டேன். என் பெயர் அச்சில் வருவதைக் காண ஆவல். உடனே அவர் கட்டளையை ஏற்றுக்கொண்டு திருவாதவூர் சென்றேன். அது ஒரு சிறிய கிராமம். ஏழை மக்களும் குடிசைகளும்தான் அதிகம். மாணிக்கவாசகரைப் பற்றி எந்தச் சுவடும்

அங்கே காணப்படவில்லை. அங்கே வாழும் மக்கள் நிலைபற்றி ஒரு கட்டுரை எழுதினேன். ''இன்றையத் திருவாதவூர்'' என்ற தலைப்பில் ''லெ. ரா.'' என்ற புனைப் பெயரில் 'செட்டிநாடு' 'பத்திரிகையில் அக்கட்டுரை வெளிவந்தது.

''எந்தப் பத்திரிகைக்கு முதலில் நீங்கள் ஆசிரியராகப் பணியாற்றினீர்கள்?''

திரு. சொக்கலிங்கம் என்பவர் நடத்திய மாத வெளியீடான ''கதம்பம்'' பத்திரிகைக்கு ஆசிரியரானேன். அது நீண்ட காலம் நடைபெறவில்லை.

'அணில்', 'கல்கண்டு' போன்ற பத்திரிகைகள் ஆரம்பத்தில் குழந்தைப் பத்திரிகைகளாக வெளி வந்ததே! அப்படியானால் நீங்கள் குழந்தைகளுக்காக எழுதினீர்களா?

''அணில்'' பத்திரிகையின் உரிமையாளர் திரு,வை. கோவிந்தன் அப்பத்திரிகையின் ஆசிரியப் பதவியை எனக்கு அளித்தபோது வேறு வழியில்லாமல் அதை ஏற்றுக் கொண்டேன். குழந்தைகளுக்கு எழுத அப்பத்திரிகை வாய்ப்பாக அமைந்தது. ஆனால் 'கல்கண்டு' இளைஞர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் வயது வந்தவர்களுக்கான பத்திரிகை யாகிவிட்டது.

''எத்தனையோபேர் பத்திரிகை ஆரம்பிக்கின்றனர். அவை நீடித்து நிற்பதில்லை. புத்தகங்கள் வெளியிடுகின்றனர், அவை சரியாகப் பொதுமக்களிடம் விற்பனையாவதில்லை. ஆனால் நீங்கள் எழுதும் 'கல்கண்டு' அமோகமாக விற்பனையாகிறது. அதே மாதிரி நீங்கள் எழுதும் புத்தகங்களும் ஏராளமாக விற்பனையாகின்றன. இதன் இரகசிய மென்ன?

''நான் ஏற்கனவே கூறியபடி மக்களுக்குத் தேவையானதை காலம், நேரம் அறிந்து கல்கண்டில் எழுதி வருகிறேன். அதனால் இன்று தமிழகத்தில் அதிகமாகச் செலவாகும் பத்திரிகைகளில் ஒன்றாக 'கல்கண்டு' விளங்குகிறது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் கல்கண்டு 36,000 பிரதிகள் ஏறியிருக்கிறது.

இன்று மக்களுக்குத் தேவை வாழ்க்கைப் பிரச்சினை பற்றிய நூல்கள்தான். அவர்கள் தேவையறிந்து எழுதுகிறேன். வளமையில் இருப்பவர்கள் பொழுது போக்கும் வகையில் துப்பறியும் நாவல்கள் எழுதுகிறேன். இரு வகை நூல்களும் ஏராளமாக விற்பனை யாகின்றன. கல்லூரி பள்ளி மாணவர்களிடையே தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட் ஒரு சர்வே நடத்தியது. மாணவர்களின் படிக்கும் பழக்கத்தை அறிய நடத்திய அந்த சர்வேயில் ஷேக்ஸ்பியரின் நூல்களும், என்னுடைய நூல்களும்தான் மிகமிக அதிகம் என்பது வெளியாயிற்று. ஜூன் 1957ல் வெளிவந்த ''புக் நியூஸ்'' என்ற பத்திரிகை ''கிராஃப்'' மூலம் இதை வெளியிட்டு, இதுபற்றி சர்வே நடத்

பத்துக்கோடி நூல்கள்

கிழக்கு ஜெர்மனியில் ஆண்டு தோறும் சராசரியாக ஆறாயிரம் நூல்கள் வெளிவருகின்றன. இவற்றின் மொத்தப் பிரதிகள் 10 கோடி. நல்ல நாவல்கள் என்றால் ஒரு பதிப்புக்கு ஒரு லட்சம் பிரதிகள் வெளியிடுகிறார்களாம்.

—இ. ஜெ. இருபது நாட்கள்



திய டிரஸ்டின் காரியதரிசி திரு. சி. ரகுநாதனின் கட்டுரையையும் பிரசுரித்துள்ளது.

“உங்களுக்குப் பிடித்த ஆசிரியர்கள் யார்?”

“வாழ்க்கைப் பிரச்சினை பற்றிய நூல்களை எழுதும் டேல் கார்னிஜி, நெப்போலியன் ஹில், துப்பறியும் நாவல்களை எழுதும் ஏர்ல் ஸ்டான்லி கார்ட்னர், அகதா கிறிஸ்டி, சமூக நாவல் எழுதும் சாமர்செட் மாகம், சிறுகதைகள் எழுதும் ஒஹென்றி ஆகியோர் எனக்குப் பிடித்த ஆசிரியர்கள்.

“மறுமலர்ச்சி என்ற பெயரில் ஏராளமான தமிழ் நூல்கள் தற்சமயம் வெளியாகிக் கொண்டிருக்கிறதே, அது பற்றித் தங்கள் கருத்து என்ன?

“ஆரம்ப காலத்தில் பழமைக் கருத்துக்கள் நிறைந்த புத்தகங்களே வெளிவந்தன. பிறகு பழமையிலே ஒருபுரட்சி ஏற்பட்டது. பிறகு புதுமை—அதன் பிறகு புதுமையிலே ஒரு புரட்சிஏற்பட்டது. பிறகு மறுமலர்ச்சி. அதன் பிறகு மறுமலர்ச்சியிலும் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. இன்றைய அரசியல், இன்றையப் பொருளாதாரம், இன்றைய வாழ்க்கை பற்றிய கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நூல்கள்தான் மறுமலர்ச்சி நூல்களாகும். மற்றவை காலத்தைக் கொல்லும் நூல்களாகும்.

“யாருடைய கருத்துக்கள் உங்களுக்குப் பிடிக்கும்?”

“உற்சாகம் குறைந்தவர்களை உற்சாகப் படுத்துவோரின் கருத்துக்கள் எனக்குப் பிடிக்கும். ஊக்கம் குறைந்தவர்களை ஊக்கப் படுத்துவோரின் கருத்துக்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

“யாருடைய கருத்துக்கள் உங்களுக்குப் பிடிக்காது?”

“பழமை இலக்கியங்களுக்கு விரிவுரை கூறுவோர், பழமையில் எல்லாமே இருக்கிறது என்று கூறுவோர், இலக்கிய நயம்பற்றி கூறுவோர், இந்த நூற்றுண்டிலும் அகத்தைப் பற்றியும், புறத்தைப் பற்றியும் கூறிக் கொண்டிருப்போர் ஆகியோரின் கருத்துக்கள் எனக்கு அறவே பிடிக்காது. காரணம், இவை இன்றைய வாழ்க்கைக்குப் பயன் தராது. வளமையில் இருக்கும் போது படிக்கவேண்டியது இலக்கியம். இன்று நாம் வளமையிலா இருக்கிறோம்? நாடே வறுமையில் இருக்கும்போது இவை தேவையில்லை.”

"இன்றையக் கல்வி முறை எப்படி இருக்கிறது?"

"தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கணப் பிழை இல்லாமல் எழுதத் தெரிந்த மாணவர்களே இன்று இலர். ஆண்டுக்காண்டு கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகிறது. இப்படி மெய்யான கல்விக்கு, தரமான கல்விக்கு வெடிவைத்தது இலவசக் கலவித் திட்டந்தான். என்றைக்கு இலவசக் கல்வித் திட்டம் ஒழிகிறதோ, அன்றைக்குத்தான் கல்வியின் தரமும் மேம்படும்.

"கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் உங்களுடைய கருத்துக்களைப் படித்துவிட்டுப் பலர் பலவிதமாகப் பேசுவது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்! என்னுடைய பதில்களைப் படித்துவிட்டு சிலர் என்னைப் பைத்தியக்காரன் என்கிருர்கள். சிலர் மண்டைக் கனம் பிடித்தவன் என்கிருர்கள். சிலர் தற்பெருமையுள்ளவன் என்கிருர்கள். ஆனல் பலர் என்னை அறிவாளி என்று சொல்லுகிருர்கள். இந்த ஜனநாயக நாட்டில் சிலர் சொல்லுவது எப்படி நிற்கும்? பலர் சொல்லுவதுதானே நிற்கும்! என்னுடைய பதில்கள் அத்தனையும் வாழ்க்கைக்கு உதவக் கூடிய கருததுக்கள், வளத்தோடு வாழ விரும்புகிறவர்களுக்கு என்னுடைய கருத்துக்கள் வற்ருத கரும்புச் சாறு.

"உங்கள் பதில்களையும், நூல்களையும் படித்தவர்கள் கடிதங்கள் எழுதுவதுண்டா?"

"தமிழகத்தில் எனக்கு வரும் அளவுக்கு, வேறு யாருக்கும் கடிதங்கள் வருவதில்லை. அந்தக் கடிதங்கள் பெரும்பாலும் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றியும், உடல் நோய்களைப் பற்றியும், உள நோய்களைப் பற்றியும், உடல் உறவைப் பற்றியுமே இருக்கின்றன. இவற்றில் எந்தக் கடிதத்திற்கும் நான் பதில் எழுதுவதில்லை. காரணம் எனக்கு நேரமிருப்பதில்லை.

"நூலகங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"ஊருக்கு ஒரு நூலகம் இருந்து பயனில்லை. ஏனென்ருல் எல்லா ஊர்களும் விரிந்து நகரங்களாகிக் கொண்டிருக்கின்றன! எனவே வீட்டிலிருந்து நூலகத்திற்குப் போய் வருவதென்பது ஒரு பிரச்சினையாகி வருகிறது. தெருவுக்கு ஒரு நூலகம் என்று இருந்தால் தான் மக்கள் நூலகத்துக்கு வந்து படிப்பது சாத்தியமாகும். பெண்கள் நூலகங்களுக்கு வருவதேயில்லை. காரணம் வீட்டை விட்டு வெளியேவர அவர்களுக்கு வாய்ப்புக் குறைவு. ஆகையால் நம்நாட்டுப் பழக்க வழக்கங்களின் படி பெண்களை நூலகங்களில் எதிர்பார்ப்பது சாத்திய மற்றதாயிருக்கிறது. பெண்களும் நூலகங்களைப் பெரிய அளவில் பயன்

அறிவுப் பெட்டகங்கள்

கிழக்கு ஜெர்மனியிலுள்ள லீப்ஸிக் நகரத்தின் 'ஜெர்மன் நூலக'த்தில் 30 லட்சம் நூல்கள் இருக்கின்றன. 16 லட்சம் நூல்களைக் கொண்ட பல்கலைக் கழக நூலகம் ஒன்றும் உள்ளது. வெப்பநிலை, ஈரக்கசிவு போன்றவை ஒரே சீராக இருக்கும்படி தகுந்த அறைகளில் நூல்களை வைத்து, கண்களைப்போல் பாதுகாக்கிருர்கள்.

—இ. ஜெ. இருபது நாட்கள்

படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், வீட்டுக்கு வீடுபோய் நூல்களைக் கொடுத்து வாங்கி வரும் திட்டம் இன்னும் விரிந்த அளவில் தேவை.

''இன்றைய அரசியலைப் பற்றி உங்கள் கருத்தென்ன?''

''மது, மங்கை, மாமிசம் ஆகிய மூவாசைகளின் நினைவாகவே இருப்பவர்கள்தான் இன்றைய அரசியலில் இருக்கிறார்கள். அதனால் இன்றைய அரசியல் ஓர் ஆசைக் கிடங்காக இருக்கிறது. இந்தக் கிடங்கில் புகுந்து, அரசியல் வாதிகள் அவர்களுக்குத் தேவையானவற்றை அள்ளிச் சென்று கொண்டிருக்கிறார்கள். நல்லவர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள். அல்லாதவர்கள் அத்தனை பேரும் இன்றைய அரசியலில் இருக்கிறார்கள். இதுவே இன்றைய அரசியல்.

''எதிர்கால அரசியல் பற்றி உங்கள் கருத்தென்ன?''

''அரசாங்கம் கர்ப்பத்தடைப் பிரசாரத்தைத் தொடங்குவதற்கு முன்பு இந்திய ஜனத்தொகை 48 கோடி. இப்போது ஜனத்தொகை 54.2 கோடி. இந்தியாவின் வருங்கால அரசியலும் இதைப் போலவே இருக்கும். இந்த அடிப்படையை வைத்துப் பார்க்கும்போது இந்தியா ஒரு கம்யூனிஸ நாடாகிவிடும். இன்று உலகத்தில் ரஷ்யக் கம்யூனிஸம் என்றும் சீனக் கம்யூனிஸம் என்றும் இருப்பதைப் போல, இந்தியக் கம்யூனிஸம் ஒன்று உருவாவதை எவராலும் தடுக்கமுடியாது.

''காலஞ்சென்ற தலைவர்கள், அறிஞர்களில் உங்களுக்குப் பிடித்தவர்கள் யார்?''

''காந்திஜி! காரணம் அவருடைய தூய்மை, கென்னடி! காரணம் அவருடைய துணிவு, ஆல்பர்ட் சுவிட்ஸர்! காரணம் அவருடைய தொண்டு, டால்ஸ்டாய்! காரணம் அவருடைய பேரறிவு! சத்தியமூர்த்தி! காரணம் அவருடைய கொள்கை.

''இன்று உயிருடன் இருப்பவர்களில் உங்களுக்குப் பிடித்தவர்கள் யார்?''

''ரஸ்ஸல்! காரணம் அவருடைய பேரறிவு. எல்லைக் காந்தி! காரணம் அவருடைய எளிமை. துங்கு அப்துர் ரஹிமான்! காரணம் அவருடைய ஒருமைப்பாடு. இந்திரா! காரணம் அவருடைய துணிவு, சங்கராச்சாரியார்! காரணம் அவருடைய தூய்மை. கிருபானந்த வாரியார்! காரணம் அவருடைய நகைச் சுவை.

''மதம் அவசியமா?''

''அவசியம்! இஸ்லாமிய மதமும், கிறிஸ்துவ மதமும் இந்த உலகத்தில் இருக்கும் வரை இந்து மதமும் இருக்க வேண்டும். இந்து மதம் இல்லாவிட்டால் எதிர்காலத்தில் நமது பரம்பரையில் வருகிறவர்கள் மற்ற மதத்தினராக இருக்க வேண்டி நேரிடும்.''

''நீங்கள் ஏன் 'துணிவே துணை' என்று போடுகிறீர்கள்?''

''இந்தக் காலத்தில் நன்றியுள்ள நாய்களையே நம்ப முடியவில்லை. நாய்க்கு வருஷத்திற்கு மூன்று மாதங்கள் புத்திமாறிப் போகிறது. மனிதனுக்கு வருஷத்தில் பன்னிரெண்டு மாதங்களும் புத்திமாறிப் போகிறது. ஆகையால் நன்றியுள்ள நாயையும், பகுத்தறிவுள்ள மனிதனையும் நம்பமுடியாத இந்தக் காலத்தில் யாரை நம்புவது? கடவுளை நம்பலாம் என்றால் அவர் காலங்கடந்தே வந்து உதவி செய்கிறார்.

எனவே நம்மை நாமே நம்பி வாழ வேண்டிய காலமாக இருக்கிறது. நம்மிடம் உள்ளவற்றில் மற்றவர்களை நம்பி முன்னுக்கு வர முடியாது. துணிவை நம்பினால், அந்தத்துணிவு நம் எதிரே வந்து மோதும் ஒவ்வொரு பிரச்சினையையும் பிய்த்து எறிந்து, நம் எதிரே வந்து மோதும் ஒவ்வொரு துன்பத்தையும் தூளாக்கி நம்மைக் கரை சேர்க்கிறது. எனவே துணிவு நமக்குத் துணையாக இருந்தால் நமக்குத் துன்பம் இருக்காது. அதனால்தான் 'துணிவே துணை! துணிவே துணை!' என்று அடிக்கடி சொல்லுகிறேன்.''

-'உங்களுடைய லட்சியம் என்ன?''

''ஊக்கம் இழந்தவர்களையெல்லாம் ஊக்குவிப்பதுதான் என் லட்சியங்களில் தலையாயது!''

''இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?''

''இன்றுள்ள இளம் எழுத்தாளர்கள் காதல் கதை எழுதுவதை விட்டுவிட வேண்டும். கவிதைகளின் பக்கம் தலை வைத்துப் படுக்கக்கூடாது. இலக்கிய ஆய்வில் இறங்கக்கூடாது. இன்று மக்கள் முன் உள்ள பிரச்சினைகளைத் தவிர, வேறு எதையுமே எழுதக் கூடாது. மக்கள் பிரச்சினைகளைப்பற்றி எழுதுகிற எழுத்தாளர்களுக்கே இனி நல்ல எதிர்காலம் இருக்க முடியும்.''

ஒவ்வொரு கேள்விக்கும் எவ்விதத் தயக்கமுமின்றிப் பதில் கூறினார் திரு. தமிழ்வாணன். இடையிடையே நகைச் சுவையாகச் சில தகவல்களைக் கூறினார். அவர் எதிர்ப்பிலேயே வளர்ந்தவர். எத்தனையோ இடுக்கண் வந்த போதும் அவர் மனத் தளர்ச்சியடைந்ததில்லை. உறுதியான உள்ளம், அஞ்சா நெஞ்சம், இனிய சுபாவம், நகைச் சுவை கலந்த பேச்சு, தனக்குச் சரியென்று தோன்றுவதைத் தெளிவாக எடுத்துக் கூறும் ஆற்றல் இவைதான் தமிழ்வாணன் அவர்களின் குணம்சம்.

பேட்டி முடிந்தது. விருந்தோம்பல் முடித்து, என்னை வழியனுப்பிவைத்தார் அந்த இனிய நண்பர்.

செரியன்ஸ்

தயாரிக்கும் ஒவ்வொரு பிளாக்கும்
கைத்திறனில் சிறந்தது.

விவரங்களுக்கு :

செரியன்ஸ் ப்ராஸஸ்

89, பாண்டிபஜார், சென்னை-17

டெலிபோன் : 443341

நூலகர்கள் அறிமுகம்



ப. வியாசமூர்த்தி
B.Sc, B.Lib. Sc.,
A.M.I.E.T. (Lond).,

பிறப்பிடம்: சென்னை

தேதி: 14-12-1941

படிப்பு:

பள்ளி: சென்னை கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி

கல்லூரி: சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம் (B.Sc) சென்னை பல்கலைக் கழகம் B.Lib.Sc

அனுபவம்: நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய நூலகம், சென்னை-2 (1½ ஆண்டு)

தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. சென்னை-20. 2½ ஆண்டுகளாக நூலகராகப் பணியாற்றுகிறார்.

1. பெயர்: த. நித்தியானந்தம்
2. பிறந்த இடம்: வீரடிப்பட்டி, உரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
3. தேதி: 16-8-1945
4. படிப்பு: பள்ளி இறுதியாண்டு
5. அனுபவம்: 27-2-1966ம் நாளிலிருந்து 22-4-1966ம் நாள் வரை அன்னவாசல் நூலகம். 22-4-1966ம் நாள் முதல் இன்றுவரை தொடர்ந்து கரம்பக்குடி கிளை நூலகத்தில் பணியாற்றுதல்

ஸ்ரீ. ஸ்ரீ.

மணவை முஸ்தபா

ஸ்ரீ. ஸ்ரீ என்ற இரண்டு எழுத்துக்களுள் மறைந்து கொண்டிருக்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசராவ் இன்றைய தெலுங்குப் புத்திலக்கியக்கவிஞர்களின் வழிகாட்டியாகத்திகழும் புரட்சிக் கவிஞராவார். இனிய பண்பும் எளிமைத் தோற்றமும் கொண்ட இக் கவிஞரின் உள்ளமோ வெடிக்கும் எரிமலையும் கொந்தளிக்கும் புயலும் குடியிருக்கும் புரட்சிக் கனலாக உள்ளது.

ஆழ்ந்த சிந்தனையும் கற்பனை வளமும் கூர்ந்த மதியும் கொண்ட அவர் சமுதாயக் கோணல் நிலைகளைச் சாடுவதில் புரட்சிக் கவி பாரதியாராக — பாரதிதாசனாகவுமே திகழ்கிறார்.

வானத்தையே அண்ணாந்து பார்த்து, கவைக்குதவாத கற்பனைகளுக்கு கவிதை வடிவம் தந்து, கவிதைப் பணியாற்றிவந்த தெலுங்குக் கவிஞருலகின் கவ

ணத்தைப் பிரத்தியட்ச உலகை நோக்கித் திருப்பிய பெருமை புதுமைக் கவிஞர் ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களையே சாரும்.

உப்பரிகை வாசிகளின் உல்லாச வாழ்வைக் கருப்பொருளாகக் கொண்டு கவிதை புனைந்து வந்த கவிஞர்களின் மத்தியில் குருதியை வியர்வையாகக் கொட்டி உழைக்கும் உழவர்களையும் பிற பாட்டாளி மக்களையும் கருவாகக் கொண்டு கவிதை புனைந்து அவர்களின் உரிமைக்கும் பெருமைக்கும் முரசு கொட்டிய புரட்சிக் கவிஞர் ஸ்ரீ. ஸ்ரீ. தாஜ்மகாலைப் புகழ்ந்து பாடுவதில் பொருளில்லை என்று கூறும் இக் கவிஞர், அரச ஆணைக்கு அடிபணிந்து அதனைக் கட்டி முடிக்கப் பன்னெடுங்காலம் கட்டாயப் பணியாற்றி உழைத்த உழைப்பாளிகளையே எண்ணிப்பார்க்க வேண்டும் என்கிறார். பயனற்ற பழமைப் போக்குகளை கைவிடத் துடிக்கும் கவிஞர், இலக்கிய உலகின் வீண் சம்பிரதாய கவிதை அமைப்புகளையும் வழி வழியாக வந்த கீத சந்த முறைகளையும் எதுகை மோனை போன்ற இலக்கணக் கட்டுப்கோப்புகளையும் மாற்றியமைக்கவோ உதறித் தள்ளவோ தயக்கம் காட்டியதில்லை.

'முற்போக்கு' என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பழமைக்கு வால் பிடிக்கும் பிற கவிஞர்களைப்போலன்றி எண்ணத்திலும் எழுத்திலும் இடையறாது முற்போக்கு உணர்ச்சியை ஊட்டுவதன் மூலம் ஆந்திர மக்களின் உள்ளத்தில் நிரந்தர இடம் பெற்றிருக்கும் மக்கள் கவிஞராவார்.

இன்றைய தெலுங்குக் கவிதையுலகின் முற்போக்கு அணியின் வழிகாட்டியாகத் திகழும் ஸ்ரீ. ஸ்ரீ. 1910 ஆம் ஆண்டு விசாகப்பட்டினத்தில் பிறந்து, விசாகையிலும், பின்னர் சென்னை கிருத்துவக் கல்லூரியிலும் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றவர்.

எட்டு வயதிலேயே கவிதை புனையத் தொடங்கி விட்ட அவர் தம் பதினைந்தாம் வயதில் 'பரிணய ரஹச்யாலு' (காதல் இரகசியங்கள்) என்ற பெயரில் துப்பறியும் புதினமொன்றை எழுதினார். ஆயினும் இயற்கையிலேயே கவித்துவ உள்ளம் படைத்த அவர் பின்னர் தம் முழுக் கவனத்தையும் கவிதை இயற்றுவதிலேயே செலுத்தினார். அக்காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த கதைப் பாடல் அமைப்பில் பல கவிதைகளை இயற்றினார். இக் கவிதைகளைத் தொகுத்து 1928 இல் 'பிரபவ' (தோற்றம்) என்ற பெயரில் வெளியிட்டார். அக்காலப் போக்குக் கேற்ப இக் கவிதைகள் அமைந்திருந்தன. ஆனால், 1935 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் அவர் தனக்கென தனியானதொரு பாணியை வகுத்துக்கொண்டு புதுமைக் கவிதைகளைப் படைக்கலானார். 1950 இல் அவரது சிறந்த கவிதைப் படைப்பான 'மகா பிரஸ்தானம்' (சிறந்த புறப்பாடு) வெளியிடப்பட்டது. இந் நூல் தெலுங்குக் கவிதையுலகில் ஒரு பெரும் மாற்றத்துக்கு வழி வகுத்தது. உணர்ச்சி கொப்பளிக்கும் ஆற்றல் மிக்க அக் கவிதைத் தொகுப்பு மூலம் இளைஞர்களுக்கு ஒரு இலட்சிய உலகைக் காட்டியதோடு அதை நோக்கி நம்பிக்கையோடு முன்னேற இளைஞர்களை ஊக்கித் தூண்டினார். தொடர்ந்து முற்போக்குப் புதுமைக் கவிதைகளை இயற்றி தெலுங்குக் கவிதையின் போக்கையும் கருத்தையும் அடியோடு மாற்றி

யமைத்து விட்டார். முற்போக்கு உணர்வு படைத்த எழுத்தாளர்களும் இளங்கவிஞர்களும் இவரது தலைமையின்கீழ் அணி திரண்டனர்.

இவரது கவிதைகள் மக்களிடையே பெரும் புகழ் பெற்றது. இவரது கவிதையாற்றலுக்குக் கட்டியங்கூறும் கவிதைப் படைப்புகள் 'தேச சரித்ராலு' (நாடுகளின் வரலாறு) 'மானவுடு' (மனிதன்) முதலியனவாகும்.

இவர் ஆங்கிலம், ஃபிரெஞ்சு ஆகிய இரு மொழிகளின் தற்காலக் கவிதைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் இவரது கவிதைகளில் அவ்விரு மொழிக் கவிதைகளின் செல்வாக்கு மிகுதியும் பிரதிபலிக்கக் காணலாம். சான்றாக இம்ப்ரஷனிசம், ஹ்யூமானிசம், சர்ரியலிசம் போன்ற பல புது முறைகளை அவர்தம்கவிதைகளினூடே காணலாம்.

இவர் தம் கவிதைகளில் பலவற்றை ஆங்கிலத்தில் தாமே மொழி பெயர்த்து 'த்ரி சியர்ஸ் டு மேன்' (Three cheers to Man) என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். இதன் வாயிலாக அவர் தம் புகழ் ஆந்திராவுக்கு அப்பாலும் பரவியுள்ளது. மற்றும் அவரது சிறந்த கவிதைகளில் பல ரஷியன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

அவர் தம் வாழ்க்கையில் எண்ணற்ற இடர்ப்பாடுகளைச் சந்தித்தவர். ஆசிரியராகவும் பத்திரிகையாளராகவும் சிலகாலம் பணியாற்றிய அவர் சிறிது காலம் அனைத்திந்திய வானொலியிலும் பணியாற்றினார் ஆனால் அவரது புரட்சிப் போக்கு எங்குமே அவரை நிரந்தரமாகத் தங்கவிடவில்லை. சக்திமிக்கக் கவிதைகள் பலவற்றை ஈன்றெடுத்தார்.

புகழ்மிக்கக் கவிஞராக மட்டுமின்றி சிறந்த கட்டுரையாளராகவும் நாடகாசிரியராகவும் திகழ்கிறார்.

அவரது வானொலி நாடகங்களின் தொகுப்பு 'மனோ பிரபஞ்சம்' (மற்றோர் உலகம்) என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அங்கதக் குறிப்புகளடங்கிய கட்டுரைத் தொகுப்பொன்று 'சரம் ராத்ரி' (இறுதி இரவு) என்ற பெயரில் வெளிவந்தது. 'வாரம் வாரம்' என்பது மற்றொரு தொகுப்பு நூலாகும். தற்காலத் தெலுங்கு இலக்கியத் தந்தையாக ஆந்திரர்களால் போற்றப்படும் குருஜாடா அப்பாராவின்

தரமான, நீடித்த உழைப்பிற்கு
மோட்டார் டயர்களை புதுப்பிக்க

"ஜீவி இண்டஸ்டிரீஸ்"
JEEVI INDUSTRIES

பொறையார்
தஞ்சை மாவட்டம்

படைப்பாற்றலை விளக்கும் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு 'மன குருஜாடா' (நம் குருஜாடா) என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. 'சிறி சிறி முவ்வ' (சின்னச் சின்ன மணி) என்ற நூல் அவரது நகைச்சுவைத் திறனுக்கும் 'கட்க சிருஷ்டி' (கத்தியின் படைப்பு) என்ற நூல் அவரது அங்கதப் பாடல் இயற்றும் ஆற்றலுக்கும் சான்றாக விளங்குவனவாகும்.

இவர் 1953-58 ஆம் ஆண்டுகளில் ஆந்திரா இணைந்திருந்த அப்போதைய சென்னை மாநில மேலவை உறுப்பினராகவும் 1954 ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற அமைதி மாநாட்டிலும் பங்கேற்றதோடு ஐரோப்பிய சுற்றுப் பயணமும் மேற்கொண்டார். 1966 ஆம் ஆண்டில் 'சோவியத் நாடு' நேரு இலக்கியப் பரிசைப் பெற்றதன் மூலம் அதற்கு அடுத்த ஆண்டில் சோவியத் யூனியனில் சுற்றுப் பயணம் செய்தார்.

தெலுங்குத் திரைப் படங்களுக்குப் பாடலும் உரையாடலும் எழுதுவதைத்தன்வருவாய்ப்பணியாக மேற்கொண்டு சென்னையில் வாழ்ந்து வரும் கவிஞர் மணி விழாவை 1970 ஆம் ஆண்டில் ஆந்திராவெங்கும் சீரும் சிறப்புமாகக் கொண்டாட இலக்கிய உலகம் ஏற்பாடு செய்து வருகிறது. அதன் தொடர்பாக அவரது அமரத்துவப் படைப்புகள் கொண்ட மாபெரும் 'மணிவிழா வெளியீடு' ஒன்றும் வெளிவரவிருக்கிறது.

With compliments from:

PHILIPS

PHILIPS INDIA LTD.

35/4. Mount Road,

MADRAS-2.

புத்தக அன்பளிப்பு

ம. சீ. கல்யாண சுந்தரம்

சர்ச்சை, அன்பளிப்பைப் பற்றியது. 'தினசரி உபயோகத்திற்கான ஒரு பொருள் தருவது நல்லது'— என்பது ஒருவர் அபிப்ராயம்.

அதை வேறு ஒருவர் எதிர்த்து, "ஒரு சாப்பாட்டுத் தட்டைவிட, மேஜைமேல் அழகாக வைக்கக்கூடிய நடராஜப் பதுமை சிறந்த பரிசு" என்று வாதித்தார்.

ரொக்கப் பணமாகக் கொடுப்பதை ஆதரிப்பவர் சிலர்; அதே தொகையை அரசாங்க அதிர்ஷ்ட சோதனைச் சீட்டுகளாக அளிப்பது என்பதை 'ஸப்போட்டு' செய்பவர் பலர்.

"நல்ல புத்தகமாகக் கொடுப்பது சிறந்தவழி" என்றது ஒரு சிறு குரல். "ஆனால், பாழுங்கிணறு மலராத மொட்டு என்பது போன்ற பெயர் கொண்ட நூல் அல்ல!" என்ற வறண்ட ஹாஸ்யம் முன் பேசியவர் மண்டையில் 'ணங்' என்று ஒரு குட்டுப் போட்டது.

சில நாட்களுக்குப் பிறகு அன்பளிப்புப் பிரச்னை என்னைத் தாக்கிற்று. தீபாவளியை உத்தேசித்து நான் மூன்று இளம் உறவினர்களுக்கு தலா பதினைந்து ரூபாய் வீதம் ஒரு மாத சஞ்சிகைக்குச் சந்தா கட்டினேன். மனம் கவரும் வாழ்த்துச் சீட்டுடன் முதல் பிரதி அவர்கள் கைக்கு கிடைத்து மகிழ்விக்கும்; அடுத்த 11 மாதங்கள் அவர்களுக்கு என் இனிய நினைவு வரும்—என நினைத்து நான் மனம் குளிர்ந்தேன்.

சில மாதங்களுக்குப் பிறகு இருவரின் மனைவிமாருடன் பேசுகையில் எனக்குக் கிடைத்த ஞானோபதேசம் சுருக்கமாக இவ்வாறு: "15 ரூபாய்க்கு வேஷ்டி, ஷர்ட்டு கிடைத்திருந்தால் எவ்வளவு சௌகரியம்!" என்று அவர் சொன்னார். "இரண்டு பக்கங்கள் புரட்டுவதற்குள் கும்பகர்ண உபாசனை ஆரம்பித்து விடுகிறார்; ஒருபிரதி முடிவதற்குள் அடுத்தது வந்து குதித்து விடுகிறது; இதற்கிடையே இரவல் மனஸ்தாபங்கள் வேறு; இரண்டு மூன்று இதழ்

கள் மேல் அட்டை பிரிக்காமலே கிடக்கின்றன.''

மறு தீபாவளி சமயத்தில் மூன்றுவது உறவினர் புகார் கூறினர்—''நீர் விளையாட்டாக ஆரம்பித்தது வினையாகி விட்டது. சந்தா புதிப்பிக்கும்படி தேனில் தோய்த்தெடுத்த கடிதங்களை விரட்டிவிரட்டி அனுப்புகிருர்கள்; சந்தாத் தொகையும் 18 ஆகி விட்டது. துன்பமாயிருக்கிறது. ஆசை ஒரு புறம்; பணமுடை மறு புறம்.''

ஒரு முறை எட்டு ரூபாய்ப் புத்தகமொன்று என் ஆசிகளுடன் பெற்று மகிழ்ந்த ஒருமணமகளின் தாய் தந்தையர் — ''பணமாக இருந்தால் செலவுகளைசிறிதாவது ஈடுகட்டும்,'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

சிறப்பு அங்காடிகளுக்கு முன் பணம் கட்டி மாதம் 0–50 பைசாவுக்கு உப்பும் புளியும் மணமக்களின் பெற்றோருக்கு அனுப்பி வைக்கும் வசதியுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

★

அருள்சிகாமணி :
தீனபந்து ஆண்டிரூஸ் விலை ரூ. 1–40

மௌலானு அபுல்கலாம் ஆஜாத் :
இந்தியா விடுதலை வெற்றி விலை ரூ. 6–50

வில்லியம் காண்ட்ரி :
தோரோ விலை ரூ. 2–00

ராதா குமுதமுகர்ஜி :
இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை
தமிழாக்கம்: பெ. நா. அப்புஸ்வாமி விலை ரூ. 2–50

பார்த்தசாரதி :
தமிழ் நாடு தந்த தலைவர்கள் விலை ரூ. 1–25

ஜெர்ட்ரூட்முர்ரே :
காந்திஜீ : அவரது வாழ்க்கை வரலாறு விலை ரூ. 1–25

ஓரியன்ட் லாங்மன்ஸ்
36–A, மௌன்ட் ரோட், மதராஸ்–2.

அக்கரை ஆர்வம்

அன்புள்ள அக்கா,
வணக்கம்

இன்றைய தமிழக நூலகர் களைப்பற்றியும் அவர்களின் நிலை மைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள, நீ காட்டும் ஆர்வத்திற் கும் அக்கறைக்கும் நன்றி.

உலக நூலகர்களே ஒன்று படுங் கள். தமிழக நூலகர்களே நெருங்கி வாருங்கள். எதையும் தாங்கும் இதயம் நமக்குண்டு. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங் கின்.........

கோஷங்களுடன் துவக்கப்பட் டுள்ள இக்கடித வாசகங்களைக் கண்டு, நீ மெல்ல, லேசாக சிரித் துக் கொள்வதை மானசீகமாக உணர்கிறேன்.

இனி இங்கு காணும் சூழ்நிலை களை அப்பட்டமாக எழுதி விடு கிறேன். அவற்றை நீ அறிந்து கொள்ளவும், தக்க பரிகாரங் களைக் காண, வழி முறைகளைக் கூறவும் பயன்படும் என்று எண் ணுகிறேன்.

சிறு வயது முதல் எனக்கிருந்த படிக்கும் ஆர்வத்தையும், சமூக உணர்வையும், பள்ளி, கல்லூரி களில் நான் செய்த சமூக நலப் பணிகளையும் அறிந்த நீ, நூலகப் பணிதான் எனக்கேற்ற தொழில் என்றாய். வருவாய் குறைவாக இருந்தாலும் கலைக்கோயி (நூல கம்) லிலிருந்து கொண்டு ஆற் றும் நூலகப்பணி—மக்கள் மன வளர்ச்சியை நன்கு வளர்க்கும், எனக்கு மன நிறைவை ஏற்படுத் தும்—மக்கள் பணி — மகேசன் பணி—என்றெல்லாம் என்னை உற் சாகப்படுத்தி—உன் வழியில்— உன் துறையில்என்னையும் ஈடு படுத்தினாய். மனமாரப் போற்று கிறேன். நல்ல பணிதான். வரு வாய் தான் போதவில்லை. ''வேலைக்கேற்ற ஊதியம்'' வேண் டாமா அக்கா? சக்திக்கேற்ற உழைப்பைத் தருகிறேன். உழைப் பிற்கேற்ற ஊதியம் எதிர்பார்ப்ப தில் தவறென்ன? ஊதியம் மட்டு மா? அந்தஸ்து............?

பத்தாண்டுகளுக்கு முன், உன் துணைவருடன், நீ 'கனடா' நாட்டிற்குச் சென்றபோது, கூறிய அன்புச் சொற்கள், இன்றும் என் நெஞ்சில் பசுமையாகப் படிந்துவிட்டன. தமிழர்கள் நல்லவர்கள். ஆனால் வல்லவர்களாக, ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்—குறிப்பாக தமிழக நூலகர்கள் ஒன்றுபட்டு ஒரே அணியாகத் திகழ வேண்டும் என்ற உன் இன்பக்கனவுகள், நினைவுகளாக நிறைவேறவில்லையே என்ற குறை—என் மனத்தில் நெஞ்சில் ஒரு முள்ளாக உறுத்திக்கொண்டிருக்கிறது.

பண்டைக் காலம் முதல் தமிழ் நாடு பல்வேறு துறைகளிலும் முன்னோடியாகத் திகழ்ந்து வந்திருக்கிறது.

"40 ஆண்டுகளுக்கு முன்பே, நூலகத்துறைக்கு, டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் ஆற்றிய சிறப்பு மிக்க தொண்டு, என்றென்றும் நிலையாக நிலைத்து நிற்கக் கூடியவை. அவரின் நூலக அடிப்படைக் கருத்துக்களையும், கோலன் நூல் பகுப்பு முறையையும், இன்னும் பலவற்றையும் உலகமே வியந்து, பாராட்டி மகிழ்கிறது. "நூலக இயல்" என்று அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். நூலகர்கள் நிலை உயர—அன்றும் இன்றும் அயராது பாடுபட்டு வருகிறார்"—என்ற செய்தி எல்லாம் நீ எனக்குச் சொல்லியவை தானே!

இன்று தமிழ் நாட்டில் நூலகங்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. உண்மையே! நூலகப் பணியின் தரமும், நூலக வசதிகளும், நூலகர்களின் நிலையும் இன்னும் உயராதது பெருங் குறைதான்.

நூலகர்களின் இன்றைய நிலை பற்றி அடுத்த கடிதத்தில் தொடர்ந்து எழுதுவேன்.

அன்புள்ள தங்கை
இந்திரா.

(தொடரும்)

★

எல்லாவிதமான காகிதங்கள்,
அட்டைகள், காலிகோ துணிகள்
எம்மிடம் கிடைக்கும்
விவரங்களுக்கு:
வள்ளியப்பா & கம்பெனி
2/40 ஆண்டர்ஸன் தெரு :: சென்னை-1
ஆபீஸ்: டெலிபோன்: 25867
வீடு: டெலிபோன்: 29891

சென்னை பல்கலைக்கழகத்திற்கு நன்றி

D. சச்சிதானந்தம்

1969 ஜுலை மாத நூலகம் பத்திரிகை இதழில் ''சென்னைப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனைக்கு'' என்ற தலைப்பில் வெளி வந்த கட்டுரையில், ''இந்த காந்தி நூற்றுண்டிலாவது சமதர்மத்தை நிலை நாட்டுக'' என்று விடுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகச் சென்னை மாநிலத்திலுள்ள நூலக ஆணைக்குழுக்களில் பணிபுரியும் நூலகர்களும், பள்ளி, கல்லூரி நூலகர்களைப்போல் நேரடியாகப் பட்டப்படிப்புத் தேர்வுகள் எழுத அனுமதிக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருந்தேன்.

நூலகர்களுடைய தேவைகளை நன்கு உணர்ந்த நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவியை ஏற்றவுடன் என்னுடைய வேண்டுகோளை அனுப்பிவைத்தேன். 10-10-69 அன்று கீழ்க்கண்ட உத்தரவு கிடைக்கப் பெற்றேன்.

பல்லாயிரம் தமிழ் மக்கட்கு ஊணும், உடையும், உயர்கல்வியும் தந்த கையால், நம்முடைய ஊழிய உயர்வுக்கு உற்ற ஊன்று கோலைத்தந்த சென்னைப்பல்கலைக் கழக துணைவேந்தர் பத்மஸ்ரீ திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கட்கும் சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட் சபைக்கும் என் சார்பிலும் தமிழ் நாடு நூலகர்கள் சார்பிலும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாவட்ட மத்திய நூலகத்தில் மூன்றுண்டு காலம் பணிபுரிந்த நூலகர்களுக்கு மட்டும் என்று இருக்கும் கட்டுப்பாட்டைத் தளர்த்தி கிளை நூலகங்களிலும் மூன்றுண்டு பணி புரிந்த நூலகர்களுக்கும் இச்சலுகையை வழங்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

UNIVERSITY OF MADRAS

University Buildings
Madras-5

—9 Oct 1969

OFFICIAL MEMORANDUM

No. C. R. 8801

Ref: His Letter dated 6-8-1969 addressed to the vice-chancellor.

He is, by direction, informed that the Syndicate considered his request and resolved that full-time Librarians, holding a Certificate or a Diploma in Librarianship of the Madras University who have not less than three years' service in the District Central Libraries in the State, be permitted to appear privately for the B.A. Degree Examination of this University.

It is now too late to apply for exemption for appearing for the B. A. Degree Examination of April 1970.

He may, however, apply for exemption for appearing for the B. A. Degree Examination of September 1970, a form for which can be had from this office on requisition, sometime in January 1970, together with a self addressed stamped envelope.

(sd)
Controller of Examinations

To,

Thiru D. Sachidanandam
Librarian
District Central Library
Chingleput

FOR ALL YOUR LIBRARY REQUIREMENTS,
BOOKS IMPORTED AS WELL AS INDIAN
FROM SELECT PUBLISHERS

Contact:

Lalvani Brothers

8, STATE BANK STREET

POST BOX 3745

MOUNT ROAD, MADRAS-2

Phone: 88306

★

Ask for free trade catalogue.

தமிழில் நூலகவியல்?

வே. தில்லைநாயகம் M. A; M. L. S; B. T.

0 தொடக்கம்

01 தமிழ்

தமிழ் — உலகச் செம்மொழிகளில் ஒன்று. அது அனாதி காலம் தொட்டு இருந்து வருகிறது. அதில் இலக்கியம், இலக்கணம் அறிவியல்கள் முதலியன ஏராளம், ஏராளம். எனினும் அதை முதன் முறையாக அறிபவர் ஆச்சரியப்படத்தான் செய்வர். காரணம் அதை இதுவரை உலகிற்கு சரியாக அறிமுகம் செய்துவைக்கவில்லை நாம்.

02 நூலகவியல்

நூலகவியல் (Library Science) அண்மையில் எழுந்த ஒரு புதிய துறை. அதற்கு இயல் என்ற சொல்லை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஐயப்படுபவர்களும் உண்டு. ஆனால் அறிவியல் என்றால் என்ன? அறிவியல் முறை என்பது என்ன? அது எவ்வாறு நூலகப் பணிகளில் கையாளப்பட்டு முன்னேறிவருகிறது என்று பொறுமையாகக் கவனிப்பவர்கள் அதை ஒப்புவர். இதை டாக்டர் அரங்கநாதன் அவருடைய நூலகப் பஞ்சசீலம் என்ற புத்தகத்தில் 'அறிவியல் முறையும் நூலகவியலும், அதன் முன்னேற்றமும்' என்ற அத்தியாயத்தில் அழகாக விளக்கியிருக்கிறார்.

03 முரண்

இதைப்பார்க்கும்போது பழைய மொழிகளில் ஒன்றான தமிழில் புதிய துறையான நூலகவியல் கருத்துக்கள் உள்ளன என்னும் போது முரணாகத்தான் தோன்றும். ஆனால் கற்பனையை விட உண்மை அதிசயமானது என்பது நாமறிந்ததே. எனவே தமிழில் நூலகவியல் என்னும் போது ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் நூலகக் கருத்து நமக்குப் புதிதல்ல; நீண்டகாலமாக கையாளப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் நூலகவியலும் தமிழும் அறிந்த நூலகர் யாரும் இதை நுணுகிப் பார்த்து, அலசி ஆராய்ந்து, விளக்கிச்

சொல்ல முன்வரவில்லை. இப்போது இது ஒரு சிறு முயற்சி.

1 நூல்

11 நூல் என்றால் என்ன?

நூல் (Book) ஒரு செய் பொருள். நிரந்தரமும், கையாள வசதியும் கொண்டு ஒருவர் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க உதவும் ஒரு கருவி. அது இடம் கடந்து, காலங் கடந்து, அறிவைத் தெரிவிக்க, வளர்க்க, பரிமாற, பெருக்க, பாதுகாக்க உதவுகிறது. இது ஒவ்வொரு நாகரிக சமுதாயமும் அறிவைக் காக்கவும் உணரச் செய்யவும் உதவுகிறது.

12 தொல்காப்பியர்

கி. மு. 1000க்கும் கி. மு. 600க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பழம்பெரும் புலவர் தொல்காப்பியர், தனது நூலான தொல்காப்பியத்தில் கட்டளை நூல் (Standard for a Book) பற்றிய கருத்தை—உள்ளடக்கத்தை, நூல் வகை முதலியவை பற்றிய கருத்தை-தெளிவாகக் கூறியிருக்கிறார். அது இது.

121 பொருள்

நூல் என்று சொல்லப்படுவது முன்னும் பின்னும் மாறுபடாமல், தொகுத்தும், வகுத்தும், பொருள் விளக்கி, விரிந்த உரை கொண்டு, நுண்பொருள் விளக்கம் தரவேண்டும். அது பல வகைப்படும். அவையாவன:

122 உரை வகை

உரை வகை நான்கு. அவை யாவன:

1. இடையிடையே பாட்டு இணைந்த உரைநடைக் குறிப்பு

2. பாட்டு இல்லாமல் சூத்திரத்திற்கு எழுதிய விரி பொருள்.

3. பொருள் தொடர்பில்லாத புனைந்துரை.

4. பொருள் பொதிந்த நகைச்சுவைக் குறிப்பு.

123 முதுமொழி

கூர்மையும், சொற்செட்டும், விழுப்பமும், எளிமையும்கொண்டு அறம், பொருள், இன்பத்தை விளக்கிச் சொல்வது முதுமொழியாகும்.

124 மந்திரம்

அடுத்தவருக்குப் புலனாகாமல் சொல்லிய பயனைத்தரும் வகையில் மறைத்து உரைக்கப்படுவது மந்திரமாகும்.

125 குறிப்பு

வெளிப்படையாகக் கூறப்படும் எழுத்து, சொல், பொருள் முதலியவைகளோடு தொடர்பில்லாது சிலருக்கே விளங்கும் பொருள் தரும் சொற்கள் நிறைந்தது குறிப்பு மொழியாகும்.

126 பிற

தொடுத்து நூல் பிரிவுகள், பத்துக் குற்றங்கள், முப்பத்திரண்டு உத்திகள், விளக்க வகைகள் முதலியன விரித்துரைக்கப்படுகின்றன.

13 பவணந்தி

அடுத்து கி. பி. 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த பவணந்தி முனிவர் தனது நன்னூலில் நூல் என்று பெயர் வரக் காரணம், நூலின் உள்ளடக்கம் முதலியவைகளை விரித்துரைக்கிறார். அஃதாவது

131 உள்ளடக்கம்

நல்ல நூலை ஆராய்ந்து பார்த்தால் அது கீழ்க்கண்டவைகளை கொண்டிலங்க வேண்டும்:

1. பொது, சிறப்பு என்று இரு பாயிரங்கள் இருக்க வேண்டும்.

2. முதல், வழி, சார்பு என்ற மூன்று நிலையில் ஒன்றாக இருக்க வேண்டும்.

3. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயன்களைக் காட்டவேண்டும்.

4. கருத்தை விளக்கும்போது எழுவகை மதங்களைக் கையாண்டிருக்க வேண்டும்.

5. பத்துக் குற்றங்களைத் தவிர்த்திருக்க வேண்டும்.

6. பத்து அழகுகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

7, கருத்தை விளக்குவதில் முப்பத்தியிரண்டு உத்திகளை உபயோகப்படுத்தியிருக்க வேண்டும்.

8. ஒத்து, படலம், சூத்திரம் என்ற பிரிவுகள் காட்டியிருக்க வேண்டும்.

9. பதினான்கு வகை உரை முறைகளைச் சொல்லியிருக்க வேண்டும்.

2 நூலகம்

நூலகம் (Library) உயிர்க்குலத்தின் நினைவுச் சுருக்கமாகும். அது பெரியார்களின் பெருமைகளையும், உணர்ச்சியாளர்களின் உன்னதக் கற்பனைகளையும், சிந்தனையாளர்களின் சீரிய கருத்துக்களையும் இணைத்துத் தருகிறது. சுருங்கச் சொன்னால் நேற்று, இன்று, நாளை என்ற முக்காலத்தையும் பிணைத்து, அவைகளில் இணைந்து வந்த சமுதாயச் சித்திரத்தைப் பிரதிபலிக்கிறது.

---

117 மொழிகள்

உலகின் மிகப் பெரிய நூலகங்களில் பெர்லினிலுள்ள 'ஜெர்மன் ஸ்டேட்லைப்ரரி'யும் ஒன்று. இதில் இருபதுலட்சம் நூல்கள் உள்ளன. பெர்லின் முனிசிபல் நூலகத்தின் வாயிற் கதவில் உலகிலுள்ள 117 மொழிகளின் முதல் எழுத்துக்கள் அழகாகப் பொறிக்கப் பட்டுள்ளன.

—இ. ஜெ. இருபது நாட்கள்

---

21 நாலடியார்

சங்க காலத்துச் சிறந்து விளங்கிய 37 நூற்களில் ஒன்றான நாலடியாரில் 318ம் பாடலில் நூலகம்பற்றியும், நூலகர் பற்றியும், நூலகத்தைப் பயன்படுத்துவார் திறம் பற்றியும் விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இது.

புத்தகமே சாலத் தொகுத்தும்
பொருள் தெரியார்
உய்த்தகமெல்லாம் நிறைப்பினும்
—மற்றவற்றை
போற்றும் புலவரும் வேறே
பொருள் தெரிந்து
தேற்று புலவரும் வேறு.

22 மணிமேகலை

சாத்தனார் எழுதிய மணிமேகலையில் ஆபுத்திரன் திறமுரைத்த காதையில் வரும் செழுங்கலை நியமம் என்ற சொல் நூலகத்தைக் குறிக்கிறது என்பர்.

23 சரசுவதி பண்டாரம்

கல்வித் தெய்வம் — சரசுவதி —இருப்பிடம் சரசுவதிபண்டாரம்.

அதாவது நூலகம். சரசுவதி பண்டாரம் என்ற சொல் நூற்கள் சேர்த்து வைக்கும் இடம் என்ற பொருளில் இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் பல இடங்களில் காணப்படுகின்றன.

3 பகுப்பு

31 பொருள்போக்கு

நூலகத்தில் பகுப்பு(Classification) ஒரு சிறப்பான வேலை. நூற்களை பொருள் போக்கில் தொடர்புள்ளவைகளை இணைத்தும், பிறவற்றை அதனதன் இடத்திலும் அடுக்கி வைக்கப் பகுத்தும் தொகுத்தும் வைப்பது பகுப்பு வேலையாகும். இப்படி வைப்பது வாசகர்கள் தமக்கு வேண்டியவைகளைத் தாமதமின்றி கண்டு கொள்ள உதவும். இது பொருள் போக்கு எனப்படும்.

32 சங்க இலக்கியப் பகுப்பு

சங்க இலக்கிய நூற்கள் பொருள் போக்கில்தான் பிரிக்கப் பட்டுள்ளன. அதன்படி முதலில் மேல் கணக்கு,கீழ்க்கணக்கு என்று இரு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. தொடுத்து மேல்கணக்கு எட்டுத்தொகை என்றும் பத்துப் பாட்டு என்றும் பகுக்கப்பட்டுள்ளன. கீழ்க்கணக்கு என்பது மேற் கூறியவை தவிர்த்த பதினெட்டு நூற்களைக் குறிப்பிடும். அடுத்து அவை ஒவ்வொன்றும் அகம்,புறம் என்ற இரு பிரிவாகப் பகுக்கப் பட்டுள்ளன.

4 அடிவகை ஐந்து

41 ஐவகை

தேசீய நூலக ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் அரங்கநாதன் அவர்கள் கருத்துப்படி, உலகக் கருத்து ஒவ்வொன்றையும் ஆளுமை (Personality) பொருண்மை (Matter) சக்தி அல்லது செயல் (Energy) இடம் (Space) காலம் (Time) என்று ஐந்து அடிவகை (Fundamental Categories) களாகப்பிரிக்கலாம்.

42 சங்க அடிவகை

சங்க இலக்கியத்து அகப் பொருள் இலக்கியம் ஏழு திணை ஏழு ஆளுமைகளாக (1) குறிஞ்சி (2) முல்லை, (3) மருதம், (4) நெய்தல், (5) பாலை, (6) கைக்கிளை, (7) பெருந்திணை எனப் பிரிக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு திணையும் இடத்தையும் காலத்தையும் குறிக்கும் முதற்பொருள்: தெய்வம், உணவு, பிராணிகள், மரங்கள், பறவைகள், பறை, செய்தி முதலிய பொருண்மைகளைக் குறிக்கும் கருப்பொருள்: செயலைக் குறிக்கும் உரிப்பொருள் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்து இன்றைய அடிவகைகளை அன்றையத் தமிழர் அறிந்திருந்தது பற்றியும், 'உயர் சிந்தனைகள் காலம் கடந்தன' என்ற நல்வாக்கு உறுதியாவது பற்றியும் அறிகிறோம்.

5 நினைவுக் குறி

51 பொருள்

ஒரு குறிப்பிட்ட கருத்தை-பொருளை - மறக்காமல் நினைவுக்குக் கொண்டுவர-அதன் தொடர்பான செய்தியை ஞாபகமூட்ட உதவும் குறியீட்டுக்கு நினைவுக் குறி (Mnemories) எனப் பெயர். இதை இன்றையப் பகுப்பு முறை பேரளவில் பயன் படுத்தி முன்னேறி வருகிறது.

52 அகநானூற்றில் நினைவுக்குறி

எட்டுத்தொகைகளில் ஒன்ருன அகநானூரறைத் தொகுத்த புலவர் உருத்திர சன்மர் நினைவுக் குறியை நன்கு பயன்படுத்தி இருப்பதைக் காண ஆச்சரியமாயிருக்கிறது.

அதன்படி:

1. ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்று ஒற்றைப் படை எண்களை முடிவாகப் பெறும் பாடல்கள் பாலைத்திணையின.

2. இரண்டு, எட்டு என்று வரும் எண்களை முடிவாகப் பெறும் பாடல்கள் எல்லாம் குறிஞ்சித் திணையின.

3. நான்கு என்று வரும் எண்களை முடிவாகப் பெறும் பாடல்கள் எல்லாம் முல்லைத்திணையின.

4. ஆறு என்று வரும் எண்களை முடிவாகப் பெறும் பாடல்கள் எல்லாம் மருதத்திணையின.

5. சுன்னம் என்ற எண்ணை முடிவாகப் பெறும் பாடல்கள் எல்லாம் நெய்தல் திணையின.

இம்முறையிலே அகநானூற்றில் பாலைத்திணையில் 200 பாடல்களும், குறிஞ்சித் திணையில் 80 பாடல்களும், முல்லைத் திணையில் 40 பாடல்களும், மருதத்திணையில் 40 பாடல்களும், நெய்தற்றிணையில் 40 பாடல்களுமாக ஆக மொத்தம் 400 பாடல்கள் 5 திணைகளில் அடக்கப்பட்டுள்ளன.

6 நூலகர்

61 பணி

நூற்களைத் தொகுத்து, பத்திரப்படுத்தி, பாதுகாத்து, அவைகளைப் பயன்படுத்தும் வண்ணம் பணி புரிவதுதான் நூலகர் (Librarian) வேலையாகும்.

தேசத் தலைவர்கள், அறிஞர்கள், மகான்கள், வீரர்கள் வாழ்க்கை வரலாறு

(படங்களுடன்)

மகாத்மா காந்தி
பாலகங்காதர திலகர்
கோபால கிருஷ்ண கோகலே
சித்தரஞ்சனதாஸ்
சுபாஷ் சந்திரபோஸ்
மோதிலால் நேரு
மதன்மோகன் மாளவியா
சர்தார் வல்லபாய் படேல்
சத்திய மூர்த்தி
காமராஜ்
ராஜேந்திர பிரசாத்
விநோபா பாவே
லால்பகதூர் சாஸ்திரி
டாக்டர் இராதாகிருஷ்ணன்
இந்திரா காந்தி
ரவீந்திரநாத் தாகூர்
அறிஞர் அண்ணதுரை
ஏசுவின் வாழ்க்கை
இராசாராம் மோகன்ராய்
சரோஜினி தேவி
சுப்பிரமணிய பாரதியார்
வீரபாண்டிய கட்டபொம்மன்
வ. உ. சிதம்பரம்பிள்ளை
திருப்பூர் குமரன்
திருவள்ளுவர்

ஒவ்வொன்றும் விலை ரூ 1-25

வானதி பதிப்பகம்

82-11, பாண்டிபசார்
தியாகராயநகர், சென்னை-17

புலி ராஜா!

இந்தியச் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றைப் பல மொழிகளிலிருந்தும் திரட்டி ஜெர்மனியில் மொழி பெயர்த்துப் பிரசுரித்திருக்கிறார்கள். இப்புத்தகத்தில் 'கல்கி'யின் 'புலிராஜா' என்ற நகைச் சுவைக் கதையும் இடம் பெற்றுள்ளது. புத்தகத்தின் தலைப்பும் அதுதான்.

—இ. ஜெ. இருபது நாட்கள்

---

62 சரசுவதி பண்டாரிகா

இம்முறையிலே சரசுவதி பண்டாரத்தை—நூலகத்தை இயக்கி வந்தவர் சரசுவதி பண்டாரிகா - நூலகர் - என்று பெயர் பெற்றார்.

63 பண்டாரபுத்தகமுடையார்

புத்தக பண்டாரத்தை - நூலகத்தை - நிர்வகித்து வந்தவர் **பண்டாரபுத்தகமுடையார்** என்று அழைக்கப்பட்டார்.

சிதம்பரம் கோயிலிலுள்ள சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251) காலத்துக் கல் வெட்டு ஒன்று இப்படிக் குறிப்பிடுகிறது.

7 முடிவுரை

71 பொற்காலம்

இதிலிருந்து இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயே - தமிழர்களின் பொற்காலமாகிய தொல்காப்பியர் காலத்திலேயே - நூலகவியல் கருத்துக்களைக் காண்கிறோம்.

தொடர்ந்த பிற்காலத்திலும் கூட பவணந்தியார் காலம் வரை அறிவியலில் உயர் சிந்தனைகளைக் காணமுடிகிறது. அதன் காரணமாகவே கட்டளை நூல் இலக்கணம் கூற முடிந்தது அவரால்.

72 புறக்கணிப்பு

ஆனால் அத்தகு சிந்தனையைப் புறக்கணித்ததன் காரணமாக - வாழ்வின் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட அயலார் பாதிப்பு காரணமாக - மாறாத அரசியல் மாற்றம் காரணமாக - அனைத்திற்கும் மேலாக மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவைகளில் தமிழர் கவனம் செலுத்தாத புறக்கணிப்பு காரணமாக - அன்றையப் பெருமையை மறந்தோம். இன்றைய சிறுமையிலே அதைப் பார்க்கும்போது ஆச்சரியமாய் தெரிகிறது.

73 நம்பிக்கை

1947ல் நாம் சுதந்திரம் அடைந்த பிறகு—மெல்ல மெல்ல ஆனால் நிச்சயமாக - அந்த நிலைமை மாறிவருகிறது. அதன் காரணமாகவே இன்று (1968 ஜனவரி) சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு நடக்கிறது. இனிமேலாவது உலக அமைதிக்காக-ஒருமையுணர்வுக்காக - நல்லது எண்ணி, நல்லது செய்ய முனைவோமாக.

8 மூலம்

சென்னையில் 1968 சனவரியில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டின் போது தமிழக அரசு வெளியிட்ட உலகத் தமிழ் மாநாடு விழா மலரில் வெளியான வே. தில்லைநாயகம் எழுதிய Library Science in Tamil என்ற ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கம் இது.

நூலகக் கட்டடக் கலையில் பல புதுமைகள்

கருடாழ்வார்

நவீன நூலகம்

பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற பசும்புல் தரை. எழிலும் ஏற்றமும் கொழிக்கின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள சோலை. இன்றையப் பூங்கா போன்ற அமைப்புகள். ஆங்காங்கே அழகு கொழிக்கும் புதர்ச் செடிகளும், வண்ணமலர்ச் செடி கொடிகளும் நிறைய உண்டு. அவற்றின் இடை இடையே சுகம்தரும் இருக்கைகள் போடப்பட்டுள்ளன. உள் முற்றம் கொண்ட இச்சதுர வடிவப் பூங்காவைச் சுற்றிலும் மிக முக்கிய அதிகமாகப் பயன் படுத்தும் நூலகத்தின் பகுதிகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில் நீண்ட நேரம் தங்கிப் படிக்க யாருக்குத்தான் மனம் வராது? படித்துக் கொண்டிருக்கும் போதே, சோர்வு ஏற்பட்டால் அதைப் போக்கிக்கொள்ளவும், புத்துணர்ச்சி பெறவும், இருக்குமிடத்தி லிருந்துகொண்டே சிற்றுண்டி சாப்பிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திருவள்ளுவரின் எண்ணம் மிகக் கச்சிதமாக செயல்படுகிறது இங்கே...

செவிக்குண வில்லாத போழ்து
சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்
(திருக்குறள் 412)

இத்தனை வசதிகளும், புதுமைகளும் நிறைந்த மிக நவீன நூலகம் எங்கே தெரியுமா? இங்கல்ல! இங்கிலாந்து நாட்டில் வெஸ்ட் நார்வுட்டில் மிகச் சமீபத்தில் தோன்றியுள்ளது. இந்நூலகம், நூலகக் கட்டடக் கலையில் பல புதுமைகளுடன் கூடியதாய் எடுத்துக்காட்டு நூலகமாக அமைந்துவிட்டது.

கட்டடக்கலை திட்டஅமைப்பையும் நவீனஉத்திகளையும் இணைத்து

உருவாக்கப்பட்ட நூலகம் இது. இங்கே இல்லாதன இல்லை. சகல வசதிகளும் மிக நவீன முறையில் பயனுள்ள விதத்தில் உருவாக்கப் பட்டுள்ளன. 'எல்லோர்க்கும் நூலகம்' என்ற சமுதாய மைய மாய் நூலகங்கள்தான் பணி யாற்ற முடியும். முன்னேற்ற எண்ணங்களுக்கு முதலிடம் தரப் பட்டுள்ள நூலகம் இது.

இத்தகைய சிறப்பம்சங்கள் மிகுந்த நூலகத்தைத் திறந்து வைக்க இளவரசி மார்கரெட் தான் மிகத் தகுதி படைத்தவர். காரணம், இளவரசியின் கணவர் ஒரு புகழ் மிக்கக் கட்டடக்கலைத் திட்ட நிபுணர். ஏராளமான குழந்தைகளுக்கான வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன. தாய் மார்களின் கவலைகளையும், தாதி களின் சிரமத்தையும் குறைக்க பல ஏற்பாடுகள் இந் நூலகத்தில் உண்டு.

1969ம் ஆண்டு ஏப்ரல் மாதத் தில் இந்நூலகத்தை, சிறப்பம்சங் கள் மிக்கநூலகம் எனப்பாராட்டி திறந்து வைத்தார் மார்கரெட். இந்நூலகத்தின் தலைவர் திரு கே. ஆர். மெக்கால்வின் அரசியை அழைத்தது எவ்வளவு பொருத் தம் பாருங்கள்.

சிறுவர் நூலகம்

சிறுவர் நூலகப் பகுதியை இரு பிரிவுகளாகப் பிரித்து அமைத் துள்ளனர். ஒருபகுதியில், இளை யோர் வீடுகளில் காணப்படும் மேஜை நாற்காலி போன்றவை போல், சுகமாக இருந்து படிக்க வசதிகள்உள்ளன. இங்கு நூல்கள் பழமையான பாணியிலேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இளம் சிறுவர்களுக்கு, குழி போலாழ்ந்த வண்ண விரிப்பு களால் அலங்கரிக்கப்பட்ட தரை, திண்டுகள் இட்ட நாற்காலிகள், இடை இடையே வண்ணப் படங் கள் மிக்க நூல்களை நூல் கூடை களில் நிரப்பி படிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

அச்சம் தெளிய

முதன் முதலாக நூலகத்திற்கு வரும் எந்தக் குழந்தையும் அதன் போக்கில் தவழ்ந்து விளையாடவோ, முட்டி போட்டு நிற்கவோ, சப்பரமாக உட்கார வோ, இந்நூலகத்தில் பல வசதி கள் செய்யப்பட்டுள்ளன. குழந்தைகளின் மனம்போல் விளை யாடவிடும் இம்முறை மிகவெற்றி கரமாக செயல் படுகிறது இங்கே.

இளையோர் நூலகம்

11, 12 வயது இளைஞர்களின் தேவைகளுக்கு ஏற்ப பல சிறப்பு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. நூலகத்தின் இப்பகுதியில் மாணவர்கள் வீட்டுப் பாடங்களை செய்து முடிக்கவும், ஓய்வாகநூல் களைப் புரட்டிப் பார்க்கவும், தங்கள் நீண்ட நேரத்தைச் செல விடத் தக்க முறையில் மிக நேர்த்தியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளள.

புதிய புத்தகங்களின் காட்சிப் பகுதி மிக நூதன முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

உலக முக்கிய நிகழ்ச்சிகளின் கவர்ச்சி மிக்க சிறப்புப் படங் களின் தொகுப்பை காட்சிக்கு வைக்கிறார்கள். நூலகச் சித்திர ஓவியக் கலைஞரின் கைவண்ணத் தால், அவை அன்றாடம் கவின்மிகு காட்சிப் பொருளாக அமைக்கப் படுவதை, வாசகர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். நீகிரோவரின்

ஆரவார இசைக்கூத்திலிருந்து அமெரிக்க விண்வெளி, சந்திர மண்டலப் பயணம் ஈருக—அப்பெல்லோ—11, அம்புலியில் அமெரிக்கர்கள் ஆகிய நிகழ்ச்சிகளின் செய்திகளை படங்களின் காட்சி அமைப்பில் கண்டு மகிழலாம்.

கலர் டெலிவிஷன்

மனித குல வரலாற்றில் மிகச் சிறப்புமிக்க முன்னேற்ற நிகழ்ச்சியான மனிதன் சந்திரனில்—அம்புலியில்—காலடி எடுத்து வைத்த நிகழ்ச்சிகளை கலர் டெலிவிஷனில் வாசகர் கண்டு மகிழ, அத்தருணத்தில் இந்நூலகத்தில் கலர் டெலிவிஷன் அமைக்கப்பட்டது. அனைவரும் இத்தருண ஏற்பாட்டைப் போற்றினர்.

2000 நூல்களுடனேயே இளைஞர் பகுதி துவக்கப்பட்டது. அவர்களுக்கு மிகவும் பிடித்த, சுவையான படங்கள் மிக்க நூல்களாக இவை தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்நூல்கள் எப்படிப் பயன்படுத்தப் படுகின்றன என்பதை இடைவிடாது கவனித்து வருகிறார் நூலகர் திரு. மெக்கால்வின்.

பயன்படுத்தப் படாமல் அலமாரிகளில் முடங்கிக்கிடக்கும் நூல்கள் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டு, புதியவை இங்கு சேர்க்கப்படுகின்றன.

''பழையன கழிதலும், புதியன புகுதலும் மரபுதானே!''

இப்பகுதி பெரியவர்களின்பகுதியோடு மிக லாவகமாக, எந்தவித இடைத் தடுப்புகளும் இன்றி இணைக்கப்பட்டுள்ளது.

புதிய நூல்கள்

எஸ். சங்கரன்
- இளைய ஜெர்மனியில் இருபதுநாட்கள்
- கதம்பம்

ஆர். சூடாமணி
- அந்த நேரம்

அசோக மித்திரன்
- கரைந்த நிழல்கள்

எம். பி. சுப்பிரமணியம்
- கோர்ட் உலகம்

கோமதி ஸ்வாமிநாதன்
- ஒருமைப்பாடு வீடு

சுப்பு ஆறுமுகம்
- விடுதலை வேள்வி

பிலோ இருதயநாத்
- மேற்குமலை வாசிகள்

செம்பு ஆறுமுகம்
- குறளும் கீதையும்
- தெய்வ மணம்

மல்லிகை பதிப்பகம்

15, நாணுராவ் தெரு

தியாகராயநகர் சென்னை-17.

நாவல்கள் பகுதி

நூல் கொடுத்து வாங்கும் பிரிவில் பல்வகைப்பட்ட தரப்புகளிலும் பல்வேறு நிலைகளைக் கொண்ட சிறப்பான நூல்கள் மிகக் கவனத்துடன், பயன் ஒன்றையே மிக முக்கிய நோக்கமாகக் கருதி, தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளன. நாவல்களை எடுத்துச் செல்வோரின் தொகை இங்கும் மிகுதிதான். ஆ க வே நூல் கொடுத்து வாங்கும் மேஜையிலிருந்து சற்றுத் தள்ளியே இவை வைக்கப்பட்டுள்ளன.

நுண்கலை, பயன்கலை, பொழுது போக்குக்கலை நூல்களின் பகுதிகளுக் கருகில் மிக விசாலமான மேஜைகள் போடப்பட்டுள்ளன. இப்பிரிவு நூல்கள் உருவத்திலும், எடையிலும், பெரியதாகவும், கனமானதாகவும் இருப்பதாலேயே இச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாசகர்கள் தாங்களே எந்த நூலை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கக்கூடிய "திறந்த நூலக அமைப்புமுறை" கொண்ட நூலகமிது, ஆங்கில எல் எழுத்து வடிவத்தில் அலமாரிகள், உயரம் அதிகமின்றி பொருத்தமான நவீன முறையில் நூலகம் முழுவதும் ஒருமைப் பாட்டுடன் இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆறு அலமாரிகளில் நாவல்களும், ஐந்தில் விஞ்ஞான, இதர நூல்களும், நான்கில் பெரிய அளவு கலை, ஓவியச் சிறப்பு நூல்களும் இருக்குமாறு பிரித்து, தொகுத்து, பகுத்து பட்டியலிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

நூலக இருப்பு

10,000 நாவல், புதின கதைநூல்கள் ***26,500*** விஞ்ஞான

உடுமலை சந்திரன்

அன்பு மாளிகை	6 00
பன்னீர் பூ	7 00
கிழக்கும் வெளுத்தது	7 00
ஓ! அந்த இனிய நாட்கள்!	6 00

எம். விஸ்வநாதன்

பத்தினிப் பாவை	3 50

குயிலிராஜேஸ்வரி

பூங்குயிலி	5 00

பூவை எஸ். ஆறுமுகம்

அக்கினி சாட்சி	3 00

பி. ஸ்ரீ

தமிழரும் கலையுணர்வும்	4 00
வாழ்க்கையில் இலக்கியமும் பண்பாடும்	4 00

கே. எஸ். லட்சுமணன்

பாரதநாட்டுத் தத்துவ ஞானியர்களின் குரல்கள்	3 50

பத்மஜோதி பிரசுராலயம்

53-56, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

FOR QUALITY TEXT BOOKS
FOR ALL CLASSES IN
ELEMENTARY SCHOOLS
AS WELL AS
HIGH SCHOOLS
AND
OUTSTANDING GENERAL
PUBLICATIONS
IN ENGLISH,
TAMIL & TELUGU

Please apply to or step in at :

The Teachers' Publishing House,
Educational Publishers,
53-56, Coral Merchant Street,
MADRAS-1.

நூல்கள் ஆக 36,500 நூல்கள் இந் நூலகத்தின் இப்போதைய மொத்த இருப்பாக உள்ளன.

அரசியின் ஆர்வம்

இந் நூலகத்தைத் திறந்து வைத்துப்பார்வையிட்ட இளவரசி மார்கரெட், 12 கினியாக்கள் மதிப்புள்ள கலை நூல் ஒன்றை எடுத்து, 'இத்தகையவிலைஉயர்ந்த நூல்களையும் இந்நூலகத்திற்கு வாங்குகிறீர்களா?' என நூலகரைக் கேட்டார்.

'இப்படிப்பட்ட கலை, ஆபூர்வ, சிறப்பு விலை உயர்ந்த நூல்களை வாங்கி வைக்காவிட்டால், இத்தகைய நூல்களைப்பலவாசகர்கள், தன் வாழ்நாள் முழுவதிலுமேயே பார்க்கக் கூட முடியாமல் போய் விடும் வாய்ப்பு மிகுதியாகஉண்டு.

மார்கரெட் இளவரசி நூல்களைப் பார்வையிடுகிறார். உடனிருப்பவர் லேம்பத் மேயர்.

இத்தகைய ஏமாற்றத்தை தவிர்க்கவே இந்நூல்கள்வாங்கி வைக்கப் படுகின்றன' என்றார் நூலகர் திரு மெக்கால்வின்.

ஒளி, ஒலி ஏற்பாடுகள்

நூல்களை, சிரமமின்றி, நூலடுக்குகளிலிருந்து தேர்ந்தெடுக்க, அவை மீது ஒளிபடும் விதத்தில் ஒளி விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு அலமாரியின் மேலிருந்தும் நூல்களுக்கு ஒளிபடும் வகையில் கவசங்களிட்ட டியூப் லைட்டுகள் நவீன முறையில் பொருத்தப் பட்டுள்ளன.

இரவில் கூடுதல் ஒளி வசதிகள் கண்ணுக்கு சிறிதும் சிரமமின்றி நீண்ட நெடுநேரம் தொடர்ந்து படிக்கத் தூண்டும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய ஒளி ஏற்பாடுகள் நூலகத்திற்கு மிக இன்பம் நல்குகிற சொகுசான ரம்மியமான சூழ் நிலையை உருவாக்கி நூலக வாசகர்களுக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் கூட்டுகின்றன.

இயற்கைப் பொருள்களை அதிக நுண் நய ஒப்பனையின்றி, பயன் கருதியே, இந்நூலகக் கட்டடத்திற்குப் பயன் படுத்தியுள்ளனர். செங்கல் சுவர்கள் வெண்மை நிற வண்ணப் பூச்சுடனிருக்கும். நூலகத்தின் உட் கூரை வார்னீஷ் செய்யப்பட்ட மரத்தினாலானது தான்.

இசைத் தட்டுகள்

முதல்தரமான இசைத்தட்டுகள் உள்ள நூலக மிது.

நூல்களைத்தேர்ந்தெடுக்குமிடங்கள், அவைகளைப்படிக்குமிடங்கள் மிக அமைதியான சூழ்நிலையை

கொண்டவை. அங்கெல்லாம் பசுமை நிறமும் காவி நிறமும் கலந்த கூட்டு நிறத்திலான விரிப்புகளால் தரை மூடப்பட்டு, மனதைக் கவரும் வண்ணம் சுத்தமாக இருக்குமிடமாகத் திகழும். இசைத்தட்டுப்பிரிவிலும் இவ்வித ஏற்பாடே உண்டு.

மூல இசைத் தட்டின் ஒலியை அப்படியே கேட்டு அனுபவித்து இன்புற, தொலை பேசியில் செவியுடன் பொருந்த வைத்து, ஒலி (வாங்கு) பெறும் கருவிகள், ஆயிரக்கணக்கான இசைத் தட்டுகள், மற்ற நவீன உபகரணங்கள்ஆகிய இத்தனையும் கொண்டு, சிறப்பு மிக்க இசைத் தட்டு நூலகம் என அழைக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

சிறிய நாற்காலிகள், நீல சாய் விருக்கைகள், பளபளப்பான செம்மஞ்சள் நிற ஆடும் சாய்வு நாற்காலிகள், இப்படி ஆசனங்களின் வண்ணங்கள் கண்ணைக் கவரும் ஏற்பாடுகளாய் அமைந்துள்ளன. இதேபோன்றவண்ணக் கலவைகள் நூலக ஆட்சி அலுவலகம், பணியாளர் அறைகள் அனைத்திலும் கூட உண்டு.

நூலகரும் கற்பனையும்

திரு. மெக்கால்வின் கற்பனையோடு, பயனையும் இணைத்து உருவாக்கியுள்ள நூலகக்கட்டடத் திட்டம் இது. வாசகர்கள் எங்குமே பெற முடியாத வசதிகளை இங்கு அளிக்க வேண்டுமென்பதே அவரின் சிறப்பு விருப்பமாகும்.

நூலகப் பணியில் ஆர்வமும் நூலகப் பயிற்சியும், அநுபவமும் மிக்க துடிப்பான 14 நூலகத்துணைவர் புடை சூழ, முதல்தரமான வேலை வாய்ப்பு, வசதி, சூழ்நிலையில் சுறுசுறுப்போடு திரு. மெக்கால்வின் பணியாற்றுகிறார்.

எளிதில் இயக்கவும், இடமாற்றம் செய்யவும் வசதி படைத்த நூலகக் கருவிகளையும் இதர சாய்வு மேஜைகளையும், நூலகத் தரத்திற்கிசைந்த பயன் மிக்க முறையில் உருவாக்கியுள்ளார் நூலகர் திரு மெக்கால்வின்.

சக்கர தள்ளு வண்டி

திரும்பி வரும் நூல்கள், புதிய நூல்கள் ஆகியவற்றை நூலடுக்குகளில் வைக்க சக்கர தள்ளுவண்டிகளைப்பயன்படுத்துகின்றனர். இந்நூலகத்தில் வாரம் பல ஆயிரக்கணக்கான நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கவனம்

வாசகர்கள் நூல்களைப் படித்துவிட்டுத் தரும் போது, நூல்கள் மிகமிகக் கவனமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. பைண்டிங் செய்ய, புதிய பிரதிகளை வாங்க, வேற்று நூலக இரவல் நூலாக இருப்பின் அங்கு திருப்பி அனுப்ப என்று வகை வகையாகப் பிரிக்கப்படுகிறது.

நூல் வழங்குமிடத்திற்கும், வாங்குமிடத்திற்கும், நூல்கிடங்கிற்கும் செல்லும், ''லிப்டுகள்'', இயங்கும் சக்கர தள்ளுவண்டிகளை (டிராலிகளை)யும் ஏற்றிச் செல்லக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

நூலகப் பணியாளர்கள் கைகளில் தூக்கிச் செல்லும் சிரமம் குறைக்கப்பட்டுள்ளது.

நூல்கள், பருவஏடுகள், இசைத் தட்டுகள் மட்டும்தான் மேற்கு நார்வுட் நூலகத்தில் உண்டு என்று எண்ணிவிட வேண்டாம்.

கலாசார நிகழ்ச்சிகள்

கலாசார, கல்வி, பொழுது போக்கு நிகழ்ச்சிகளேயும் அங்கே சிறப்பாக நடத்திட வசதிகள் உள்ளன.

12 எதிரொலி இல்லாத அமைதி மிக்க அறைகள் உள்ளன. மாணவர்கள், இங்கே நீண்ட நேரம் தங்கிப் படிக்கலாம்.

திருமணங்கள், விருந்துகள், கேளிக்கைகள் நடத்த வசதிமிக்க நவீன அறைகள் வாடகைக்குக் கிடைக்கும் இங்கே. குளியல் அறை சமையல் அறை உடுப்பு மாற்றும் அறை ஆகியவற்றில் நவீன நூதன பயன்மிக்க எளிதில் உதவக்கூடிய சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. சமைக்கவும், குளிக்கவும், உடுத்தவும் இருக்கும் வசதிகளேப் பார்த்தால் அசந்து போய்விடுவோம்.

சமூக மையம்

பல்வேறு செயல் நோக்கம் கொண்ட எண்கோணமானபகுதி இங்குண்டு. அங்கே நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், சினிமாக் காட்சிகள், அரசியல்கூட்டங்கள், கருத்தரங்கங்கள்,விவாத மேடைகள்,பட்டிமன்றங்கள், கலந்துரையாடல்கள்,நாடகங்கள்,சினிமாக்கள் நடத்த நவீன வசதிகள் படைத்த அரங்குகள் உள்ளன.

பள்ளி நாடகங்கள், அமெச்சூர் நாடகங்கள், தொழில் நாடகங்கள் இப்படிப்பல்வேறு வகை நிலேயினர் நாடகங்களே நடத்த இட வசதியும், பெட்டிபோன்ற நாடக மேடையும் உண்டு. பெரிய மேடை தேவை எனில், சிறிய பெட்டி போன்ற நாடக மேடையை நகற்றி விட முடியும்.

நூலகத் திறப்பு விழாவுக்குப் பிறகு இளவரசி மார்கரெட் நூலக அதிகாரிகளுடன் உரையாடுகிருர்.

இரட்டைக் கதவுகள், சீன்கள் கட்ட சிறப்புக் கருவிகள் இசைக் கருவிகள் பெரிய பியானோக்கள், வாத்தியக்கருவிகள் ஆகியவற்றை மேடைக்கு நேரே எடுத்து வர வசதிகள் உண்டு.

மணற் பரப்புடன் கூடிய திறந்த வெளி அரங்கிலோ, பழமையான முறையில் நாடக அரங்கு முகப்பு வளைவுக்குப் பின்புறமோ, காட்சிகளை நடத்த வசதிகள் உள்ளன.

தொழில் நாடக மேக்கப் அறைகளை மிஞ்சும் விதத்தில் வசதி படைத்த மேக்கப் அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டு முயற்சி

இன்னின்ன வசதிகள், அமைப்புகள் வேண்டுமென்ற திட்டத்தை நீட்டினர் நூலகர். கட்டடக்கலை நிபுணர்கள், உருவாக்கும் சிற்பிகள் அவற்றைத் திறம்பட, வியக்கும் விதத்தில் நூலகத்தை நவீன முறையில் உருவாக்கி, நூலகரின் கனவை, கற்பனையை, நினைவாக ஆக்கி தந்து விட்டனர். நூலகர் திரு மெக்கால்வின் அவர்களைப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

நூலகரும், கட்டடக்கலைஞர்களும் சரியாக இணைந்து பணியாற்றினால் ஆகாதது ஒன்றுமில்லை. இங்கிலாந்தில் உள்ள மேற்கு நார்வுட் நூலகம், இத்தகைய கூட்டு முயற்சிக்கு வெற்றியாய் அமைந்துள்ளது. இங்கே நூலகக் கட்டடக் கலையில் பல புதுமைகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவே இன்றைக்கு தேவையான நவீன நூலகம் என்ற புகழ்ச்சிக்குப் பாத்திரமாகி விட்டது. இங்கிலாந்து மேற்கு நார்வுட் நூலகம்- அதன் நூலகர் திரு. மெக்கால்வினைப் போற்றுவோம்; பாராட்டுவோம்.

வரி விளம்பரங்கள்

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர் கோயில் வரும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம் மீனாட்சிபுரம், நாகர் கோயில்-1

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

விற்பனைக்குத் தயார்

ரூ 225 பரிசுகள் அடங்கியுள்ள 75 ந. பை. விலையுள்ள, 30·\. கழிவுள்ள, ''பருவ மயக்கம்'' என்ற பெட்டகம் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு கொள்க:

ஐந்திரன், அ. பெ. நெ-37
திருவண்ணாமலை (வ. ஆ.)

தமிழ் இலக்கிய வாசகர் பேரவை

தமிழ் இலக்கிய வாசகர் பேரவையின் மாநில மாநாடு சென்னையில் அக்டோபர் 19 & 20 தேதிகளில மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

விழாவிற்குத் தலைமை வகிக்க விருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் வரமுடியாத காரணத்தினல் திரு. கண. முத்தையா அவர்கள் தலைமையில் 19 ம்தேதி காலை மாநாடு துவங்கியது. 'வாசகர் இயக்கமூலம்எழுத்தாளருக்கு' என்ற தலைப்பில் திரு. அகிலனும், 'வாசகர் இயக்க மூலம் பதிப்பாளருக்கு' என்ற தலைப்பில் திரு. கண. முத்தையா அவர்களும், 'வாசகர் இயக்க மூலம் பத்திரிகைக்கு' என்ற தலைப்பில் திரு. நா. பார்த்தசாரதி அவர்களும், 'வாசகர்இயக்க மூலம் விமர்சனத்துக்கு' என்ற தலைப்பில் திரு. டி. செல்வராஜ் அவர்களும், 'வாசகர் இயக்க மூலம் ரசனைக்கு' என்ற தலைப்பில் திரு. ஜெயகாந்தன் அவர்களும் சிறப்புரையாற்றினர்கள். ஒவ்வொருவர் பேசிய பின்பும் அவர்கள் வாசகர்கள் கேள்விகளுக்குப் பதில் அளித்தது மிக உற்சாகமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

இடைவேளைக்குப்பின் மாநாடு திரு. தி. ஜ. ரங்கநாதன் தலைமையில் நடந்தது. திரு. நாகலிங்கம் படைப்பிலக்கியத் தேர்வு பற்றிய அறிக்கையை வாசித்தார். பின்னர் பூர்வாங்க ஆய்வுக்குப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லுக்குள் ஈரம், மலரும் சருகும், ரிஷிமூலம், தலைமுறைகள், கோணல்கள், தைப்பாவை ஆகியவற்றின் ஆய்வுக் கட்டுரைகளை திரு. சுவாமிநாதனும், திரு. கார்க்கியும் வாசித்தார்கள். திரு. முத்துராமலிங்கம் அவர்களின் கட்டுரை படிக்கப்பட்டது. திரு. வே. சபாநாயகமும் கட்டுரை வாசித்தார். பின்னல் வாசகர்களின் கருத்தறிவதற்கு கேள்வித்தாள்கள் வினியோகிக்கப்பட்டு, தலைவர் முடிவுரை வழங்கினர். மலரும் சருகும், ரிஷிமூலம் ஆகிய நூல்கள் பரிசளிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. அத்துடன்

19ம் தேதி நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மறுநாள் (20-10-69) காலை 10 மணிக்கு ஸ்தாபன அமைப்புக் கூட்டம் தொடங்கியது.. அமைப்பு விதிகளை திரு. சித்திர பாரதி வாசிக்க சில திருத்தங்களுடன் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. நிர்வாகிகள் பொறுப்பேற்றுர்கள். பின்னர் காரியாலோசனைக் கூட்டம் தொடங்கியது. திரு. நா.பார்த்தசாரதி அவர்கள் தலைமை வகித்தார். திரு. சா. நாகலிங்கம் தீர்மானங்களைவாசித்தார். பிரதிநிதிகளின் விவாதங்கள்முடிவடைந்து தீர்மானங்கள் நிறைவேறின.

மாலை பொது மாநாடு திரு. ம. பொ. சிவஞானம் M.L.A. அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் வரவேற்புரையாற்றிஞர்கள். அமைப்பு அறிக்கையை திரு. சா. நாகலிங்கம் வசித்தார். 1965—67ல் தேர்ந்தெடுக்கப்பட்ட "அம்மா வந்தாள்" (தி. ஜானகிராமன்) என்ற நூலுக்குக் கேடயம் அளிக்கப்பட்டது.

திரு. T. புருஷோத்தம் நூலக இயக்கங்கள் வளர்ச்சிபற்றியும், இன்னும் வளருவதற்கு வேண்டிய முறைகள் பற்றியும் சிறப்பான உரையாற்றிஞர். நூலக இயக்க வளர்ச்சிக்கு வாசகர் பேரவையின் யின் அவசியத்தைவலியுறுத்திஞர். திரு. எம். பி. கோவிந்தராஜன் அவர்கள் நூல் இயக்கப் பணி பற்றியும் மேல் நாடு சென்றுவந்த அனுபவம் பற்றியும் உரையாற்றிஞர். திருமதி லக்ஷிமி கிருஷ்ண

VANILAI (*Weather*) by R. C. ELLIS

Adapted and translated into Tamil
by T. R. LAKSHMINARAYANAN
Cr 8vo, 104 pp., with 4 pp. of art plates
In preparation **Rs 2·25**

This Tamil version is a slightly adapted translation of the English edition. It is designed to suit the needs of children in the early standards of high schools.

ASIRIYARUM MANAVARUM

The Teacher and His Pupils
Translated into Tamil
by N. V. MANUEL
from the Indian adaptation of
H. J. BYRNE'S
(The Teacher and His Pupils)
Cr 8vo, 204 pp. **Rs 3·25**

The aim of this book is to give guidance to young teachers on the successful handling of children in class. It is illustrated in a lively way with stick drawings.

OXFORD UNIVERSITY PRESS

மூர்த்தி பதிப்பாளர்கள் நிலைபற்றியும், புத்தகங்கள் வெளியிட்டாலும் வாங்காத காரணத்தினால் தேக்க நிலை ஏற்பட்டு, அதனால் பதிப்பாளர்கள் தங்களின் நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதையும் கூறி, அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்றும், அதற்கு ம. பொ. சி அவர்களின் முயற்சி பலனளிக்கும் என்றும் கூறினார். பதிப்பாளர், எழுத்தாளர் உறவு பற்றியும் அவற்றிற்கு ஆக்கப் பூர்வமான வளர்ச்சியை வாசகர் பேரவை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்கள்.

கடைசியாக திரு. ம. பொ. சி. அவர்கள் பேசினார்கள். 'நூலக இயக்கத்திற்குத் தனி நிறுவனம் (D P.L.) ஏற்படுத்த வேண்டும். தமிழில் உள்ள பழைய புதிய இலக்கியங்களை நல்ல முறையில் ஆய்ந்து புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும்.' Reference புத்தகம் தமிழில் இல்லை என்றும், அது மிக அவசியமானது என்றும் குறிப்பிட்டார். வாசகர் பேரவை நூலக இயக்கத்திற்கும், பதிப்பாளருக்கும், ஆசிரியர்களுக்கும் முக்கிய பாலமாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். "நான் படிக்கும் நல்ல பத்திரிகைகளில் "நூலக"மும் ஒன்று. அது மிகவும் பயனுள்ள பத்திரிகை. 'நூலகம்' போன்ற தரமான பத்திரிகைகள் தமிழில் வெளிவர வேண்டும்" என்றும் கூறினார். தான் நூலக ஆணைக்குழுத் தலைவராக இருந்தபோது ஏற்பட்ட அனுபவத்தைச் சுவைபட எடுத்துக் கூறினார்.

தேசிய கீதத்துடன் மாநாடு சிறப்பாக முடிவுற்றது.

தமிழ் இலக்கிய வாசகர் பேரவையின் (1969–1972) நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கின்றனர்.

தலைவர்: திரு. நா. பார்த்தசாரதி.

உபதலைவர்கள் : திரு. வை. சங்கரன் B. A., B. L.
,, V. M. முத்துராமலிங்கம் M.A. I R.S.
,, சி. கனகசபாபதி M.A.
,, கார்க்கி

பொதுச்செயலாளர் : திரு. கரம்சந்த் N. S. நல்லுசாமி

பகுதிச்செயலாளர்கள் : திரு. சா. நாகலிங்கன்.
,, கோதை பொன்னப்பா
,, நச்சினார்க்கினியன்
,, ஷபீயுல்லா

பொருளாளர் : திரு. இசை. ஜியாவுடீன்

தணிக்கையாளர் : திரு. வே. சபாநாயகம் B Sc., B.T.

செய்திகள்

இரு சந்திப்புகள்

ஆஸ்திரேலியா

வெஸ்டர்ன் ஆஸ்திரேலியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (ஹேமன்ரோடு, சவுத்ஸன்ட்லே, W. A. 6102) தலைமை நூலகர் திரு. ஜி. ஜி. ஆலன் அவர்களை, நூலகர் திரு. பா. பெருமாள் ஹோட்டல் கன்னிமாராவில் சந்தித்தார். (அவர்களின் பேட்டி நூலகத்தில் தனியாக வெளி வரும்)

சென்னை நூலகச் சங்கம் திரு ஆலனை கௌரவிக்க 10-10-69 மாலை 6 மணியளவில் விருந்து ஒன்று நடத்தியது. நூலகங்களில் 'ஆடோமேஷன்' பற்றி திரு ஆலன் உரை நிகழ்த்தினார். திரு. இரா. முத்துக்குமாரசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

ரஷ்யா

சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் ''நூலகம்'', நூலக வட்டம், தமிழ் நாடு நூலகர்கள் சங்கம் ஆகியோரின் சார்பாக ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கன்னிமாராப் பொது நூலகம் தலைமை நூலகர் திரு. வே. தில்லைநாயகம் அவர்கள் தலைமை வகித்தார்.

வைஷ்ணவக் கல்லூரி நூலகர் திரு. பா. பெருமாள் சோவியத் நாட்டிலிருந்து வந்துள்ள பிரதம விருந்தினரான திருமதி ஜி. எஸ். ஆஸ்டா ஷென் கோவாவை வரவேற்றுப் பேசினார். திருமதி ஆஸ்டா ஷென் கோவா மாஸ்கோவிலுள்ள சென்ட்ரல் ஸ்டேட் பாலிடெக்னிக் நூலகத்தின் டெபுடி டைரக்டர் ஆவார்.

சென்னையில் அடையார் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி நூலகத்தையும், சென்னை மத்திய மாவட்ட நூலகத்தையும் கண்டுகளித்தார். திரு. பா. பெருமாள் இங்கு நடைபெறும் நூலகப் பணியை அம்மையாருக்கு விளக்கினார். ''நூலக''த்திற்குப் பேட்டியளித்த அம்மையார் பல சுவையான தகவல்களை அளித்துள்ளார்.

(பேட்டி நூலகத்தில் தனியாக வெளிவரும்.)

நூலக வட்டம்

நூலக வட்டத்தின் மாதாந்திரக் கூட்டம் விசேஷ அழைப்பின் பேரில் ''நூலகம்'' அலுவலகத்தில் 11-10-69 மாலை வெகு விமரிசையாக நடந்தது. திரு கோவி. மணி சேகரன் அவர்கள் ''எழுத்தாளர் எதிர்பார்க்கும் நூலகப் பணி'' பற்றி பல அரிய கருத்துக்களைக் கூறினார்.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வந்திருந்தோரை, தங்களுக்கே உரித்தான விருந்தோம்பல் முறையில் வரவேற்று சிற்றுண்டி வழங்கினார்கள்.

சென்னை கன்னிமாராப் பொது நூலக, நூலகர் திரு தில்லைநாயகம் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். கன்னிமாரா

நூலகத்தில் நூலகக்கல்வி பயின்றுவரும், மாணவர்கள், நூலகர்கள், மற்றையோர் வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

ஓய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

ஓய். எம். சி. ஏ. பட்டி மன்றக் கூட்டம் 23-10-69 வியாழக் கிழமை மாலே 6-30 மணிக்கு, ஓய். எம். சி. ஏ. மண்டபத்தில் சிறப்பாக நடந்தது. திரு அன்புப் பழம் நீ தலைமை வகித்தார். தனிப்பட்டவர்கள் பலர் நூலகங்களை நடத்தியதையும், அவர்கள் பல அரிய நூல்களை அந்நிய நாட்டிற்கு விற்று விட்ட செய்திகளையும் கூறினார். தமிழக அரசு நல்ல நூல்கள் வெளியே சென்று விடாது இருக்க ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தனியார் நூலகங்கள், மறைமலையடிகள் நூலகம் போல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

மறை மலையடிகள் நூலகத்தின் நூலகர் திரு. இரா. முத்துக் குமாரசாமி, M. A. பேசுகையில் ''திருக்குறள் போன்ற சிறப்பு நூலுக்குத் தோன்றியுள்ள எல்லா நூல்களும் மறைமலை அடிகள் நூலகத்தில் சேர்த்துவைக்கப் பட்டுள்ளது'' என்றார். தனியார் நூலகங்கள் எவ்வாறு பணி யாற்றுகின்றன எனவும். அங்கு கிடைக்கும் தனிச் சிறப்புப் பணிகள் பற்றியும் நூலக இயலின் பல்வேறு பிரிவுகள் பற்றியும் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திரு. தில்லைநாயகம் அவர்களும், திரு. பா. பெருமாள் அவர்களும் கலந்துரையாடலில் பெரும் பங்கு கொண்டனர். பல செய்திகளைச் சொல்லி உரையாடி நிறைவு பெறச் செய்தனர்.

கூட்டம் இனிது முடிந்தது.

தி. ஜ. ர.

மணி விழா

9—10—69ல் ''மஞ்சரி'' ஆசிரியர் ஸ்ரீ தி. ஜ. ரங்கநாதன் மணி விழாவில் அவருக்கு ரூ. 10,001 பணமுடிப்பு வழங்கப் பட்டது.

உடல் நலமின்மையால் ஸ்ரீ சா. கணேசன் வர இயலாததால் அவருக்குப் பதிலாக ''கலைமகள்'' ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் தலைமை வகித்துப் பேசினார். தி. ஜ. ர. வயது 69 ஆகிவிட்டதெனக் கூறி, இதை திஜர என்றமணியின் விழா என்று ஸ்ரீ கி. வா. ஜ. வர்ணித்தார். முதியோருக்கும் குழந்தைகளுக்கும் எழுதும் ஆற்றல் பெற்ற எழுத்தாளர் தி. ஜ. ர. என்றார். கதைகள், கட்டுரைகள் மொழி பெயர்ப்பு என பலதுறைகளில் வல்லவராக திகழ்பவர் தி ஜ. ர. என்றார்.

பொற்கிழியை அளித்து, பொன்னாடை சாத்தி,பாராட்டிப் பேசினார் சட்ட மந்திரி ஸ்ரீ எஸ். மாதவன். சமுதாயத்தில் எழுத்தாளர்களுக்கு மதிப்பு ஏற்பட்டுள்ள தருணம் இது. தம் எழுத்தாற்றலால் சமூகத்தைத் தட்டிஎழுப்பிய ஸ்ரீ அண்ணாதுரை முதல்வராக வரமுடிந்ததே தமிழ் எழுத்தாளருக்கு மதிப்பு ஏற்பட்டுள்ளதென்பதற்குச் சான்று. தாம் மாணவராக இருந்த காலத்தில் தி.ஜ.ர. எழுத்து தம்மை கவர்ந்ததென்றார். அவர் தமிழ் எழுத்தாளருக்கு வழி காட்டியாவார். சமூகத்துக்குச் சரியான வழி காட்டுவது எழுத்தாளரின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்றும், இதை தி. ஜ. ர. நிறைவேற்றுவாரென்று

நம்பிக்கை உள்ளதென்றும் கூறி னார்.

துவக்கத்தில் ஸ்ரீ ஏவி. மெய்யப் பன் வரவேற்றார். ஸ்ரீமான்கள் கு. அழகிரிசாமி, அகிலன், ஜெய காந்தன், தமிழ்வாணன், ஸ்ரீமதி வசுமதி ராமசாமி, நா. பார்த்த சாரதி. அழ. வள்ளியப்பா ஆகி யோர் பேசுகையில் எளிய வாழ்க்கை நடத்தி, தமிழ்நடை யில் சிறப்பையெல்லாம் எட்டி யவர் தி. ஜ. ர. என்று பாராட் டினார்கள்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் ரூ. 101 பணமுடிப்பு அளித்தது. மயிலாப்பூர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் விழா நடந்தது.

கன்னிமாராப் பொது நூலகம்

1969 செப்டம்பர் மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத் தில் 55 புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்த அங்கத்தினர் தொகை 7476 க்கு உயர்ந்துள்ளது. 12,501 வாசகர்கள் 48054 நூற் களைப் பயன் படுத்தியுள்ளனர். 10,551 நூற்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனு மதிக்கப்பட்டன.

அத்துனைலக அறிவியக்க நாள் விழா

சோலூர் (நீலகிரி)

சோலூர் கிளை நூலகத்தில் 8-9-69ல் 'அனைத்துலக அறிவி யக்க நாள் விழா' ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கி. சந்திரன் தலைமையில் கொண்டாடப்பட் டது. பல அறிஞர்கள் சொற் பொழி வாற்றினர். துணை நூலகர் கி. ஆலன் நன்றி நவின்றார்.

திருக்காட்டுப் பள்ளி

திருக்காட்டுப் பள்ளி கிளை நூலகத்தில் 8-9-69 மாலையில் ''சர்வதேச எழுத்தறிவு நாள்'' கொண்டாடப்பட்டது. திரு. அ. இராமசாமி அவர்கள் தலை மையில் திரு, தங்கவேலன், திரு. மருதையன் ஆகியோரின் சொற் பொழிவு நிகழ்ந்தது. கிளை நூல கர் திரு. பா. இராமசாமி நன்றி கூறினர்.

காசி பாளையம் (கோவை)

காசிபாளையம் கிளை நூலகத்தில் 8-9-69 ல் 'சர்வதேச எழுத்தறிவு நாள்' கொண்டாடப்பட்டது. திரு. கே. பி. முருகனன் B. A. தலைமையில் திரு. ப. சண்முகம், திரு. K. P. சிரப்பன் ஆகி யோர் சொற் பொழிவு நிகழ்த் தினர். நூலக உதவியாளர் திரு. K. A. கொளந்தான் நன்றி கூறினர்,

அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா

திருக்காட்டுப் பள்ளி

திருக்காட்டுப் பள்ளி கிளை நூல கத்தில் 2-10-69 ல் தேசப்பிதா காந்தியடிகளின் 100-வது ஆண்டு விழா கொண்டாடப் பட்டது. அன்றுருக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் 'தேசீய ஒருமைப்பாடு உறுதி மொழி'' எடுத்துக் கொள்ளப்பட்டது. 4-10-69 முதல் நூலகத்திற்கு வரும் வாசகர்களிடம் ''தேசீய ஒருமைப்பாடு உறுதி மொழி''ப் பதிவேட்டில் கையெழுத்து வாங் கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இலக்கிய வாசகர் பேரவை

தேர்ந்தெடுத்துள்ள

1967 – 1969 ஆண்டுகளில்

சிறந்த இலக்கியப் படைப்புகள்

1. ரிஷிமூலம்
   ஜெயகாந்தன்
2. தலைமுறைகள்
   நீலபத்மநாபன்
3. மலரும் சருகும்
   டி. செல்வராஜ்
4. கல்லுக்குள் ஈரம்
   ரா. சு. நல்லபெருமாள்
5. கோணல்கள்
   நா. கிருஷ்ணமூர்த்தி (தொகுப்பு)
6. தைப்பாவை
   கண்ணதாசன்

சிறந்த இந்நூல்களின் ஆசிரியர்களையும், இவற்றை வெளியிட்ட பதிப்பாளர்களையும் ''வாசகர் வட்டம்'' பாராட்டுகிறது. இவர்களைப் பாராட்டும் வகையில், பொது மக்கள் இந்நூல்களை ஏராளமாக வாங்கி ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

இந்த ஆறு நூல்கள் வேண்டுவோர்
எம் புத்தகப் பணிப் பிரிவுக்கு எழுதிப் பெறலாம்

வாசகர் வட்டம்

14, தணிகாசலம் செட்டி ரோடு,
தி. நகர், சென்னை-17.

புத்தக விமரிசனம்

பத்தினிப் பாவை

திரு. எம். விஸ்வநாதனின் 'பத்தினிப் பாவை' ஒரு சுவாரஸ்யமான புத்தகம். பதிப்புரையில் 'ஆங்கில நவீனங்களில் ''சஸ்பென்ஸ்'' என்று கூறுவார்களே, அத்தகைய சஸ்பென்சுகளைக் கொண்டு இயற்றப் பட்டதே ''பத்தினிப் பாவை'' என்னும் இக் குறு நாவல்' என்று கூறப் பட்டுள்ளது.

ரவி, பரிமளா என்னும் காதலர்கள் பல இன்னல்களுக்கிடையே உட்பட்டு இறுதியில் கூடுகின்றனர். இவ்விருவர் ஒன்று கூடுமுன் பல கதாபாத்திரங்கள் தோன்றுகின்றனர். முக்கியமாக பரிமளாவின் சிற்றப்பா அந்தரங்கமும், விநோதனும். எடுத்ததும் படித்து முடித்து விடக் கூடிய வகையில் சுவையாக எழுதியுள்ளார் திரு. எம் விஸ்வநாதன்.

பத்தினிப் பாவை, ஆசிரியர் எம். விஸ்வநாதன், பத்மஜோதி பிரசுராலயம், 53, 56 பவழக்காரத் தெரு, சென்னை. பக்கங்கள், 174, விலை ரூ. 3, 50

சபாஷ்! பார்வதி!

திரு. எஸ். வி. வி. யின் ஹாஸ்யம் பற்றி இரு அபிப்ராயங்கள் கிடையாது. நகைச் சுவையைக் கையாண்டு அதை சுவை படப் படிப்பவர்களுக்கு அளிப்பது அவர் தனித்வம். இதை உணருவதற்கு 'சபாஷ்! பார்வதி!' படித்தால் நல்லது.

'சபாஷ்! பார்வதி!' புத்தகத்தில் மூன்று கதைகள் அடங்கியுள்ளன. முக்கிய கதை தவிர 'கைமேல் பலன்' என்னும் கதையும், 'ஸரோஜா' என்னும் கதையும் அடங்கியுள்ளன. மூன்று கதைகளும் சுவையான நடையில் அழகாக நல்ல முடிவோடு அமைந்துள்ளது.

சபாஷ்! பார்வதி!, எஸ் வி. வி. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை,- 4, 106 பக்கங்கள். விலை ரூ 2,

—ராம்

எங்கே நிம்மதி!

தோழர் பி. எல். ராஜேந்திரன் எழுதிய 'எங்கே நிம்மதி?' என்ற நாவலில் ஒரு நாவலுக்குரிய முழு குணும்சமும் சுாணப்படவில்லை. ஒரு வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது போன்ற நிறைவுதான் ஏற்படுகிறது. அவருடைய சரளமான எழுத்து நடை சிறப்பாக அமைந்துள்ளது. வாழ்க்கையில் அபூர்வமாகக் காணப்படும் ஒரு சிலரைப் பாத்திரங்களாகக் கொண்டு அமைக்கப்படும் நாவல்கள் இன்றைய தமிழகத்தின் பெருவாரியான பிரச்சினைகளின் எதிரொலியாக இருக்கமுடியாது. எழுத்தாற்றல் மிகுந்த ராஜேந்திரன் போன்றவர்கள் இன்றையப் பிரச்சினைகளின் கருவை மையமாக வைத்து நாவல்கள் படைத்தால் பொது மக்கள் சிறப்பான வரவேற்பளிப்பார்கள் என்பது திண்ணம்,

அவருடைய எதிர்காலமும் இலக்கிய உலகில் உன்னத நிலையை அடையும்.

ஆசிரியர் ; பி. எல். ராஜேந்திரன், வெளியீடு : பூங்கொடிப் பதிப்பகம், 30, முண்டகக் கண்ணி அம்மன் கோவில் தெரு, சென்னை 4. பக்கங்கள் 196. விலை ரூ. 4.

—க. நாராயணன்

மணிவண்ணன் கவிதைகள்

முழுமையாகவும், முறையாகவும் தமிழ் கற்று, தமிழ் மரபறிந்து எதையும் கவிதைச் சுவையோடு சொல்லவும் எழுதவும் வல்லவரான திரு. நா. பா. வின் கவிதைகளை நெடுநாட்களாக எதிர்பார்த்தவர்களுக்கு இத் தொகுப்பு நிறைவு தருமா என்பது சந்தேகமே. நூல்முழுதும் தேடிப் பார்த்தாலும் (நூலின் பக்க அளவோடு ஒப்பிடும்போது) பாட்டுச்சுவை பற்றுக் குறையாகவே இருக்கிறது. அவரின் வசனத்தில் இயல்பாகவும் இனிமையாகவும் வந்துவிழுகின்ற கவித்துவத்தைக்கூட அவரின் கவிதைகளிற் காணமுடியவில்லை. அவரிடம் அதிகம் எதிர்பார்த்தவர்களுக்கு இதுவே ஒரு பெரிய ஏமாற்றம் தானே!

யாப்பமைதியைப் பொறுத்த மட்டில் அவர் பழைய மரபைப் பின்பற்றுகிறாரா அல்லது 'புதுக் கவிதை' என்று சொல்லப்படும் 'தந்திபாஷையைத் தழுவிச் செல்கிறாரா என்பதும் விளங்கவில்லை. (அன்னபூரணி என்னும் கவிதை அறுசீர் விருத்தயாப்பிலே தொடங்கி மூன்றாம் வரி முதல் முன்னதற்கு மாறான வடிவம் பெற்று விடுகிறது. இதைப் போல இன்னும் சில......) பல கவிதைகளில் புதிதாக எழுதப் புகும் கவிஞனைப் போல சொற்களை ஒரு கட்டுக் கோப்புக்குள் நிறுத்தாது தட்டுத் தடுமாற வைக்கிறார். சொற்கள், படிக்கும் போது ஒழுகிய ஓசை ஒருமைப்பாடு கொள்ளாமல் பாட்டமைப்பில் திக்கித் திணறுகின்றன. எழில், அலைபாயும், சிறுமனமே, விடிவு, எரிந்தேன், தாயின் ஏக்கம், வரவு என்னும் சில கவிதைகள் தவிர ஏனைய வெல்லாம் இதற்கு உதாரணங்களே.

மேற்காட்டிய எழில் முதலாக உள்ள ஏழு கவிதைகளும்தாம் உயிரோட்டமும், உணர்ச்சி பாவமும் நிறைந்ததாக உள்ளன.

நிலவைப்பிடித்துச் சிலகறைகள்
 துடைத்துக் குறு
முறுவல் பதித்தமுகம்

என்று தொடங்கும் 'எழிற் கவிதை'யை எத்தனைமுறை வேண்டுமானாலும் படிக்கலாம்.

எண்ணத்தறியிற் சிறுநினைவு
 இழையோட இழையோட
முன்னுக்குப் பின் முரணாய்
 முற்றும் கற்பனையாய்ப்
பன்னும் பகற்கனவாய்ப்
 பாழாய்ப் பழம்பொய்யாய்
என்னென்ன நினைக்கின்றாய்
 ஏழைச் சிறுமனமே!

என்னும் கவிதை பட்டினத்தடிகளின் பாடல் ஒன்றைப் படிப்பதைப்போல மனத்துக்கு இதமாக இருக்கிறது.

இந்தக் கவிதைகளுக்காகவும், தமிழ் எழுத்துலகில் தனக்கெனத் தனியிடம் பெற்றுள்ள நா. பா. அவர்கள், தம் கவிதைப் படைப்பைப் பொறுத்தமட்டில் பெற்

றுள்ள வெற்றி தோல்விகளைக் கணிப்பதற்காகவும் தமிழ் வாசகர்கள் இந்நூலைக் கட்டாயம் வாங்கிப் படிக்கவேண்டும்.

ஆசிரியர், நா. பார்த்தசாரதி பக்கம் 160, விலை. ரூபாய்மூன்று. வெளியிட்டோர்: நவபாரதி பிரசுரம் 23\442 சுக்கிர வாரப் பேட்டை, கோவை-1

—மலர்மார்பன்

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

(நாடகம்)

தமிழில் நல்ல நாடகம் இல்லை. படிப்பதற்கும் நாடகம் இல்லை; நடிப்பதற்கும் நாடகம் இல்லை. சிறுகதை, நாவல் வளர்ச்சி பெற்றிருக்கும் அளவிற்குக் கூட நாடகம் வளர்ச்சியுறவில்லை. சபாக்கள் நாடகம் என்ற பெயரில் கதாகாலட்சேபம், சமூக விமர்சனம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைகளோ நாடகத்தின் பக்கமே போவதில்லை. இந்த நிலையில் தனியாகத்தான் நாடக நூல்கள் வெளிவரவேண்டியிருக்கின்றன. அப்படி வந்திருப்பது தான் வேலூர் வேலவனின் ''நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்'' நாடகம். இது ஒரு சமூக நாடகம்; காதல் நாடகம். பல ஜோடிகள் காதலிக்கின்றன; நிறையக் காதலிக்கின்றன. காதல் பல காரணங்களால் நிறைவேறுமல் போய் விடுகிறது. காதல்—தியாகம் என்ற அம்சத்தின் மீது ஆதாரப் பட்டிருக்கும் நாடகம் வலுவான கதை இல்லாதபடியால் தொய்ந்து போய் விடுகிறது. கதாபாத்திரங்கள் இயற்கையாக இல்லாமலும்,— சம்பவங்கள் செட்டாகச் சொல்லப் படாமலும், உணர்ச்சி பூர்வமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அன்பின் வடிவு என்கிற பாத்திரம் பிற்பகுதியில் தான் சோபிக்கிருள். அவள் சோபிக்கும் போது திடீரென்று வாழ்க்கைமுடிவடைகிறது. சாவு பிரச்னைக்கு ஒரு தீர்வா? தியாகராஜன் சாவு எதைத் தீர்க்கிறது? நாடகத்தைப் படித்து முடித்ததும் அது தெரியவில்லை.

சுமாராக உருவாகியிருக்கும் இந்நாடகத்தை அனைவரும் படிக்கலாம். நூலகங்கள் வாங்கி வைக்கலாம். அதுவே தமிழ் நாடகங்களுக்கு அவர்கள் செய்யும் பெரிய சேவை.

ஆசிரியர்: வேலூர் வேலவன். வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. விலை: ரூ. 3-75 பக்கம்: 196.

—எஸ். கே.

கொந்தளிக்கும் பாசம்

பத்திரிகைகளில் வெளியாகும் கதைகள் புத்தகமாக உடனே வந்து விடுகின்றன. இப்படிப் பல பத்திரிகைகளில் வெளி வந்த ஆர். பி. மல்லாரியின் சிறு கதைகளை 'கொந்தளிக்கும் பாசம்' என்ற தலைப்பில் அல்லயன்ஸ் கம்பெனி இப்பொழுது வெளியிட்டிருக்கிறது. இத்தொகுப்பில் மொத்தம் பதிமூன்று சிறு கதைகள் உள்ளன. அவைகளில் முதல்கதைதான் தலைப்புச் சிறு கதை. ஒரு சோகமான கதை; ரொம்ப சோகமான கதை. கஷ்டங்கள் கடலாய் பொங்கி, சமுத்திரமாய் மாறி ஏழையை வதைக்கும் கதை 'கொந்தளிக்கும் பாசம்'. ரிக்ஷாக்காரன் மகள் ஆப்பிளுக்கு ஆசைப்படுவதும், அது கிடைக்காமல் போவதும் தான் கதை. கதையைப் படிக்

கும் போது இன்னும் செட்டாகச் சொல்லியிருக்கலாம் என்று படுகிறது. சட்டைப் பையிலிருந்த காகிதத் துண்டு—ஒரு திருடனின் நல்ல குணத்தை-பிறருக்கு உதவும் தன்மையைச் சொல்லும் கதை. கொஞ்சம் அதீத கற்பனையுடன் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஷ்யூமி!' — அந்தமான் பிரதேசக் கதை. நிறைவேறாத காதலை—தூய்மையான காதலைச் சொல்வது. அந்தமான் தேச சரித்திரத்துடன், அடக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தொகுப்பில் உள்ள பல சிறுகதைகளில் தகுதிக்கு மீறிய சிந்தனைச் செறிவும்—ஆசிரியரின் கருணையும்—நீதியும் நிறைந்து, படிப்போரை சலிப்படையச் செய்கின்றன. இந்தக் குறைகளைத் தள்ளி, பொழுது போகாத நேரத்தில் அனைவரும் இந்தப் புத்தகத்தை சுகமாக வாசிக்கலாம்.

ஆசிரியர்: ஆர். பி. மல்லாரி
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி சென்னை-4. விலை: ரூ. 2-00
பக்கம்: 126.

—கந்தன்

இயக்கம்

(சோஷலிச சிந்தனை நூல்)

கு. காமராஜ், ஈ. வி. கே. சம்பத்-இவர்களின் வாழ்த்துரை, மதிப்புரைகளுடன் வந்திருக்கும் நூல் 'இயக்கம்'. ஆனால் இது ஒரு தத்துவப் புத்தகமல்ல; கொள்கை விளக்கமல்ல. சாதாரணமாக மேடை தோறும் முழங்கும் பேச்சுக்களை பகவதி பாண்டியன் கவிதை மாதிரியும்—உரை நடை மாதிரியும் எழுதியிருக்கிறார். சொற்கள் கம்பீரமாகவும். சிறப்பாகவும் இருக்கின்றன. இதோ சில மாதிரிகள்:

அழ வேண்டியவற்றுக்கு
அழுதுதீர்த்து விடுவோம்!
சிரிக்க வேண்டியவற்றுக்கு
சிரிக்க முயலுவோம்!
ஓய்வில்லாத இடத்தில்
சிந்தனை இல்லை!
சிந்தனை இல்லாத
இடத்தில் சிறப்புமில்லை!

இயக்கத்தில் நிறைய ஆச்சரியக்குறிகள். கவிதை அழகு மிகுந்த வரிகளை விரும்புவோர் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டியது 'இயக்கம்'.

ஆசிரியர்: த. பகவதி பாண்டியன்
வெளியீடு: வள்ளுவம் வெளியீடு. 28, நெல்லையப்பர் தெரு, பாரதிபுரம், சென்னை-44.
விலை: ரூ. 2- பக்கம்: 96.

சா. சாமி.

1969 டிசம்பர் இதழில்

தமிழகத்தில் தோன்றி, இந்திய நூலக இயக்கத் தந்தையாக உயர்ந்து, உலக நூலக அறிஞர்களால் போற்றப்பட்டு வரும் பேரறிஞர் **டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்** அவர்களின் 'வாழ்வும் பணியும்' பற்றி மறைமலை அடிகள் நூலகத்தின் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி M.A எழுதுகிறார்.

நிழலின் கற்பு

'நிழலின் கற்பு' ஒரு சிறுகதைத் தொகுப்பு. ஆறு சிறு கதைகள் உள்ளன. எல்லாம் ஏற்கனவே பிரபல பத்திரிகைகளில் வெளி

வந்தவை. பத்திரிகைகளுக்கு எழுதப்பட்டதால்தானே என்னவோ சிறுகதைகள் ஓர் உருவம் பெறுமல் நிரம்பி வழிகின்றன. ஒரு நாவலுக்கான விஷயம் எட்டுப் பக்கங்களில்—பத்துப் பக்கங்களில் திணிக்கப் பட்டிருக்கிறது என்ற நினைப்பு உண்டாகிறது.

ஜெகசிற்பியனுக்குக் கோபம்; புதுமைப் பித்தனிடம் கோபம்; பணக்காரர்களிடம் கோபம்; நாகரிகமாக வாழ்கின்றவர்களிடம் கோபம். இந்தக் கோபத்தைத் தீர்த்துக் கொள்ளக் கதைகள் எழுதியிருக்கிறுர். அவைகளில் ஒன்று ''இது பொன்னகரம் அல்ல''. புதுமைப் பித்தனுக்கு மறுப்புக்கதை. வெறும் மறுப்புக் கதையாகவே இருக்கிறது (புதுமைப் பித்தனின் 'பொன்னகரமும் அப்படியொன்றும் பிரமாதமான கதையல்லதான்) ரொம்பவும் தொய்ந்து போய்கிற கதை, சுற்றி வளைத்து, பச்சாதாப உணர்ச்சி பெருக எழுதப் பட்டிருக்கிறது. கோபம் நீத்துப் போகிறது. ஆத்மாவைக் காப்பாற்றிக் கொண்டவனுல் மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை.

மனைவியை கோவிலுக்கு அனுப்பிவிட்டு, இன்னொரு பெண்ணோடு சோரம் போவது 'நிழலின் கற்பு'. ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்-என்பது ஒரு வீட்டில் மனைவியும் இன்னொரு வீட்டில் கணவனும் சோரம் போவது (தனித்தனி குடும்பம்) கதை, வெறும் நிகழ்ச்சி. ரொம்ப சாதாரணமாக தொடுக்கப்பட்டிருக்கிறது. சோரம் போவதைச் சொல்வது தவறு அல்ல. ஆனுல் இது மட்டும் தான் கலையா? வாழ்க்கையா?

ஆசிரியர்: ஜெகசிற்பியன்
வெளியீடு: வானதி பதிப்பகம், சென்னை-17. விலை: ரூ. 3-
பக்கம்: 158.

—'கேயெஸ்'

வீணையடி நீ எனக்கு

பல வருடங்களுக்கு முன்னுல் ஒரு வாரப் பத்திரிகையில் வெளியான தொடர்கதை 'வீணையடி நீ எனக்கு'. இதன் ஆசிரியர் காலஞ்சென்ற கி. ரா. கோபாலன். உயிரோடு இருக்கிற எழுத்தாளர்களின் கதைகளே அச்சாகாமல் இருக்கும் நேரத்தில் காலஞ்சென்ற எழுத்தாளரின் கதையைத் தேடிப் பிடித்து வெளியிட்டிருக்கும் கலைஞன் பதிப்பகத்தாரை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

'வீணையடி நீ எனக்கு' கதை ரொம்ப சாதாரணமானது, நேரானது; எளியது. சுற்றி வளைக்காமல் அனுவசியமாக வார்த்தை ஜாலம் ஏதும் செய்யாமல் கி. ரா. கோபாலன் சொல்லியிருக்கிறுர். ஒரு தாசி குலத்தின் கதை — 'வீணையடி நீ எனக்கு'. ஆனுல் அதன் பிரச்னைகள் அல்ல கதை. தாசி குலத்தில் பிறந்த கனகம்—அம்புஜத்தின் குணப் போக்கு—அதன் விளைவாக ஏற்படும் மனத்தாங்கல்—கஷ்டங்கள் — தலைமறைவு — கஷ்ட நிவர்த்தி—சுகம். இப்படித்தான் நாவல் முடிகிறது. கடைசியில் கொஞ்சம் அவசர அவசரமாக நாவலை முடித்தது போலத் தெரிகிறது. ஆனுல் ஒரே இழையில்—மிகவும் செட்டாக ஆசிரியர் நாவலை எழுதியிருக்கிறுர்.

ஆசிரியர்: கி. ரா. கோபாலன்.
வெளியீடு: கலைஞன் பதிப்பகம்,

சென்னை-17. விலை: ரூ. 4-
பக்கம்: 208.

—எஸ் கே. சாமி.

சங்கு சுட்டாலும்

சமூகத்தின் சட்ட திட்டங்கள், பத்தாம் பசலி நம்பிக்கைகள், கொள்கைகள் எல்லாம் கடந்த 25, 30 ஆண்டுகளில் உடைத் தெரியப்பட்டு ஒரு புதிய சமுதாயம் நம்மிடையே உருவாகி வருகிறது. இப்பாதிப்பு நகரங் களில் மட்டுமல்லாது குக்கிராம மான கோட்டையூரையும் ஊடுருவி, அதன் முக்ய குடும்பஸ் தர்களின் வாழ்க்கையையும் எப்படிப் பந்தாடுகின்றது என் பதே இந் நூலின் கதை.

எளிய நடையில், யாவரும் படித்துக்களிக்கும்வண்ணம்இதை ஆசிரியர் எழுதியிருக்கிறார். ஜன ரஞ்சகமான இந்நூலை வாசகர்கள் அதுவும் பெண் வாசகர்கள் வரவேற்பார்கள்.

ஆரம்பத்தில் காணும் அச்சுப் பிழைகளை சிறிது கவனம் செலுத்தியிருந்தால் தவிர்த்திருக் கலாம்.

ஆசிரியர்: க. நாராயணன் விலை ரூ. 4-50. செப் '69. வெளியிட்டோர்: தமிழ்பண்ணை சென்னை-17, புதினம். பக்கங் கள் 232

இளைய ஜெர்மனியில் இருபது நாட்கள்

ஆசிரியரே முகவுரையில் கூறு வது போல் 'மேலெழுந்தவாரி யாக ஜெர்மன் ஜனநாயகக் குடி யரசைப்பற்றித்தெரிந்துகொள்ள உதவுகிறது இப்பிரயாண நூல். புள்ளி விவரங்களைப் போட்டுக் குழப்பவில்லை என்ற பூர்வபீடிகை

நூலக உயில்

சமீபத்திவ் காலஞ்சென்ற நீதி பதி B.S. சோமசுந்தரம் அவர் களின் உயலில், தனது வீட்டி லுள்ள சொந்த நூலகத்தை தமிழ்க் கவிஞரும், மத்திய காவல் துறை அலுவலருமான திரு. S. பக்கிரிசாமி அவர்களுக்கு உரிமை யாக்கியிருக்கிறார். சுமார் ரூ. 5000 மதிப்புள்ள அந்த நூல் களில் பல, இன்று கிடைத்தற் கரியவை என்பது குறிப்பிடத் தக்கது.

யுடன் ஆரம்பித்து, முடிவில் முக்யமான தகவல்களைத் தரத் தவறவில்லை.

இருபது நாட்களில் ஒரு நாட்டைச் சுற்றிப்பார்க்கலாம், அதன் மக்களை அறிய இன்னும் அவகாசம் தேவை. அதனால்தான் ஆசிரியர் அது குறித்து ஒன்றும் எழுதவில்லை போலும்.

சென்ற யுத்தத்தில் பாழடைந்த தங்கள் நாட்டை, மீண்டும் அவர்கள் உருவாக்கி யிருப்பதை ஆசிரியருடன் நாமும் பாராட்ட விழைகிறோம். ஆனால் இறுதியில் எல்லாத்துறைகளிலும் ஒரு பரிபூரண சுதந்திர நாடாக ஜி. டி. ஆர் இயங்கி வருகிறது என்ற அவர் கூற்றை நம்மால் எளிதில் ஜீரணிக்க முடியவில்லை. அழைத்து விருந்தளித்தவரிடம் ஆசிரியருக்கு தாட்சண்யம் ஏற் படுவது இயற்கையே.

நல்ல காகிதத்தில் அச்சுப்பிழை ஏதுமின்றி, பல வரை படங்களு டன் அமைந்திருக்கிறது இந்நூல். அத்யாய எண்ணைத்தாங்கி வரும்,

ஓவியங்கள் கவர்ச்சியாக இருக்கின்றன. படங்களுக்கு தலைப்பு இல்லாதது ஒரு குறையே.

பிரயாண நூல்கள் வெகுகுறைவாக உள்ள நம் மொழியில், இம்மாதிரி முயற்சிகள் வரவேற்கத் தக்கவை. எல்லா பொது நூலகங்களிலும் இடம் பெற வேண்டியது இந்நூல்.

ஆசிரியர்: எஸ். சங்கரன் வெளியிட்டோர்: மல்லிகைப் பதிப்பகம். தியாகராய நகர், சென்னை-17. பக்கம்: 126 படங்களுடன் (விலை. 3/-)

—ல.கி.

வைரமூக்குத்தி

அகவல் நடையில் அமைந்த மூன்றும் நாடகம் தவிர நான்கு கவிதை நாடகங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

முதல் நாடகம், வைரமூக்குத்தி போடவில்லை என்பதற்காகத் திருமணம் முடிந்ததும் பெண்ணை அழைத்துச் செல்ல மறுக்கும் பிள்ளை வீட்டார் கொடுமையைப் புலப்படுத்துகிறது. 'இன்பப் பெருவாழ்வு' எங்கே என்பதை இரண்டாம் நாடகம் எடுத்துக் காட்டுகிறது. களவு வாழ்க்கையில் ஒருவர்க்கொருவர் உயிர்க்குயிராய்க் கலந்து பழகிய காதலர்க்கே நாடறிய நன்மணம் நடத்திவைக்க வேண்டும் என்னும் கருத்தை மையமாகக் கொண்டது மூன்றும் நாடகம். அலைகடலுக் கப்பாலும் தமிழர்கள் உறவு கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட இராசராச சோழனின் கலையுணர்ச்சியின் அடிப்படையில் அமைந்தது நான்காவது நாடகம்.

நாடகப் பாத்திரங்களின் உணர்ச்சிக்கும் உரையாடலுக்கும் உருவம் (Form) கொடுக்கவேண்டும். அதாவது பல்வேறு யாப்புகளைப் பயன்படுத்திப் பாடவேண்டும். நாடகக் கூறுகள் அமைந்த கம்பன் காவியத்திலும், பாரதியின் பாஞ்சாலி சபதத்திலும், அவர் தாசனின் புரட்சிக் கவியிலும் இந்த வடிவ மாற்றத்தை நாம் காணலாம். இவையெல்லாம் நாடகங்கள் அல்ல. எனினும் அவர்கள் இக்காவியங்களில் நாடகக் கூறுகளைக் கலந்து தந்திருக்கிறார்கள். எனவே முழுக்க முழுக்க நாடகம் என்று சொல்லிக் கொள்ளும் இன்றைய கவிஞர்களின் படைப்பில்—முழுமையான நாடக அம்சங்களை நாம் எதிர்பார்த்தால் அது தவறாகாதல்லவா?

ஆசிரியர்: ஆலந்தூர் மோகன ரங்கன், பக்கம் 76. விலை 1-50 வெளியிட்டோர்: வசந்தா பதிப்பகம், 605, முத்துக்குமாரசாமி சாலை, ஆலந்தூர்-சென்னை-16.

—சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன்.

MAN: King of Mind, Body & Circumstance

This short work of 7 chapters falls into the category of "inspirational literature". The author is a practical idealist and his writing is characterised by a forceful and epigrammatic style. Currently popular concepts like "positive thinking" and "psychosomatic medicine" are anticipated in this book written two generations ago. Well

printed and durably bound, it will be useful for libraries having Philosophy or Religion sections.

(James Allen) SISSWPS, 1968. 69 pp. Rs. 2-50

MORNING AND EVENING THOUGHTS

This is a book of Meditations, two for each day of the month. The thoughts are universal in appeal and expressed with vigour and sincerity. The relevance of the Kural couplets to the meditations is not apparent, nor do the Kural translation do justice to the original. A prose version in modern English would have been preferable. Paper, printing and binding are excellent. Not for the library market, but for individuals of a reflective bent.

(James Allen) SISSWPS, 1968. 63 pp. Rs. 2-50

— K. K.

பரிசளிக்கவும்! படித்துமகிழவும்! பரிசு பெறவும்!

விழாச்செலவில் ஒருபங்கினைப்
புத்தகம் வாங்குவதற்குப் பயன்படுத்துங்கள்
நித்தம் மகிழ்வளிக்கும் இனிய தமிழ் நூல்களைப்
படித்து மகிழ்ச்சி அடையுங்கள்

நிலவைச் சுற்றிய கதை	*2–25*	சர்க்கஸ்–என். கே. வேலன்	2–75
பூமிக்குள் பயணம்	*3-50*	உயிர்க்காட்சிசாலை	1–25
இளைஞர் தொலைக்காட்சி (Television for young)	*2–00*	நேரு மாமா–மா. ஷண்முக *சுப்ரமணியம்*	1–75
இளைஞர் வானொலி (Radio for young)	*1–50*	அமெரிக்கக் காந்தி	3–00

மனிதன் நிலவில் உலவ வழிகாட்டிய சிந்தனைச் சிற்பி ஜூல்ஸ் வெர்ன் (Jules Verne) எழுதிய "எண் திசையும் சுற்றிவர எண்பது நாள் (Around the world in Eighty Days)–விலை ரூ. 6–75.

விலைப்பட்டியலுக்கு எழுதுக:

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

சென்னை–1 மதுரை–1 திருநெல்வேலி–6

புதிய புத்தகங்கள்

680. பாரதியாரின் தம்பி 0-, 1w K9

(பரலி சு. நெல்லையப்பரின் வாழ்க்கைச் சித்திரம்) ஆசிரியர் : திருவாரூர் சு. விசுவநாதன், வெளியீடு : வானதி பதிப்பகம். தி. நகர், சென்னை-17. 1969. பக்கம் : 80 விலை : ரூ. 1-50 வகை : வாழ்க்கை வரலாறு

681. இளைய ஜெர்மனியில் இருபது நாட்கள் U8·55‘ N6 -K9

ஆசிரியர் : எஸ். சங்கரன். வெளியீடு : மல்லிகை பதிப்பகம், தி. நகர். சென்னை-17. செப்டம்பர் 1969. பக்கம் : 126 விலை: ரூ. 3-00. வகை : பிரயாண நூல்

682. மணிவண்ணன் கவிதைகள் O-, 1N32x K9

ஆசிரியர்: மணிவண்ணன் (நா. பார்த்தசாரதி) வெளியீடு: நவ பாரதி பிரசுரம், 23/442 சுக்கிரவாரப் பேட்டை, கோயம்புத் தூர், ஆகஸ்டு, 1969. பக்கம் : 160. விலை: ரூ. 3-00 வகை : கவிதைத் தொகுப்பு.

683. தமிழர் வளர்த்த ஆடல் NS -K9

ஆசிரியர்: கார்த்திகா கணேசர். வெளியீடு: தமிழ்ப்புத்தகாலயம் 576. பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. செப்டம்பர், 1969. பக்கம் : 104. விலை: ரூ. 2-00. வகை: நுண்கலை—ஆடல்கலை.

684. மகாத்மாவைத் தேடி 0-, 3N32,M K9

ஆசிரியர்: நா. பார்த்தசாரதி. வெளியீடு: தமிழ்ப்புத்தகாலயம், 576. பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. ஆகஸ்டு 1969 பக்கம்: 176. விலை : ரூ. 3-25. வகை : காந்தீய குறுநாவல்கள்.

685. ஒன்றுமில்லா அமளி OIII, 2J64,MU -K9

ஆசிரியர் : சு. கணேசமூர்த்தி. வெளியீடு : ஸ்டார் பிரசுரம், 66, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. மே, 1969. பக்கம்: 140. விலை : ரூ. 3-00. வகை : நாடகம்.

Edited by : KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers " Bibliopole "
14, Thanikachalam Chetty Road: Madras-17.